KALKI
2.12.84
ரூ.1.50

மணியான வாரிசு



கல்கி



கமல் பதில்கள்

1. பொன் ராஜ்குமார், கமுதி

எத்தனையோ மசாலாப் படங்கள்தான் தமிழில் வருகின்றனவே தவிர ஒரு விஞ்ஞான ரீதியான ஸயன்ஸ் ஃபிக்ஷன் படமோ, இயற்கைச் சூழ்நிலை உள்ள படமோ தமிழில் வராததற்குக் காரணம் என்ன?

இந்த மசாலாப் படங்களைப் பத்தினவரை என்னால ஒத்துக்க முடியுது — நிறைய வந்திருக்கு. ஆனா இயற்கைச் சூழ்நிலை வரவேண்டிறபோது நீங்க எதைக் குறிப்பிடறீங்கன்னு என்னால புரிஞ்சுக்க முடியலே. என்னா ஒரு ஜெயகாந்தன் காலத்துல இருந்து வந்த சில படங்களும் இயற்கைச் சூழ்நிலை வந்த படங்கள்னுதான் சொல்லணும். அதுக்கப்புறம் அவர் எழுத்துல வந்த படங்களும், அவர் எழுத்துல மத்தவங்க இயக்கி வெளிவந்த படங்களும் சரி, இயற்கைச் சூழ்நிலை நிறைந்த படங்கள்னுதான் சொல்லணும். இன்னும் சமீப காலத்துல வந்தோம்னா பாரதிராஜாவோட முதல் படமான 'பதினாறு வயதினிலே' என்னைப் பொறுத்தவரை பூரா இயற்கைச் சூழ்நிலையான படமா எடுக்க முடியாட்டாலும்— அது டாக்குமெண்டரிங்கற தனிப் பிரிவுல போய்ச் சேர்ந்துடும் — அது இயற்கை கலந்த சினிமாதான். அப்படிச் சொல்லும்போது 'பதினாறு வயதினிலே'யும் பாலசந்தர் இயக்கிய சில படங்களையும், மகேந்திரன் இயக்கின 'உதிரிப் பூக்கள்' படத்தையும் சேர்க்காம நாம மறந்துட முடியாது. இப்ப இந்த சயன்ஸ் ஃபிக்ஷன்னு சொன்னீங்களே, அது வந்து எளிதான காரியமில்லே. அப்படிப் பார்க்கும்போது சமீப காலமா உங்களுக்கு இந்த Folklore என்று சொல்லக்கூடிய வாள் சண்டைப் படங்கள்கூட வரதில்லே. அதுக்குக் காரணம் என்னன்னா, அதற்கான பட்ஜட் இப்பக் கட்டுபடியாகாது; காஸ்ட்லி. அப்படி செய்யும்போதுகூட ஒண்ணு ரெண்டு நடிகர்கள்தான் இருக்காங்க... ஒண்ணு ரெண்டு தயாரிப்பாளர்கள்தான் இருக்காங்க — ஸ்டுடியோ வசதின்னு எடுத்துக்கும்போது. அந்தப் பட்டியல்ல வருது சயன்ஸ் ஃபிக்ஷன்னு சொல்லக் கூடியது. அதுவும் தமிழ் நாட்டுல முயற்சி பண்ணியிருக்காங்க. அதை முதல் முதல்ல செஞ்சது தமிழக முதல்வர் நடித்த 'கலையரசி'ங்கிற படம். சந்திரனுக்கு வெளியுலகத்துல போற மாதிரி, அங்க கிராவிடி இல்லாம, புவிசர்ப்பு இல்லாம, காலைத் தரையில பாவாம நடக்கற மாதிரி எடுத்துருக்காங்க. அதுவே அந்தக் காலத்துக்கு ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் எடுத்துருக்காங்க. முயற்சி பண்ணலேன்னு சொல்ல முடியாது.

2. வி. ரங்கம்; ஸ்ரீவைகுண்டம்

உங்களது மனைவி வாணி கமல் அமெரிக்கா சென்று மேக்கப் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளாரே - உங்களது மேக்கப்பில் மேலும் என்னென்ன புதுமைகளைச் செய்கிறார்?

புதுமைன்னு சொல்லும்பட்சத்தில, எவ்வளவு பெரிய புதுமைன்னு எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனா இப்ப 'எனக்குள் ஒருவன்'கிற கவிதாலயம் கம்பெனி தயாரிச்ச அந்தப் படத்துல தலையில முடி வெகுவாகக் குறைந்துவிட்ட ஒரு சபா செகரடரி வேஷத்துல வருகிறேன். ஒரு பெருமைக்காகச் சொல்லலே — நான் முயற்சி பண்ணி முயற்சி பண்ணித் தோத்துப்போன விஷயம், முதல முறையா வெற்றியடைஞ்சிருக்கேன். இந்த சினிமா வழக்கத்திலே வழுக்கைத் தலை; மொட்டைத் தலை, இந்த புத்தபிட்சு தலை விஷயங்கள் வந்தபோது வெறும் துணியால தலையை மறைத்து எடுக்கும் போது படத்துல அந்தப் பளபளப்பு — தலை ஸ்கின்னுக்கு இருக்கிற பளபளப்பு — இருக்காது. அந்தப் பளபளப்புடன் கூடிய முதல் வழுக்கைத் தலை, தமிழ்த் திரையுலகில் என் தலைதான்னு சொல்லணும் — எனக்குத் தெரிஞ்சவரையிலும். ஒருவேளை வேறு யாராவது செஞ்சிருக்காங்களான்னு தெரியலே. அதேமாதிரி ஒரு சைனிஸ்கெட்-அப்; செகன்ட் ஹாஃப்ல ஒரு நோயாளியா நடிக்கும்போது கண்கள் வந்து வட்டமான கண்களாக இருக்காது அவர்களுக்கு. கருக்கத்தோடு மெல்லிய கோடுகளோடு, பக்கவாட்டில் சின்னக் கீத்துக்களாக இருக்கும் அவர்கள் கண்கள். அதை Side Pullனு சொல்லுவாங்க. அதுக்காக ஒரு ஸ்பெஷல் மேக்கப் பண்ணியிருக்காங்க. மார்லன் பிராண்டோ அவர்கள் Tea House of the August Moonங்கற



படத்துல இதே முறையைக் கையாண்டிருக்காங்க. அந்த முறையை, வாணி அங்க போய்க் கத்துக்கிட்டு வந்ததுனால என்னால பிரயோகப்படுத்த முடிஞ்சது.

3. ஆர். எஸ். சிவசுப்பிரமணியன், நாகப்பட்டினம்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த படங்களில் தங்களைக் கவர்ந்த படம் எது? அவரது நடிப்பின் வகைகளில் தங்களுக்குப் பிடித்தது எது?

கவர்ந்த படம்னு சொன்னு – நான் பல முறை சொல்லியிருக்கேன் பகிரங்கமா– நான் சிவாஜி ரசிகன், சிவாஜி பாதிப்பு உள்ள ஒரு நடிகன்னு. 1954க்குப் பிறகு தமிழ்த் திரையுலகில் நுழைந்த எந்த நடிகனுக்கும் சிவாஜி என்ற நடிகரின் ஒரு சிறு துளிபாதிப் பாவது இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அப்படி இல்லை என்று சொல்லு பவர்கள் அறியாமையால் சொல்லுவார்கள்; இல்லை, பொய் சொல்லுவார்கள் என்பதும் என் கருத்து... என்னுடைய கருத்து மட்டுமே. அப்படி இருக்கும்போது, சிவாஜி யோட இந்தப் படம்தான் பிடிக்கும், அந்தப் படம் பிடிக்கலேங்கறது ரொம்பக் கடினமா இருக்கு. ஸோ, ஒரு 67 வரையிலும் வெறும் ரசிகனாகவே இருந்து பார்த்திருக்கேன் நான். என்னு நான் நடிகன்னே நெனைச்சுக்கிட்ட தில்லே அப்ப. அதுக்கப்பறம் நடிகன்னு ஒரு அந்தஸ்து என் மேல் திணிக்கப்பட்ட போது – சரி நாமும் ஒரு நடிகன்னு பார்க்கும் போது – பயத்தோட பார்க்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துல இருந்தேன் நான். இப்ப சிவாஜியோட படத்தைப் பத்திச் சொல்லும் போது, அஃப் கோர்ஸ் 'கட்டபொம்மனைப் பத்திச் சொல்லாம இருக்க முடியாது. என்னு அது ஏஷியா முழுதும அங்கீகரிக்கப் பட்ட ஒரு நடிப்புத் திறன். அப்புறம் 'கப்ப லோட்டிய தமிழன்'ல இழந்துவிட்ட தன் கப்பலைப் பார்த்து ஒரு பெருமூச்சு விடற காட்சி இன்னும் என் கண் முன்னால நிக்குது. இன்னும் பல படங்கள்... 'படிக்காத மேதை'ல ரங்காராவ் வந்து சொல்லிக் கிட்டே இருக்கும்போது கையை இறுக்கக் கட்டிக்கிட்டு அந்தப்பக்கம் திரும்பிநிக்கறது.. சிவாஜி ஏதோ கோபமா நிக்கறார் அப்படினு நெனைச்சுக்கிட்டிருக்கிறபோது கேவிக் கேவி ஏதோ பச்சைப் புள்ளை போலத் தேம்பி அழுதுக்கிட்டு ''என்னம்மா... ம்மா ....''ன்னு இழுக்கிற அந்த நடிப்புத் திறன்– இன்னும் 'நவராத்திரி'யிலே ஒன்பது வேடங் கள்ள நடிச்சார்: அதுல என்னென்ன மாறு தல்கள் பண்ணியிருக்கார்... அவை பத்தி நாம சொல்லிக்கிட்டே இருக்கலாம். அதுலே தனியா எந்த நடிப்பு அவருக்கு நல்லா இருக் கும்கிறதை விட, எந்த நடிப்பு எனக்குப் பிடிக்கும்னு வேணு சொல்லலாம். அவர் ஹாஸ்யமான சில பாத்திரங்கள் செய்து வெகுநாட்களாகி விட்டன. அதான் அவ ருக்கு நல்லா இருக்கும்னு சொல்லலே... அதுல அவரைப் பார்க்கலாம் போல ஒரு சின்ன ஆசை!

4. ஸ்ரீமதி ராஜேஸ்வரி சுப்பிரமணியம், திருச்சி

தாங்கள் சமீபத்தில் படித்து, ரசித்த மறக்க முடியாத ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?


ம்...,ம்.... அதை அடுத்தவாரம் சொல் றேனே?

தொகுப்பு: சித்தார்த்

அடுத்த வாரம்: தேர்தல் கண்ணோட்டம்

தேர்தல் சூடு பிடித்திருக்கிறது. எந்தெந்தத் தொகுதிகள் முக்கியமாக நம் கவனத்தைக் கவர்கின்றன? அங்கு யார் யாருக்கு வெற்றி வாய்ப்பு? வெற்றி பெறக் கையாளப்படும் ராஜதந்திரங்கள் யாவை? பல தலைவர்களைச் சந்தித்து நமது நிருபர்கள் சேகரித்த பரபரப்பான தகவல்கள்...

அமேதி முதல்... ஆண்டிப்பட்டி வரை





ஸூப்பர் ரின்
அதிக வெளுப்பொளி பாய்ச்சுது...

இதற்கு ஈடுநிற்க டிட்டர்ஜெண்ட் வில்லை எதுவுமே இல்லை.

உற்றுப் பாருங்கள்
இப்போது ஸூப்பர்
ரின் வில்லையை—
கண்கவரும் புதிய
மேலுறை, புதுமை
கமழும் நறுமணம்.



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RIN 69 2013 TM



தமிழ் ஈழத்தின் விடுதலைப் புலிகள் நடத்திவரும் கொரில்லாப் போர் பற்றி அடிக்கடி செய்திகள் படிக்கிறோம். கொரில்லாப் போர் என்றால் என்ன? அது எங்கே, எப்போது, எதற்காகத் தோன்றியது? ரசமான தகவல்களை விரிவாகத் தருபவர் மேஜர் ஜெனரல் மகாதேவன்

கியூபா நாடு ஸ்பானிஷ் ஆதிக்கத்தில் இருந்த நேரம். நெஞ்சுறுதியும் எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருந்த க்யூபா நாட்டு இளைஞர்கள் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராகப் புரட்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஸ்பானிஷ் ராணுவத்தை ஒவ்வொரு முறையும் தாக்கிய விதம் ராணுவத்தை நிலைகுலையச் செய்தது. தாக்குபவர்கள் யார் என்று கண்டு பிடிக்க முடியாமல் ராணுவம் திணறியது. போராடிய இளைஞர்களுக்கு மக்களின் முழு ஆதரவும் இருந்ததால் ராணுவத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. முடிவில் க்யூபாவை அந்த மக்களிடமே விட்டு விட்டு வெளியேறினார்கள். அந்தப் புரட்சியில் க்யூபா நாட்டு இளைஞர்களுக்குத் தலைவனாக இருந்து வழிநடத்திச் சென்றவர்தான் சி. குவாரா (Chi. Guara) இவரது பெயரிலிருந்துதான் 'கொரில்லா' என்ற பெயர் மருவி வந்தது.

கட்டுப்பாடான ஒரு ராணுவத்துக்குப் போரின் அடிப்படை விதிகளின்படி நேர் ஒழுங்கு முறைப்படிதான் சண்டை போட இயலும். ஆனால் இந்தக் கொரில்லாப் போர் முறையில் எந்தவிதக் கொள்கைகளும் கடைப்பிடிக்கப் படுவதில்லை-ஒன்றைத் தவிர. அது. எந்த வழியை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து எதிரிகளுக்கு உடல் நாசமோ பொருள் நாசமோ உண்டாக்குவது.

கொரில்லாப் போர் முறைக்குக் கட்டுக்கோப்பான அமைப்புத் தேவையாக இருந்தாலும் செயல்படும்போது அவ்வாறு சேர்ந்து செயல்பட வேண்டிய அவசியமில்லை. இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து செயல்பட்டால் போதுமானது. ஆனால் இடம் போடுவது முக்கியம். எந்தக்காரியத்தையும் இரவிலேதான் செய்ய வேண்டும். குறிப்பிட்ட இடத்தையோ அல்லது ராணுவத்தையோ தாக்கிய பிறகு சிறிதும் தாமதிக்கக் கூடாது. அந்த இடத்தை உடனே காலி செய்துவிட்டு ஓடவேண்டும். அதுவும் சேர்ந்து ஓடக் கூடாது. முன்னாலேயே திட்டமிட்டபடி தனித்









தனியாகப் பிரிந்து ஓடி. நெடுந் தூரத்துக்கு அப்பால் ஒன்று சேர வேண்டும்.

க்யூபாவைப் போலவே பிரான்ஸிலும் யூகோஸ்லேவியாவிலும் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராக இந்தக் கொரில்லாப் போர் முறை கையாளப்பட்டது. வெற்றியும் கண்டது. காலனி ஆதிக்கத்தில் இருந்த பல நாடுகளின் சரித்திரத்தைப் பார்த்தால் அவை சுதந்திரம் பெறுவதற்கு இளைஞர்கள் வீரத்துடன் நடத்திய கொரில்லாப் போர் முறையும் ஒரு காரணமாக இருக்கும். இந்தக் கொரில்லாப் போர் பற்றி மா-சே-துங் குறிப்பிடுகையில், 'மக்களின் போர்' என்பார். அந்தப் போர் முறையைப் பற்றி அவர் எழுதியுள்ள புத்தகத்தின் பெயர் ரெட் புக் (Red Book). இந்தியாவில் தடை செய்யப்பட்ட புத்தகம் இது. ராணுவ நூலகங்களில் மட்டும்தான் இருக்கிறது. கொரில்லாப் போர் முறையை நடத்திச் செல்லுகையில் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்கள்:

- தாக்கிய ஓர் இடத்தை மறுபடியும் தாக்கக் கூடாது.
- எதிரிகளைத் தாக்கும்போது சுற்றிநின்று கொண்டு தாக்கக் கூடாது. அவர்கள் ஓடுவதற்கு ஒரு வழியை வைத்துவிட்டுத்தான் தாக்க வேண்டும். அப்போதுதான் தப்பித்து ஓடும்போது பின்னாலிருந்து தாக்க முடியும்!
- எதிரிகளின் பலவீனத்தை எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டும்.
- கண்டிப்பாக வெற்றி கிடைக்கும் என்ற பட்சத்தில்தான் தாக்குதலில் இறங்க வேண்டும்.
- அதிக எடை இல்லாத சுலபமாக இயக்கக் கூடிய ஆயுதங்களையே கையாள வேண்டும். அது எந்த ஆயுதமானாலும் சரி.
- நடவடிக்கைகளை இரவில்தான் வைத்துக்கொள்ள வேண்டும்.
- எதிராளிகளுக்குப் பல வசதிக் குறைவுகளை உண்டாக்கி எரிச்சலை ஏற்படுத்த வேண்டும்.

பல பயங்கரமான 'நேபாம்' போன்ற குண்டுகளை வீசிக்கூட வியட்நாமை அமெரிக்கரால் பணியவைக்க முடியவில்லை. இதற்குக் காரணம் ஹோ-சி-மின்னின் தலைமையில் வியத்நாமியர்கள் நடத்தின கொரில்லாப் போர்தான் அமெரிக்க வீரர்கள் நிலைகுலைந்தனர். ''யார் எதிரி என்றே தெரியவில்லை. பகலில் நண்பர்கள் போல் இருக்கிறார்கள். இரவில் அவர்களே தாக்குகிறார்கள்'' என்றார் அமெரிக்கத் தளபதி ஒருவர். அமெரிக்கர்களுக்குப் பெண்கள், மது விஷயத்தில் சபலம் அதிகம். இதைப் பயன்படுத்தி நிறைய வியத்நாமியப்பெண்கள் அமெரிக்கர்களுக்கு மதுவில் விஷத்தைக் கலந்து கொடுத்தோ அல்லது படுக்கையிலோ கொன்று குவித்திருக்கிறார்கள். எதிரிகளை ஒழித்துக்கட்ட எந்த முறையை வேண்டுமானாலும் கையாளலாம் என்ற கொரில்லாப் போர் முறையின் தத்துவத்தின் அடிப்படையில் வியத்நாமியப் பெண்கள் செய்த செயல்கள் நாட்டுக்காகச் செய்யும் கடமை என்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொரில்லாப் போர் நடத்துபவர்கள் யூனிஃபார்ம் எதுவும் அணியத் தேவையில்லை. எடை குறைந்த இயந்திரத் துப்பாக்கியை இயக்கத் தெரிந்தால் போதும். ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் செய்வது ஒருபுறமிருக்க தாற்காலிகமாக ரேடியோ டிரான்ஸ்மிட்டர் ஒன்று அமைத்துப் பல நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப வேண்டும். உள்நாட்டு மக்களை மேலும் புரட்சியில் இறங்க வைக்கும் 'மூளைச் சலவை' நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப வேண்டும். தகவல்களை அனுப்புவதற்குப் பெண்கள், குழந்தைகளைப் பயன்படுத்த வேண்டும். எதிரிகளின் தகவல் தொடர்பு சாதனங்களைச் சேதப்படுத்தி அவர்களுக்கு உணவு சப்ளையையும் தடை செய்ய வேண்டும். மாட்டிக்கொண்டால் தன்னைப் பற்றியோ, தனது கூட்டத்தைப் பற்றியோ எந்தத் தகவல்களையும் எதிரிகளுக்குத் தரக் கூடாது. எப்படிப்பட்ட சித்ரவதையும் தாங்கிக் கொள்ள வேண்டும். பேசக் கூடாது. தப்பிக்க முடியாது என்று தெரிந்தவுடன் கையில் தயாராக வைத்திருக்



மேஜர் ஜெனரல் எஸ். பி. மகாதேவன்

21வது வயதில் செஸ்ல ரெஜிமெண்டில் ஆபீஸராகச் சேர்ந்த திரு எஸ். பி. மகாதேவன் 34 வருட ராணுவ சேவைக்குப் பிறகு 1980ல் மேஜர் ஜெனரலாக ஓய்வு பெற்றார். ஜம்மு-காஷ்மீர், கோவா ராணுவ நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொண்டவர். ஐ. நா. அமைதிப் படையில் ஒருவராக காங்கோவுக்கு அனுப்பப் பட்டவர். மகாதேவனது ராணுவ வாழ்க்கையில் மறக்க முடியாதது, பனிபடர்ந்த லடாக் பிரதேசத்தில் பணியாற்றிய நாட்கள்தான். உடலைச் சில்லிடச் செய்யும் அந்தக் குளிர்ப் பிரதேசத்திலும் அங்கு இருந்த ராணுவ முகாமை மகாதேவன் நேர்த்தியாக வைத்திருந்த அழகு அங்கு விஜயம் செய்த பிரதமர் இந்திரா காந்தியை மிகவும் கவர்ந்தது.

நாகாலாந்துப் பகுதியில் பணியாற்றியபோது, சைனாவில் பயிற்சி பெற்று வந்த நாகர்களின் கொரில்லாத் தாக்குதலை வெற்றிகரமாகச் சமாளித்ததற்காக மேலதிகாரிகளால் வெகுவாகப் பாராட்டப்பட்டார் மகாதேவன்.

பங்களாதேஷ் யுத்தத்தின்போது இவரின் திறமையைப் பாராட்டி அதி விசிஷ்ட சேவா பதக்கம் வழங்கப்பட்டது.

பல்வேறு ராணுவப் பயிற்சிப் பள்ளிகளில் ஆசிரியராக இருந்த அனுபவமும் மகாதேவன் அவர்களுக்கு உண்டு.

தற்போது பப்ளிக் சர்விஸ் கமிஷனின் தலைவராக இருக்கும் இவர் சத்ய சாய்பாபா பக்தர்.

கும் 'சையனைட்' மாத்திரையைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்வது நல்லது.

பங்களா தேஷில் முக்திவாகினி இயக்கம் நடத்திய கொரில்லாப் போர் முறைதான் இந்திய ராணுவம் சுலபமாக பாகிஸ்தானை வீழ்த்தக் காரணமாக இருந்தது. இந்தியர்களை எதிர்கொள்ள முன்னணியில் நிறைய பாகிஸ்தான் படைகள் இருந்தன. ஆனால் திடீரென்று அவர்களுக்குச் செய்தி வரும்; 'ஆயுதக் கிடங்குகள் தாக்கப்பட்டன; ஆஸ்பத்திரிகள் தாக்கப்பட்டன; ராணுவ முகாம் தாக்கப்பட்டது' இதுபோன்ற பல தாக்குதல் செய்திகள். உடனே முன்னணி ராணுவத்திலிருந்து ஒரு பகுதி பின்னால் போகும். நிலைமை இதுபோல் இருந்ததால், இந்திய ராணுவத்துக்கு மிகவும் வசதியாக இருந்தது. பின்னால் முக்திவாகினி இயக்கம் பாகிஸ்தான் ராணுவத்துக்குப் பல தொல்லைகளைக் கொடுக்க, இந்தியப் படைகள் எதிர்ப்புறம் தாக்க, வேறு வழியின்றி பாகிஸ்தானியர் சரண் அடைந்தனர். முக்தி-வாகினி கொரில்லா முறைப்படி போராட்டத்தை நடத்தியிராவிட்டால் ஒரு லட்சம் பாகிஸ்தான் துருப்புகளை அடக்கி, பங்களா தேஷைக் கைப்பற்ற மூன்று மாதங்களாவது ஆகியிருக்கும்.

இன்னும் உலகில் பல்வேறு பாகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்துக்கு எதிராகவோ அல்லது சர்வாதிகார ஆட்சி நடத்தும் சக்திகளுக்கு எதிராகவோ கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு வருகிறார்கள். அவர்களின் நோக்கம் சரியா தவறா என்ற சர்ச்சையில் நாம் இறங்க வேண்டாம். ஆனால் மக்களின் ஒட்டு மொத்தமான ஆதரவும் நிலைகுலையா நெஞ்சும், வீரம், தேச பக்தி, ஒழுக்கம் இவையும் நிறைந்த இளைஞர்கள் இருந்தால் தான் இந்தப் போர் முறை வெற்றிக் கனியைத் தேடித் தரும்.

பேட்டி: ப்ரியன்

பீஹார் மாநிலத்தின் அமைச்சர் நரேந்திர ஜா அண்மையில் 'டாக்டர்' பட்டம் பெற்றிருக்கிறார்!

'தேசியமும் மைதிலி மொழியும்'— என்ற பொருளில் அவர் ஆய்வு செய்திருந்தார்.

அவருக்கு வழிகாட்டியாக இருந்த பேராசிரியர், டாக்டர் உபேந்திர டாகூர், மகதப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். அவர் ஒரு சரித்திரப் பேராசிரியர்!

ஜாவுக்குக் கட்டுரையை எழுதிக் கொடுத்தவர், டாக்டர் டாகூரின் சகோதரர்! அவர், பாட்னா பல்கலைக் கழகத்தில் மொழிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்!

ஸண்டே மிட்டேயிலிருந்து சேலம்சக்தி.



ஸகல காரிய ஸித்தி அளிக்கும் தெய்வீகப் புத்தகங்களுக்கு முன்னோடியாகத் திகழும்

லிப்கோ வழங்கும் புத்தகங்கள்

		ரூ.காசு
1.	பத்திரங்களும் ரிஜிஸ்டிரேஷனும்	15 00
2.	மஹாத்மாவின் மஹத்வம்	3 00
3.	வள்ளுவர் வாய்மொழி — திருக்குறள் மூலம்	1 50
4.	உங்கள் பிறந்த தேதியும் வாழ்க்கை ரகசியங்களும்	3 00
5.	உடல் மச்சங்களும் உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்	2 50
6.	ஆங்கில ஆசிரியன்	12 00
7.	கந்தர் சஷ்டி கவசம்	0 60
8.	குழந்தை வளர்ப்புக் கலை	5 00
9.	சமைப்பது எப்படி?	5 00
10.	இந்தி ஆசிரியன்	7—50
11.	ஸுந்தர காண்டம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்	14—00
12.	ஸுந்தர காண்டம் — மூலம் தமிழில்	11—00
13.	ஸுந்தர காண்டம்—ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம்	18—50
14.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் —ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம் — பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய 2 பாகங்களில் 1800 பக்கங்கள்	125—00
15.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் — ஸ்தோத்ர மாலையுடன்	10—50
16.	ஸ்தோத்ரமாலை	3—50
17.	கம்ப ராமாயணம்—வசனம்	11—00
18.	ரகுவம்ச மஹாகாவ்யம்—1—19 ஸர்க்கங்கள் — உரையுடன்	55—00
19.	குமாரஸம்பவம்—1—18 ஸர்க்கங்கள் — உரையுடன்	25—00
20.	ஸ்ரீமத் பகவத் கீதை—மூலம் தமிழில் உரையுடன்	9—50
21.	மாங்கல்ய ஸ்தவம்	1—50
22.	ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஹ்ருதயம்	1—50
23.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்—மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் — உரையுடன்	10—00
24.	நாலாயிர திவ்யப்பிரபந்தம்	70—00
25.	பன்னிரு ஆழ்வார்கள்	2—00
26.	நூற்றெட்டு ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேச வைபவம்	4—00
27.	ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் — உரையுடன்	48—00
28.	ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரங்கள் — மூலம் — ஸம்ஸ்க்ருதத்தில்	12—00
29.	,, மூலம் — தமிழில்	5—20
30.	,, உரையுடன்	60—00
31.	ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகைகளும் ஸகல காரிய ஸித்தியும்	3—00
32.	பஞ்ச ஸூக்தங்கள்	0—80
33.	ஸ்ரீ குருவாயூர் அப்பன் ஸுப்ரபாதம்	0—60
34.	ஸ்ரீ முருகுந்தமாலை	1—50
35.	பஜகோவிந்தம்	1—50
36.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்	10—50
37.	அபிராமி அந்தாதி — உரையுடன்	2—00
38.	ஸ்ரீ ஸௌந்தர்யலஹரி—மூலமும் உரையும்	3—00
39.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீதேவீ பாகவதமும்	4—50
40.	பெரிய புராணம் — சுருக்கம்	2—00
41.	திருவிளையாடற் புராணம் — சுருக்கம்	2—00
42.	ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	7—50
43.	ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	1—30
44.	ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம்	0—90
45.	நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	7—20
46.	திருப்புகழ் மஞ்சரி	2—50
47.	ஆறுமுகனுக்குகந்த ஆறுபடை வீடுகள்	7—50
48.	இயற்கை தரும் இன்மருந்துகள்	8—00
49.	குழந்தைக்கு வீட்டு வைத்தியம்	1—00
50.	விரத பூஜா விதானம்	8—00
51.	குடும்ப ஜோதிடம்	8—00
52.	விவாஹ மந்த்ரார்த்த போதினி	2—50
53.	ஸ்ரீ த்யாகராஜக்ருதி ராமாயணம்	3—00
54.	ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்	2—50
55.	Tamil Nadu General Sales Tax (English)	35—00
56.	Central Sales (English)	12—50

விசேஷ சலுகை:

எல்லாவற்றிற்கும் தபாற் செலவு பிரத்யேகம். ஆனால், 15-12-1984க்குள் இவ்விளம்பரத்தைக் குறிப்பிட்டு ஒரே சமயத்தில் ரூ. 50க்குக் குறையாமல் எமக்கு ஆர்டர் செய்தால், எங்கள் செலவிலேயே புத்தகங்களை அனுப்பிவைக்கிறோம். மணியார்டர் அல்லது டிராப்ட் மட்டும் அனுப்புக.

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

43, ரங்கநாதன் தெரு, தபால் பை 1028

தியாகராயநகர், சென்னை-600 017

போன் : 441538

56 ஆண்டுகளாகப் புத்தக உலகில் பெரும் புகழ்!



அவர் மாதிரி பாட வந்துவிட்டால் அதுவே பெரிய சாதனை

பேகடாவுக்கு மட்டுமே 75 டாலர்

தொழில் துறையில் ஒரு டி. வி. எஸ். எப்படிப் பிரபலமோ, அதுபோல இசைத் துறையிலும் டி. வி.-எஸ். என்ற மூன்றெழுத்துக்காரர் பிரபலமானவர். டி. வை. சங்கர நாராயணன் என்கிற வசீகரமான இளைஞர் தான் அவர் என்பது கர்நாடக இசை ரசிகர்களுக்குச் சட்டென்று நினைவுக்கு வரும். அப்படி அவர் நினைவு வந்தவுடன், அவரது குருவும் தாய் மாமாவும் ஆன மதுரை மணி ஐயர் அவர்களையும் கூடவே ஞாபகம் வராமல் போகாது...

1959 என்று நினைக்கிறேன். இருபது வயது நிறைந்திருந்த எனக்கும் என்னைவிடச் சிறியவனான என் அண்ணா பிள்ளை முரளிக்கும் இடையே ஓர் உரையாடல் நடந்தது.

நான்: எப்படி மதுரை மணியை ரசிக்கிறாய் நீ? சமயங்களில் வார்த்தைகளை மழுப்பலாப் பாடுறாரே...

முரளி: பாட்டை வார்த்தைகளுக்காக மட்டும் ரசிக்கிறதாயிருந்தால், சும்மா எழுதி வைத்துக்கொள்; ஓரமாய் உட்கார்ந்து படித்துக் கொண்டிரு. பாட்டை, அதைப் பாடுகிறவர் தரும் இனிமைக்கும் ரசிப்பாயா. அதை விட்டு விட்டு...

அடியோடு மாறிப்போய், மதுரை மணி ஐயரின் கச்சேரிகள் எங்கு நடந்தாலும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய்க் கேட்கும் பரம ரசிகனானதற்கு முரளியுடன் நடந்த சம்பாஷணைதான் காரணம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். என்னைப் போல் எத்தனை ஆயிரம் பேர்!

கீர்த்தனைக்கு முன் அவரது ராகஜாலங்கள், இடையே சரம் சரமாய் வரும் ஸ்வரங்கள் இவை கேட்பவரை மயக்கி மகிழ்விக்கும் ஆற்றல் பெற்றிருந்தன. அந்த இசையில் ஏதோ ஒரு கவர்ச்சி இருந்தது. 'ரிதம்', குரல் வளம், கற்பனை வளம் எல்லாவற்றையும் தாண்டி எவரையும் இசை கேட்க வைக்கும் திறன் என்ற தனி அம்சத்தையும் கொண்டிருந்தது.

குருவை அப்படியே நினைவுபடுத்தும் திரு சங்கரநாராயணன் மயிலை கற்பகாம்பாள் நகர், நான்காம் எண்ணுள்ள விஸ்தாரமான வீட்டில் வசிக்கிறார். காம்பௌண்ட் கேட்டைத் திறக்கும்போதே கதவைத் திறந்துகொண்டு, ''வாருங்கள்..வாருங்கள்!'' என்று வரவேற்கிறார்.

கேள்வி – பதில் வடிவில் பேட்டி தொடங்குகிறது.

துருதுருவென்று வளையவரும் சிறுமி அம்ருதா நாளை இசை உலகை ஒரு கலக்குக் கலக்கலாம்



மணியான வாரிசு

எந்த வயதில் பாட்டுக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தீர்கள்? எந்த வயதில் முதன் முதலாக கச்சேரி செய்தீர்கள்?

எட்டு வயதில் மாமாவிடம் மாயூரத்தில் பாட்டுக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். (மதுரை மணி அய்யர் சென்னைக்கு வந்தது 1955ல்.) ஜகந்நாத பக்த ஜன சபா கச்சேரியில் மாமாவுடன் சேர்ந்து 'கா வா வா'வை குரல் உடையாதபோதே மேல் ஸ்தாயியில் பாடியிருக்கிறேன். எஸ். எஸ். எல். ஸிக்குப் பிறகு மாமாவுடன் சம சுருதியிலேயே பாடியிருக்கிறேன்.

என் அரங்கேற்றம் கொஞ்சம் சுவாரஸ்யமானது... நான் தனியாகக் கச்சேரி செய்ய வேண்டும் என்பதை மாமா ஒப்புக்கொண்டவுடன் அம்மா பிப்ரவரி 2–ஆம் தேதி நல்ல நாளாக இருக்கிறது. அன்றைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று நாள்பார்த்துச் சொல்லி விட்டாள். மாமா உடனே லஸ் ஆஞ்சநேயர் கோயிலில் வைத்துக் கொள்ள வசதிப்படுமா என்று விசாரித்து வரச் சொல்லி விட்டார். அப்பாகூட, மாமாவிடம், ''என்ன இது, திடீரென்று இப்படிக் கச்சேரி வைத்துக் கொள்ளலாம் என்கிறீர்களே...?'' என்று தயங்கினார். அவரிடம், ''டி. என். கிருஷ்ணன், வேலூர் ராமபத்ரன் இருவருக்கும் போன் பண்ணி இன்றைக்குச் சாயந்திரம் அவர்கள் ஃப்ரீதானா என்று கேள்!'' என்றார் முதல் நாள். அப்பா போன் செய்தபோது அவர்களும் அன்று மாலையே வீட்டுக்கு வருவதாகச் சொன்னார்கள். இரண்டு மணி நேரம் அவர்களுடைய பக்க வாத்தியத்துடன் கச்சேரி மாதிரியே மாமா முன்னால் பாடிக் காட்டினேன். மறுநாள்தான் கச்சேரி. அப்பாவுக்கு என்னைப் பற்றிய தைரியமும், திறமையில் நம்பிக்கையும் வரவேண்டும்என்பதற்காகவே மாமா அப்படி ஒரு ரிகர்சல் வைத்த மாதிரி இருந்தது...

உங்கள் படிப்பு பாதிக்கப்படவில்லையா?


இல்லை. படிப்புக் காரணமாகவே வெளியூர்களுக்கு எல்லாம் போகாமலே இருந்தேன் பி. எஸ். ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். ஸி. முடித்து, விவேகானந்தாவில் பி. காம் தேறி, சென்னைச் சட்டக் கல்லூரியில் பி. எல். லும் வாங்கினேன். 67ல் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டேன். பதினைந்து நாள் ஒரு பிரபல வழக்கறிஞரிடம் ஜூனியராக இருந்தேன். ஆனால் தினசரி கோர்ட் வாழ்க்கை நேரம் கழித்து வீடு திரும்புதல் எல்லாம் என் இசைக்குக் குறுக்கே நின்றபோது வழக்கறிஞர் தொழிலை ஒதுக்கி வைத்துவிட்டு முழு நேர இசைக் கலைஞனாகி விடுவது என்று முடிவு எடுத்தேன். கோர்ட் கச்சேரியை விடப் பாட்டுக் கச்சேரியே மேல் என்று தீர்மானித்தேன். ஸிம்ப்ஸன் கம்பெனியிலிருந்து வேலைக்கு வந்த வாய்ப்பையும் ஒதுக்கி விட்டேன்!

உங்கள் குரு - அதாவது உங்கள் மாமா மதுரை மணி அய்யருடன் நிறையக்கச்சேரிகள் செய்திருப்பீர்களே?

பதினைந்து பதினாறு வயதிலிருந்து தொடர்ந்து மாமாவுக்கு வோகல் சப்போர்ட் கொடுத்து வந்திருக்கிறேன். நாலு வயதில் அவருடன் மேடை ஏறி, தம்பூராவுக்குப் பின்னால் தூங்கிப் போனதும் உண்டு... 23 வயது வரை தொடர்ந்து அவருடன் பாடி வந்திருக்கிறேன். ரொம்பவும் உற்சாகப்படுத்துவார். கச்சேரி முடிந்து வருகிறபோது டிஸ்கஸ் பண்ணிக் கொண்டே வருவோம். அதிலும் நான்தான் மருமான் என்கிற உரிமையில் நிறையப் பேசுவேன்.

படிக்கும்போதே இந்த மாதிரி பாடகராக வரவேண்டும் என்ற ஆசை இருந்ததா?

○ குடும்பத்துடன் ஒரு புகைப்படம்



இல்லை. அப்போதெல்லாம் இந்த மாதிரி ப்ரொஃபஷனலாகப் பாட வருவோம் என்று நினைத்ததே கிடையாது. ஆரம்ப நாளில் மாயூரத்தில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தபோது ராஜபக்தி துர்க்காதாஸ் முதலிய நாடகங்களில் பாட்டுப் பாடி நடித்திருக்கிறேன். பரிசுகள் பல வாங்கியிருக்கிறேன். வீட்டில் சங்கீத சம்பந்தமான பேச்சுக்கள், நிகழ்ச்சிகள் நிறைய இருந்துவந்தன. அந்தச் சூழ்நிலையும் என் இயற்கையான இசையார்வத்துக்கு ஒரு காரணம் என்று சொல்லலாம்.

உங்கள் கச்சேரியை எப்படி அமைத்துக் கொள்கிறீர்கள்?

முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்வதில்லை. 'ஸ்பான்டேனியஸ்' ஆகத்தான் பாடுவேன். அன்று கரகரப்பிரியா பாட வேண்டும் என்று தோன்றினால் பாடிவிடுவேன். என்னுடைய விருப்பத்துக்கு மாறாக சென்னை, பெங்களூரில் உள்ள அமைப்புகள் சிலவற்றில் அவர்கள் வழக்கப்படி இன்ன ராகம், இன்ன பாட்டுப் பாடப் போகிறேன் என்று லிஸ்ட் கொடுத்துவிடுவதுண்டு. மற்றபடி சபைகளில் காம்போதி பாடு, மோகன கல்யாணி பாடு என்று ரசிகர்கள் கேட்கிறார்கள். அதனால் கச்சேரிகளுக்குத் தயார் செய்துகொண்டு போவதில்லை.

நீங்கள் பாடும் முறையில் உங்கள் குரு மதுரை மணி அய்யரின் பாணியை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதற்காக, அவர் குரலைக்கூட நீங்கள் இமிடேட் செய்கிறீர்கள் என்று ஒரு குற்றச் சாட்டை விமர்சகர்கள் சொல்கிறார்களே?

என்னுடைய ஸ்டைல் — என்னுடைய பாணி என்று ஒன்று இருக்கிறது. அதை நான் இப்போது கச்சேரிக்குக் கச்சேரி உறுதி செய்து கொண்டுதான் வருகிறேன். எனது மனோதர்மப்படி ஒரிஜினலாகத்தான் பாடுகிறேன் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவேன். கான்ஷியஸ்ஸாக, வேண்டுமென்றே என் மாமாவின் பாணி அல்லது குரலை நான் பின்பற்றுவதில்லை. அவருடைய சிந்தனை, பாடும் முறை எல்லாமே ஆதர்சமானவை என்று நான் நினைக்கிறேன். நானே அதை ரசித்து, அனுபவித்துப் பாடுகிறேன். ஆனால் மாமா பாடாத கிருதிகளைப் பாடுகிறேன். அவர் கச்சேரிகளில் கையாளாத உருப்படிகளை எல்லாம் எடுத்துப் பாடி வருகிறேன். என்னுடைய அணுகுமுறை என்ன? எந்த ராகத்தை எப்படிக் கையாளுகிறேன் என்பதைத் தயவு செய்து கவனியுங்கள். குருவின் — மாமாவின் — பாதிப்பு இருக்கத்தான் இருக்கும். ஐ ஆம் லிவிங் மை பெஸ்ட் வித்



★

''நான் மதுரை மணி அவர்களின் பரம ரசிகன். அவர் மறைந்தவுடன், மிகப் பெரிய சோகம் என்னைத் தாக்கியது.

இரண்டு மாதங்களுக்குள், ரசிக ரஞ்சனி சபாவில் டி. வி. சங்கரநாராயணன் பாடக் கேட்டேன். அப்படியே மணி அய்யர் மாதிரியே ராக ஆலாபனை, சுவரப் பிரஸ்தாரம் எல்லாம் பாடினார். அவர் தகப்பனார் வேம்பு அய்யரும் அன்று வந்திருந்தார். அவரிடம், '''என் துக்கம் எல்லாம் இன்றுதான் அடங்கியது!'' என்று மனம் விட்டுச் சொன்னேன்.

நிறையப்பேர், சங்கரநாராயணன் மதுரை மணி அவர்களின் கார்பன் காப்பி என்று குறை கண்டார்கள். அவருக்கு எதிர்காலம் இல்லை என்று சொன்னவர்கள்கூட உண்டு. இவருக்கு என்று ஒரிஜினாலிடி இல்லை என்று சொன்னவர்களும் உண்டு. அதனாலேயே டி. வி. எஸ். ,மதுரை மணி அவர்கள் மாதிரிப் பாடக் கூடாது என்று தீர்மானித்து, ஒரிரு தடவை வேறு பாணியில் பாட ஆரம்பித்தார். ஜி. என். பி. பாணியில் கூடப் பாடியிருக்கிறார்! ஆனால் அது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. குருவின் பாணியை டெவலப் செய்யாமல் வேறு வேறு பாணியில் போய்ச் சிக்கிக் கொள்கிறாரே என்று நான் வருத்தப்பட்டதுண்டு.

சங்கரநாராயணனிடம் சுருதி சுத்தம், குரல் கம்பீரம் (ரேஞ்ச்) குரல் வளம் எல்லாம் இருக்கின்றன. இதை அவரே உணர்ந்தபோது, சரியான ஒரு நிலை எடுத்தார். அவருடைய அங்கீகரிக்கப்பட்ட, மதுரை மணி பாணிக்கே மறுபடி வந்தார். இப்போது தன்னுடைய பாணி என்று ஒன்றை நிலைநாட்டி வருகிறார். இது உன்னதமான தீர்மானம். அவரே தனக்குச் சரி என்று தீர்மானித்து எடுத்த முடிவு.

சங்கரநாராயணன் இன்றைக்கு இருக்கிற சிறந்த சங்கீதக் கலைஞர்களில் ஒருவர். பழகும் விதத்திலும இவரது பவ்யமும் சௌஜன்யமும் குறிப்பிடத்தக்கவை. மகிழ்ச்சிகரமான, கவர்ச்சிகரமான இளைஞர். மதுரை மணி அவர்கள் ஜனரஞ்சனி, ஜயந்தசேனா என்று நிறைய ராகங்களைப் பிரபலப்படுத்தியவர். சங்கரநாராயணனும் விஷ்ணுப்ரியா, மோகன கல்யாணி என்று பலவற்றைப் பாடிக் கலகலப்பு ஏற்படுத்தி வருகிறார். சுகானுபவத்தோடு பாடுகிறார். பக்கவாத்தியக்காரர்களைப் பிரமாதமாக ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதில் சங்கரநாராயணனும் மதுரை மணி அவர்கள் மாதிரிதான்.....''

—திரு வி. ராமமூர்த்தி, ஐ.ஏ.எஸ்.

★

இங்கிலீஷ் நோட்டில் ஒரு குட்டிக் கதை

● மதுரை மணி அவர்களின் இங்கிலீஷ் நோட் பிரபலமானது. இதற்குப் பின்னுல் ஒரு குட்டிக் கதை இருக்கிறது.

புல்லாங்குழல் மேதை பல்லடம் சஞ்சீவ ராவ் அதை மெதுவான நடையில் வாசித்துக் கொண்டிருந்தாராம். மதுரை மணி அவர்கள் அவரிடமே அதைக் கேட்டு, ஸ்வரங்களாக மாற்றிப் பாடத் தொடங்கினர். அவர் பாடி, அந்த நோட் பிரபலமாகி விட்டது. ''உங்களுடையதைத்தான் பாடுகிறேன் என்ருராம் மதுரை மணி. ''என்னுடை நோட்டு இப்ப உன்னுடை நோட்டாப் போச்சு!'' என்ருராம் சஞ்சீவ ராவ், கேலியாக.



தட் இன்ஃப்ளுயன்ஸ். அந்தப் பாதிப்பே இல்லாமல் நான் பாடினுல் அது தப்பு.

நீங்கள் இப்படிப் பாடுவதை விமர்சகர்கள் தான் குறை காண்கிருர்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ?

ரொம்ப கரெக்ட். — பழைய தலைமுறையும் சரி, புதிய தலைமுறையும் சரி, அதை ரசிக்கவே செய்கிருர்கள். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சந்தோஷத்துடன், முக மலர்ச்சியுடன் ஒருவரை யொருவர் பார்த்து அங்கீகாரத்துடன் புன்னகை புரிந்து களிக்கிருர்கள். இப்படி வேண்டுமானுல் வைத்துக் கொள்ளலாம்: கிரிட்டிக்குகள் கிரிடிஸைஸ் பண்ணும் அம்சத்தை ரசிகர்கள் என்ஜாய் பண்ணுகிருர்கள். அப்படி மாமா மாதிரியே பாடுவது என்பது பர்ஃபெக்ஷன் அடைந்த நிலை. அதுதான் ஐடியல். அது மாதிரியே எனக்குப் பாட வந்து விட்டால் அது பெரிய சாதனை. அது பெரிய பாக்கியம்.

இசைக்காக ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் ஒதுக்குகிறீர்கள்?

ஊரில் இருக்கிறபோது காலையில் பூஜையின்போது பாடுவேன். மறுபடி மாலையில் சாதக முறையில் நானும் அப்பாவும் (டி.எஸ். வேம்பு ஐயர்) இரண்டு இரண்டரை மணி நேரம் பாடுவோம். இதற்கு ஒரு சிறிய ஆடியன்ஸ் வருவதுண்டு.

ஒரு நாள் பீம்ஸேன் ஜோஷியை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்... எந்த வட இந்தியப் பாடகரை மிக விரும்பிக் கேட்பீர்கள்? என்ன காரணத்துக்காக?

பீம்ஸேன் ஜோஷியையும் அமீர்கான் அவர்களையும் ரசித்துக் கேட்பேன். ஹிந்துஸ்தானி சங்கீதத்தை சுருதி சுத்தம், மெத்தட், டெக்னிக் இவற்றுக்காகவும் கேட்கிறேன். அவர்களது வாத்திய இசையில் எனக்கு நாட்டம் இல்லை. இந்துஸ்தானி கலைஞர்களில் ஆண் பாடகர்களைத்தான் விரும்பிக் கேட்பேன். ஸிலபிள்ஸ் சொல்லாமல் அகாரமாகப் பாடுகிருர்களே அதை ரசிப்பேன். அந்த மாதிரி முறையைக் கையாளலாம் என்றுகூடத் தோன்றுகிறது. எனக்கு அந்த இன்ஃப்ளுயன்ஸும் உண்டு. வேண்டுமானுல் அதையும் கிரிட்டிக்குகள் குற்றப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

கர்நாடக இசையை இளைஞர்களும் ரசித்துக் கேட்க உங்கள் யோசனை என்ன?

1. நல்ல காத்திரமான சாரீரத்துடன், சுருதி சேர்ந்த நல்ல குரல் வளத்துடன் கூடிய இசையைக் கலைஞர்கள் வழங்கவேண்டும்.
2. பாடுபவர் பியூரிட்டி, கிளாஸிஸம், ரசிகர்களின் எதிர்பார்ப்பை உணர்ந்து பாடும் கெட்டிக்காரத்தனம் இவற்றில் சற்று நம்பிக்கை உள்ளவராக இருக்க வேண்டும்.
3. முக்கியமாகத் தவறுகள் வித்துவான்களிடம்தான் இருக்கின்றன. ரசிகர்களிடம் அல்ல என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.
4. கிளாஸிகல் மியூஸிக் சக்தி வாய்ந்த ஸினிமா லைட்-மியூஸிக் இவற்ருேடு போராட வேண்டி யிருக்கிறது. அதனுல் ஆடியன்ஸைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் ஈர்க்க வேண்டி யிருக்கிறது. அதைத் தக்க வைத்துக் கொள்வதிலும் பெருக்கிக் கொள்வதிலும் இசைக் கலைஞர்கள் தம் திறமை முழுவதையும் காட்ட வேண்டும். கிளாஸிகல் மியூஸிக்கின் தரத்தைக் குறைக்காமலே இதைச் செய்ய முடியும்.
5. இந்தக் காலத்தில் பிரபல ஸினிமா இசை அமைப்பாளர்கள் சொன்னுல் மக்கள் அதைக் கவனிக்கிருர்கள். ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொள்கிருர்கள். அவர்கள் இசை அமைக்கும் படத்தில் ஒரே ஒரு பாட்டாவது சுத்தமான கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்ட பாடலாக அமைக்கலாம்.
6. கடைசியாக, நாம் நன்ருகப் பாடினுலே போதும். ஜனங்கள் நிச்சயம் வருவார்கள். வந்து கேட்பார்கள்!

கனடாவிலும் அமெரிக்காவிலும், மலேசியா சிங்கப்பூரிலும் நிறையத் தடவைகள் கச்சேரி செய்திருக்கிறீர்களே - ஏதாவது நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகிறதா?

● 75ல், க்ளீவ்லண்ட் அருகில் டேடன் என்னுமிடத்தில் கச்சேரி முடிந்ததும் ஒரு ரசிகர் எழுபத்தைந்து டாலருக்கு ஒரு செக் எழுதி, ''நீங்கள் பாடிய பேகடா ராகத்துக்கு இது ரொம்பக் குறைச்சல் தான். இருந்தாலும் இது உங்கள் பேகடாவுக்காக!'' என்று கொடுத்தார். அதை நான் அப்படியே நிர்வாகிகளிடம் கொடுத்து விட்டேன். அதற்குப் பிறகு அந்த ரசிகருக்கு

'பேகடா சுவாமிநாதன்' என்றே பெயர் வந்து விட்டது!

● நியூ ஹாம்ஷயரிலுள்ள, புகழ்பெற்ற ஐவி லீக் டார்ட்மத் கல்லூரியில் என்னைத் தென் இந்திய சாஸ்திரீய இசை என்ற தலைப்பில் உரையாற்றச் சொன்னது மறக்க முடியாத நிகழ்ச்சி.

● இங்கே சென்னையில் 1980ல், அதே மாதிரி, 'ஆடமோடி கலதே' பாடியதும் மகிழ்ந்துபோன டாஃபே மகாதேவன், உடனே ஒரு வெண் பட்டு வாங்கி வரச்செய்து சந்தோஷத்துடன் எனக்குப் போர்த்தினார்.

● எதிர்பாராமல் கிடைத்த ஒரு மிகப் பெரிய பரிசும் உண்டு. மாம்பலம் காசி விசுவநாதர் கோவிலில் காஞ்சிப் பெரியவரின் ஜெயந்தியின்போது பாடியவுடன், "பெரியவர்கள் இதை உங்களுக்காக கொடுத்தனுப்பியிருக்கிறார்கள்!" என்று சொல்லி, சந்தன மாலையும் அணிவித்து, சால்வையும் போர்த்தினார்கள்.

● பாலக்காடு மணி ஐயர் ஒருமுறை எனக்குப் பக்க வாத்தியம் வாசித்தார். நானோ இளைஞன். அவரோ புகழின் உச்சியில் இருந்த மிகப் பெரிய கலைஞர். "ஒன்றும் பயப்படாதே... நான் பாலக்காடு மணி வாசிக்கிறேன் என்ற யோசனையே இல்லாமல் நீ பாட்டுக்குப் பாடு!" என்றார்.

சென்ற ஆண்டு டிஸம்பர் சீஸனில் மியூசிக் அகாடமியில் சங்கரநாராயணன் பாடிய கரகரப்ரியா ராக ஆலாபனை ('ராமா நீயெட') கீர்த்தனைக்குப் பிறகு கிடைத்த இடிமுழக்கமான அப்ளாஸ் இன்னும் ரசிகர்களுக்கு மறந்து போயிருக்காது. "அப்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?" என்று டி. வி. எஸ்.ஸைக் கேட்ட போது: "அதைக் கேட்டு நானே சற்றுப் பரவசமாகி, நெகிழ்ந்துபோய், ஒரு கணம் அடுத்த வரி பாடக்கூட முடியாமல் திணறிப் போனது—

" 'நோட் பாடுங்கள்', 'எப்போ வருவாரோ' பாடுங்கள்!" என்று அன்றைக்கு ரசிகர்கள் மியூசிக் அகாடமி சரித்திரத்திலேயே நடந்திராத அளவுக்கு அங்கங்கே எழுந்து நின்று கேட்டுக் கொண்டது

"இரண்டாவது முறையாக அகாடமியில் மிகச் சிறந்த வித்துவான் பரிசைப் பெற்றுக் கொண்டது—

"இவை என்றும் மறக்கவே முடியாதவை" என்றார் திரு சங்கரநாராயணன்.

மதுரை மணி அவர்களின் சகோதரி (சங்கரநாராயணனின் தாயார்) நன்றாகப் பாடுவாராம். அப்பா திரு டி. எஸ். வேம்பு அய்யர் குருவுடன் சேர்ந்து நிறையப் பாடியிருக்கிறார். மனைவி விஜயலட்சுமி சங்கரநாராயணன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முறைப்படி இசைபயின்று பட்டம் பெற்றவர். அப்படி இருக்கும்போது, துருதுருவென்று வளையவரும் பெண் அம்ருதாவும் நாளைக்கு இசை உலகை ஒரு கலக்குக் கலக்கினால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!

பேட்டி: சாருகேசி

மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்: உத்ரா

இந்திரா விரும்பிய கவிதை



வழிகாட்டும் வெளிச்சம்

உன் குரலுக்கு யாரும்
செவிசாய்க்க வில்லையெனில்
தனியாய்ப்
பயணப்படு!

❊

அச்சத்தில் ஊமையாகி
அவர்கள்
முகந்திருப்பிக் கொண்டால்—
ஓ!
உதவியற்ற உயிரே!
தனிமையில்
நீ
உள்மனம் திறந்து
உரக்கப் பேசு

❊

நீ
பாலை வனத்தில்
பயணப்படும் போது—
அவர்கள்
கடுங்கானகத்தே உனைக்
கைவிட்டு விட்டால்—
ஓ!
உதவியற்ற உயிரே!
ரத்தக்கோடு பதிந்த
பாதையில்
அந்த
உறுத்தும் முட்களின் மேலே
உறுதியாய் அடியெடுத்து வை!

❊

தனியாய்
பயணப்படு.


❊

புயல் பயமுறுத்தும்
இரவுகளில்—
அவர்கள்
உனக்கு வேண்டிய வெளிச்சத்தை
உயர்த்தவில்லை யென்றால்—
ஓ!
உதவியற்ற உயிரே!
அந்த
மின்னலிலும்
ரணங்களிலும்
உன்
இதயத்தைப் பற்றவைத்து
தீபமாய் ஏற்றிக்கொள்!

❊

பிறகு நீயே
வழிகாட்டும் வெளிச்சமாய்
வாழ்வாய்!

மூலம்: ரவீந்திரநாத் டாகூர்
திருமதி இந்திரா காந்தியின் ஆங்கில
மொழிபெயர்ப்பிலிருந்து
தமிழாக்கம்: வைரமுத்து



சரண்சிங்கை வன்மையாகக் கண்டித்துள்ள ராஜ்நாராயண் தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிடலாம் — செய்தி





கல்கி

1984 டிசம்பர் 2

மலர் : 43 இதழ் : 18

ரக்தாக்ஷி கார்த்திகை 17



சிந்தித்துச் செயல்படுவோம் – 1

ஸ்திரத் தன்மையும் அனுதாப வோட்டும்

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குகிறது. தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலும் சேர்ந்து நடக்கிறது. நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டிய மிக முக்கியமான தருணம் மறுபடியும் வந்துவிட்டது.

ஆளும் கட்சிகள் ஒரு பக்கம்; எதிர்க் கட்சிகள் மறுபக்கம். இவர்களுக்கோ அவர்களுக்கோ வோட்டுப் போடுவதால் லாப நஷ்டங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையில் இடையிலே நாம்.

ஆளும் கட்சிகள் என்ன சொல்கின்றன? ஒன்று அனுதாப அலை; இரண்டு ஸ்திரத்தன்மை. இந்த இரண்டையும் தவிர விசேஷமாக எதையும் இவர்களால் கூற முடியாது. 'அதைச் செய்தோம்', 'இதைச் செய்தோம்' என்பார்கள். வாஸ்தவம்தான். ஆனால் ஆட்சியில் இருக்கும்போது அதையும் இதையும் செய்ய வேண்டியது இவர்கள் கடமை. இதற்காக இவர்கள் கட்சிப் பணத்தையோ சொந்தப் பணத்தையோ செலவழிக்கவில்லை. மக்களின் வரிப் பணத்தைத்தான் பயன்படுத்தினார்கள். எனவே ஆட்சியில் இருந்தபோது கடமையைச் செய்த தற்காக இவர்கள் வோட்டுக் கேட்பது நியாயமல்ல. அதற்காக வோட்டுப் போடுவதும் தர்மமல்ல

ஆட்சியில் இருந்தபோது இதைச் செய்தோம் அதைச் செய்தோம் என்கிறார்களே, அப்படிச் செய்தபோது இவர்கள் ஆட்சியில் லஞ்ச ஊழல் இல்லாம லிருந்ததா? வரிப் பணம் விரயமாகாமலிருந்ததா? காரியங்கள் சுறுசுறுப்பாக நடந்தனவா? தொழில் உற்பத்தி அதிகரித்ததா? விலைவாசி குறைந்ததா? அல்லது ஸ்திரப்படவேனும் செய்ததா? வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்ததா? எழுத்தறிவற்ற மக்கள் எண்ணிக்கை குறைந்ததா? அண்டை நாடுகளுடன் நட்புறவு வளர்ந்ததா? உள்நாட்டில் அமைதி நிலவியதா? வரிச் சுமை அதிகரிக்கா திருந்ததா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் 'ஆமாம்' என்று பதில் கிடைத்தால்தான் இவர்கள் தொடர்ந்து நாட்டை ஆளத் தகுதி பெற்றவர்களாகிறார்கள். ஆனால் நமக்குக்கிடைக்கும் பதிலோ சர்வ நிச்சயமாக 'இல்லை, இ ல்லவேஇல்லை' என்பது தான்! அபரிமிதமான விளைச்சல் இருந்தும் அசாதாரண விலைவாசி உயர்வு என்ற உலக மகாசாதனையை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். இது போன்ற கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறக்கூடிய நெகடிவ் சாதனைகள் இவர்களது ஆட்சியில் எத்தனை எத்தனையோ!

அனுதாப அலை இருக்கிறது. உண்மை. அனுதாபப்பட்டுக் கண்ணீர் விடலாம், இரங்கல் பா எழுதலாம். ஆனால் தனி ஒருவர் மீதுள்ள அனுதாபம் கருதிப் பொன்னான வாக்கை சிறந்த கொள்கைகள் அற்ற ஒரு கட்சிக்கு அளிப்ப தும் திறமையற்ற ஆட்சியை மறுபடி பதவியில் அமர்த்துவதும் வடிகட்டின முட்டாள்தனம்.


அடுத்த வாதம் ஸ்திரத்தன்மை. எதற்கு ஸ்திரத்தன்மை? மோதிலால் நேருவின் வாரிசுகளே தொடர்ந்து இந்த நாட்டை ஆண்டு வருவது ஒன்றில்தான் ஸ்திரத்தன்மையைக் காண்கிறோம். மற்றபடி அந்தக் கட்சியும் சரி, ஆட்சிகளும் சரி உட்பூசல்களாலும் திறமை யின்மையாலும் கலகலத்துப் போயிருக்கின்றன. ஸ்திரத்தன்மை என்பது விலைவாசியில், உள்நாட்டு அமைதியில், அண்டை நாட்டுடன் நட்புறவில், ரூபாயின் மதிப்பில் காட்டப்பட வேண்டுமே தவிர பரம்பரை ஆட்சி முறையில் அல்ல. இந்தியா தேசம் ஒரு தனியார் கம்பெனி அல்ல; நேரு குடும்பத்தினர் அதன் பரம்பரைச் சொந்தக்காரர்களும் அல்ல.


இந்தச் சூழலில் யாருக்கு நம் வோட்டு?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற

தாயென்று கும்பிடடி பாப்பா –பாரதியார்

சாராயத் தயாரிப்பில் சுறுசுறுப்பு!





● பீஹார், உத்தரப்பிரதேச மாநிலங்களி லிருந்து தமிழக அரசு 15,000 டன்கள் சர்க்கரை ஆலை உப உற்பத்திப் பொருளான ''மொலாஸஸ்'' வரவழைக்க ஏற்பாடு செய் துள்ளது. இந்த மொலாஸஸ் பற்றாக் குறையால் சாராய உற்பத்தியும் விநியோக மும் பெருமளவு பாதிக்கப்பட்டதாலேயே இந்தச் சுறுசுறுப்பான நடவடிக்கை!

மின்சார உற்பத்திக் குறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் இதே போன்ற ஒரு சுறுசுறுப்பான நடவடிக்கை தூத்துக்குடிக்கோ அல்லது எண்ணூர் அனல் மின் நிலையத்துக்கோ நிலக்கரி சப்ளை செய்ய வும் எடுக்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

சென்னை-102 எஸ். செல்லம்மரன்

● நெசவாளர்கள் நிலை உண்மையிலேயே நெஞ்சை உருக்குவதாகத்தான் உள்ளது. கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஒண்டிப் புதூரில் நெசவாளர்கள் நிறைந்திருந்தனர். இரவுபகலாக அவர்கள் நெய்யும் தறிகளின் சத்தம் சில ஆண்டுகளுக்கு முன் அதிகமாகக் கேட்டது. ஆனால் இன்று அத்தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகப் பலர் அத்தொழிலை விட்டு விட்டனர். ஒரு சிலர் வேறு இடத்துக்குக் குடிபெயர்ந்து விட்டனர். மூன்று கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இருப்பினும் விசைத்தறிப்போட்டி நூல் விலையேற்றம் முதலியவை அவர்களைப் பெரிதும் பாதித்துள்ளன. இங்குள்ள நெச வாளர்கள் சங்கம் பலமுறை போராட்டங்கள் நடத்தியும் அரசு உணர்ந்த பாடில்லை.

கோவை என். பாலகிருஷ்ணன்

● பூர்ணம் விசுவநாதனின் நிகழ்ச்சியை வானொலியில் கேட்காமல் விட்டு விட் டோமே என்று வருத்தமாக இருக்கிறது. அவரது அனுபவங்கள் அவர் பூரணமான ஒரு கலைஞர் என்பதை நிரூபிக்கின்றன.

சென்னை-5 எஸ். சம்பத்குமார்

● தீபாவளிப் படங்களின் விமரிசனங்களைப் பார்க்கும்போது எது நல்ல படம் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அதற்கு உதவிய வேதாளத்திற்கு என் நன்றி.

மே. மாம்பலம் எஸ். மோகன்

● 'கல்கி' 18.11.84 இதழில் திரு மாலன் எழுதும் 'இந்தியாவின் இந்திரா' எடுத்த எடுப்பிலேயே சிந்தனையைத் தொடுகிறது. இந்திராவின் பிஞ்சு நெஞ்சிலேயே தேசபக்திக் கனல் மூண்டெழுந்து அயல்நாட்டுப் பொம் மையைக் கொளுத்தும் அளவுக்கு வளர்ந்த சம்பவப் பின்னல் உணர்ச்சி ஊட்டுகிறது.

சென்னை-18 புத்தனேரி சுப்பிரமணியம்

● 'மலை உச்சியில் பெய்த மழையானாலும் படிப்படியாகச் சமவெளியில் பாய்ந்து பூமிக் கடியிலும் சென்ற பிறகு கிணறு தோண்டி நீர் இறைக்கும்போது 'இது மலை உச்சியில் பெய்த மழை நீர் ஆயிற்றே' என்று யாரா வது எண்ணிப் பார்ப்பார்களா?' என்று சொன்ன மேதையின் அந்த வார்த்தை எல்லா விதமான கண்டுபிடிப்புகளுக்கும் பொருத்த மானதே.

முசப்பேர் கே. எஸ். எஸ். மணியன்

● கைத்தறி நெசவாளரின் நிலையைச் சீராக நெய்து காட்டியிருந்தீர்கள். ஒவ்வொருவரும் அனுதாபப்படுகிறார்களே தவிர ஆக்கபூர்வ மாகச் செயலில் ஈடுபடத் தயங்குகிறார்களே! பூனைக்கு யார் மணி கட்டுவது!

செம்பேர-84 பொடுசி

● பொய்த்துவிடும் பாசங்களையும், நடிப்பு உறவுகளையும், இதயத்தை மறந்துவிடும் மனிதர்களையும் ஒன்றுசேர்த்துப் பின்னப்பட் டிருந்த 'முள்ளாக மாறும் இமைகள்' போட்டிக் கதை வித்தியாசமாக இருந்தது.

திண்டுக்கல் எஸ். பி. தியாகராஜன்

● 9-11-84 அன்று மதுரையில் திரைப் படம் பார்த்துக் கொண்டு இருந்தேன். 'அன்னை இந்திராவின் மரணம்' பற்றிய செய்திப் படம். மறைந்த பிரதமருக்குப் பலர் அஞ்சலி செலுத்தினர். ஜனாதிபதி ஜெயில்சிங் அஞ்சலி செலுத்தியபோது திரையரங்கம் முழுதும் பலத்த எதிர்ப்புக் குரல்! ரொம்ப வேதனையாக இருந்தது. சீக்கியத் தலைவர்கள் திரையில் தோன்றும்போதெல்லாம் இதே போலக் கூச்சல். இது தேசிய உணர் வுடைய எவருக்குமே மனவேதனை அளிக்கக் கூடியது. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை நாம் பின்பற்றுவதே அன்னை இந்திராவுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி. அதை விடுத்து வெறிக் கூச்சல், வன்முறை, பகை உணர்வு போன்றவை நம்மை அடிமை கொண்டுவிட் டால் உலகம் நம்மை இகழும். பலவீனப் பட்டுப் போவோம்.

சோழவந்தான் தென்கரை சீனிவாசன்

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)



—''இட்லிக்குள்ளே புளியங் கொட்டை வச்சிருப்பாங்க — சமயத்திலே வடைக்குள்ளே காசு வச்சிக்கூட ஏமாத்திடுவாங்க... உஷாரா நடந்துக்க!''

''பந்திப்பாயிலே உட்கார்றப்போ பார்த்து உட்காரு... பாய்க்கு அடியிலே வறுத்த அப்பளத்தை வச்சிக் கேலி பண்ணுவாங்க!''

—''அதே மாதிரி காபியிலே சர்க்கரைக்கு பதிலாய் மிளகாய்த்தூள் கூடப் போட்டிருப்பாங்க!''

—திருமணம் முடிந்து முதல் அழைப்புக்காகப் பெண் வீட்டுக்குக் கிளம்பிய பொழுது ஊரில் உறவுகள் சொல்லிய அறிவுரைகள் மனத்துக்குள் மறுபதிப்பாகிக் கொண்டிருக்க, ராஜா பெண் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான்.

—என்னென்னவோ விநோதமான சிந்தனைகள் மனத்துக்குள் விரிந்திட, தன்மானம் தலைதூக்கி நின்றது — 'எந்த வகையிலும் ஏமாந்து விடக் கூடாது!'

—தனக்குத் தோழனாக இருந்தவனைக் கண்களால் அருகழைத்தான். அடிக்குரலில் கிசுகிசுத்தான் — ''மகேந்திரா, இன்னும் கொஞ்ச நாழியில் சாப்பிடக் கூப்பிடுவாங்க... நாம உஷாரா இருக்கணும்... எதிலும் ஏமாந்திடக் கூடாது... எனக்கு வைக்கிற ஒவ்வொரு ஐட்டத்தையும் நீ டெஸ்ட் பண்ணினதுக்கு அப்புறம் தான் நா சாப்பிடுவேன்...ஓகே?''

—''ஓகேடா, நீ கவலைப்படாம இரு... அய்யாவுக்கு இதிலே பலமுறை அனுபவமுண்டு... ஐ மீன், ரொம்பப் பேருக்கு நான் மாப்பிள்ளைத் தோழனா இருந்திருக்கேன்!''

''வாங்க மாப்பிள்ளே... சாப்பிட்டுவிட்டு வந்திடலாம்!'' — அழைப்பு வந்தது.

-''சரிங்க!'' — கிளம்பினான். கைகழுவி விட்டுப் பந்தியில் வந்தமர்ந்தபோது மனத்துக்குள் மரவட்டை ஊர்ந்தது. எதையும் தொடாமல் மகேந்திரனைப் பார்த்தான். அவனும் கண்ணடித்துச் சிரித்தான்.

—''என்ன மாப்பிள்ளே, அப்படியே உட்கார்ந்திட்டீங்க... சாப்பிடுங்க!'' — என்றது பரிமாற நின்றிருந்த ஒரு வயதான அம்மா.

—''ஒண்ணுமில்லீங்க... பரிகாசம் பண்றதுக்காகச் சாப்பாட்டுல ஏதாவது கோளாறு பண்ணியிருப்பீங்களோன்னு மாப்பிள்ளை பயப்படுறாரு!'' — மகேந்திரன் விளக்கம்.

—உடனே அந்த வயதான தாயின் முகம் இறுகிப் போகக் கண்களில் நீர் துளிர்த்தது—

—''நீங்க பயப்படாம சாப்பிடுங்க மாப்பிள்ளே — இந்த ஊரில் மாப்பிள்ளைகளைப் பரிகாசம் பண்ற வழக்கம் என் கல்யாணத்தோடு நின்னுப் போய்டுச்சி!''

''நீங்க என்னங்க சொல்றீங்க?''

''ஆமாந்தம்பி... எனக்குக் கல்யாணம் முடிந்து முதல் அழைப்புக்கு மாப்பிள்ளை வந்திருந்தப்போ பரிகாசத்துக்காகச் சில பெண்கள் இட்லிக்குத் தொட்டுக்க வெண்ணெய்க்குப் பதிலா நீர்த்த சுண்ணாம்பை வச்சிட்டாங்க. அதை அவர் தொட்டுக்கிட்டு ஒரு துண்டு இட்லிய வாயில் வச்சதும் எல்லாப் பெண்களும் 'கொல்'னு சிரிச்சிக் கேலி பண்ணினாங்க... அந்த அவமானத்தை அவரால தாங்கிக்க முடியலே... கோபமா எழுந்திரிச்சிப் போயிட்டாரு... போனவர் போனவர்தான்... திரும்பவே இல்லே. 'என் முடிவு இந்தக் கிராமத்துக்கு ஒரு பாடமாய் இருக்கட்டும்'!னு லெட்டர் எழுதிட்டாரு. அதிலேர்ந்து இந்த ஊர் மக்கள் மாப்பிள்ளையைப் பரிகாசம் பண்ற வழக்கத்தையே நிறுத்திட்டாங்க!'' முந்தானையை ஈரமாக்கினாள் அவள்.

பட்டுக்கோட்டை ராஜா

சிறிய தவறு பெரிய தண்டனை

"நீ புத்திசாலிப் பொண்ணு. ஆனால் வெறும் புத்திசாலித்தனம் மட்டும் போறாதும்மா. உங்கம்மா கூடத்தான் புத்திசாலி. நல்ல அழகு. ஆனால் என்ன பிரயோஜனம்? கூடவே நீ கட்டுப்பாடா இருக்கணும்மா. ஒரு பெண் எப்படி இருக்கணுமோ அப்படி இருக்கணும். என்ன, இதற்குமேல் எனக்கு எதுவும் சொல்லத் தெரியலை..."

18

-இந்துமதி

நீண்ட தூரம் கிருத்திகா ஒன்றும் பேசாமல் மௌனமாக வந்ததையும், வீட்டிலிருந்து கிளம்பு முன் நாகத்திடம் பேசியதில் முகம் மாறினதையும் கவனித்த ராம்சிங் குரலில் ஓர் ஆதங்கம் வெளிப்படக் கேட்டான்:

"ஏதாவது சரியில்லையா மேம்ஸாப்... என்னவோ போலிருக்கிறீர்களே..."

வெளி இருட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த கிருத்திகா சடாரென்று திரும்பினாள். உள்ளுக்குள்ளும் இருட்டாக இருந்ததால் ராம்சிங்கின் முகம் சரியாகத் தெரியவில்லை. அதுபோல் ராம்சிங்கிற்கும் தன் முகம் தெரிந்திருக்காது என்பதில் நிம்மதி ஏற்பட்டது. இல்லாவிட்டால் தளும்பிக் கொண்டு நிற்கும் கண்ணீரைக் கண்டுபிடித்து விட்டிருப்பான். கேள்விகள் கேட்டிருப்பான். கேள்விகளில் அனுதாபமும் ஆதங்கமும் இருக்குமே தவிர ஆர்வம் இருக்காது. தற்போதைய மனநிலையில் அந்த அன்பும், அனுதாபமும், ஆதரவும் தேவையாக இருக்க உடைந்து போகலாம். குபீரென்று உள்ளுக்குள் வேதனை படுத்திக் கொண்டிருக்கிற அத்தனை செய்திகளும் வெளிவரலாம். அம்மாவைப் பற்றிச் சொல்ல நேரிடலாம்...

கூடாது. அர்ஜுனைத் தவிர வேறு யாரிடமும் எதையும் சொல்லக் கூடாது. அதுவும் அன்பும், மதிப்பும், மரியாதையுமாகப் பழகுகிற இந்த ராம்சிங்கிடம் சொல்லவே கூடாது... இவன் மதிப்பிலிருந்து தாழ்ந்து போகக் கூடாது. கீழே இறங்கி வரக் கூடாது...

மனதிற்குள் தீர்மானமாக யாரிடமும், எதையும், எப்போதும் எந்தக் காரணத்தினாலும் சொல்வதில்லை என்று முடிவு செய்த பின் லேசாய்ப் புன்னகையை வரவழைத்துக் கொண்டவளாகச் சொன்னாள்: "ஒன்றுமில்லையே ராம்சிங். சாதாரணமாகத்தானே இருக்கிறேன்..."

"ஓ... இல்லை மேம்சாப். நீங்கள் பொய் சொல்கிறீர்கள். வீட்டை விட்டுக் கிளம்பு முன் அந்த நாகம் ஏதோ சொன்னதினால் தான் நீங்கள் இப்படி மாறிப் போய் விட்டீர்கள். தமிழ் தெரியாததால் என்ன சொன்னான் என்பது எனக்குப் புரியவில்லை."

அதைக் கேட்டதும் நிஜமாகவே வாய் விட்டுச் சிரித்தாள் கிருத்திகா. மனசு சட்டென்று லேசாகச் சொன்னாள்:

"ஓ... அது ஒன்றும் பெரிய விஷயமில்லை ராம்சிங். சாரில் உங்களை ஏர்போர்ட் அழைத்துக் கொண்டு வரலாம் என்று பார்த்தால் கார் இல்லை என்கிறான். அம்மா எடுத்துக் கொண்டு போய் விட்டதாகச் சொல்கிறான். அதனால் சற்றுக் கோபம் வந்து விட்டது."

அந்தச் சிரிப்பிலும், பேச்சிலும் நம்பிக்கை ஏற்பட "நிஜமாக ஒன்றுமில்லையே..." என்று ராம்சிங் கேட்டு,

"நிச்சயமாய் ஒன்றுமில்லை" என்று கிருத்திகா சொல்லி முடித்த போது டாக்ஸி விமான நிலையத்திற்குள் நுழைந்தது.

ராம்சிங் பாதுகாப்புப் பரிசோதனைக்குப் போவதற்கு முன்—

'ஜாக்கிரதை ராம்சிங். அப்பாவை நீங்கள் நன்றாகக் கவனித்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. இத்தனை வருடங்களாக நீங்கள் தான் கவனித்துக் கொண்டு வருகிறீர்கள். நான் இப்போது அறிமுகமானவள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அது அதிகப்பிரசங்கித்தனமாக இருக்—"

"ஓ... என்ன இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் மேம்ஸாப். நீங்கள் சொல்வதை நான் தப்பாக எடுத்துக் கொள்வேனா... எடுத்துக் கொள்ளத்தான் முடியுமா... என்னுடைய உரிமை வேறு, தங்களுடைய உரிமை வேறு இல்லையா ... படா ஸாப்பை ஜாக்கிரதையாக, சிரத்தையாகப் பார்த்துக் கொள் ராம்சிங் என்று நீங்கள் அதட்டிக் கூடச் சொல்லலாமே..."

அந்தப் பதில் நெஞ்சைத் தொடச் சற்று உணர்ச்சி வசப்பட்ட குரலில் சொன்னாள்:

நெருப்பு மலர்

''உங்கள் எல்லோருடைய இந்த அறிமுகம். அன்பு கிடைத்ததற்கு நான் பூர்வ ஜென்ம புண்ணியம் ஏதோ செய்திருக்க வேண்டும் ராம்சிங்...''

''நீங்கள் மட்டுமில்லே மேம்ஸாப்..' நாங்களும் கூடத்தான் புண்ணியம் பண்ணியிருக்கிறோம்...''

அதற்குள் இன்னொரு முறை பாதுகாப்புப் பரிசோதனைக்குக் கூப்பிட 'சரி, ராம்சிங் நீங்கள்புறப்படுங்கள். அர்ஜுனிடமிருந்து எந்தத் தகவல்கிடைத்தாலும் எனக்குத்தெரியப்படுத்துங்கள். எங்கேஇருந்தாலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நான் உங்களை போனில் கூப்பிடுகிறேன். அப்போது அட்டாவைப் பற்றி. அர்ஜுனைப் பற்றியெல்லாம் சொல்லுங்கள்...''

''ஆகட்டும் மேம்ஸாப்! ஜாக்கிரதையாக இருங்கள். அர்ஜுன்சாப் சீக்கிரம் வந்துவிடுவார். கவலைப்படாதீர்கள். பெரியவரை உங்களுடன் பேசச் சொல்கிறேன். வரட்டுமா... வருகிறேன் மேம்ஸாப்...''

ராம்சிங் உள்ளே போகிறவரைகையாட்டிவிட்டு மறைந்ததும் இவள் தன்னுடைய உற்ற நண்பனை. பாதுகாப்புத் துணையை. நெருங்கிய உறவினனைப் பிரிந்த மாதிரி உணர்ந்தாள். மனசு கனமாயிற்று. சொல்லத் தெரியாத துக்கம் ஒன்று நெஞ்சை அழுத்தியது. விமான நிலையத்தை விட்டு வெளியில் வந்து பஸ்ஸிற்காகக் காத்து நின்றபோது



'இனி நாம் செய்ய வேண்டியது என்ன...' என்று யோசித்தாள்.

முதல் காரியமாக அம்மாவை விட்டுப் பிரிவது என்கிற முடிவுக்கு வந்தாள். இனி அம்மாவுடன் இருப்பது என்பது சாத்தியமில்லாத விஷயம். அர்ஜுன் பேசிப் பேசி மட்டுப்படுத்தி வைத்திருந்த வெறுப்பும், கோபமும் அதிகமாயிற்று. சீ! என்ன பெண் இவள்... பெண் என்பது இருக்கட்டும். என்ன தாய் இவள்...

அர்ஜுன் ஐயம் ஸாரி. நீங்கள் சொல்லிக் கொடுத்த மாதிரி நடக்க என்னால் முடியவில்லை. அதுவும் யாருக்குப் பயந்து நான் டில்லியை விட்டு ஓடி வந்தேனோ அவனுடன் அம்மா மகாபலிபுரம் போகிறான். வீட்டில் தங்குகிறான்... இன்னும்... இன்னும்... விஷ்ணுபிரசாத் அம்மாவைப் பற்றிச் சொன்ன எதுவும் பொய்யில்லை. அர்ஜுன். எல்லாமே நிஜம். அவன் காட்டிய போட்டோக்கள். சொன்ன வார்த்தைகள் அனைத்தும் நிஜம்...

இனி இதற்குமேல் நான் அம்மாவை நேருக்கு நேர் பார்த்தால் ஏதாவது கேட்க நேரிடும். இப்போதைய மனநிலையில் அவளின் மனசு புண்படும்படி பேச நேரிடும். வீணாய்ச் சண்டை போடும்படி நேரிடும். தர்க்கம் புரிய வேண்டி வரும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவளை நேரில் பார்க்கிற சக்தி என்னிடம் இல்லை. அந்த அளவிற்கு வெறுப்பும், வேதனையும் எனக்குள் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன. ஸோ— மானசீகமாக உங்களிடம் மன்னிப்பும், அனுமதியும் கேட்டுக் கொண்டு, இன்றே, இப்பொழுதே அம்மா மகாபலிபுரத்திலிருந்து திரும்புவதற்குள் நான் தனியாகப் போய் விடுகிறேன் அர்ஜுன். 'நான் திரும்பி வருகிற வரை ஒரு உதவிக்கு இருக்கட்டுமென்று' தீர்க்க தரிசியாய் நீங்கள் கொடுத்து விட்டுப் போன ஐயாயிர ரூபாய் என்னிடம் அப்படியே இருக்கிறது. அதனுடன் என்னுடைய சேமிப்புத் தொகையையும் பாங்கில் போட்டு, ஒரு கண்ணியமான, நல்ல இடமாகப் பார்த்துப் பேயிங் கெஸ்டாகத் தங்கிக் கொண்டு பின்னர் ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டும். அதற்குள் நீங்கள் திரும்பி வந்து விட்டால் கவலை இல்லை. டில்லிக்கு ஓடிவந்து கல்யாணத்தை முடித்துக் கொண்டு மிஸஸ் அர்ஜுனப்பாவாக என் கடமைகளையும், பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு விடுவேன்.

'அதற்குமுன் தங்குவதற்குநம்பிக்கையான ஒரு நல்ல இட—'

சடாரென்று அனந்தசாமியின் ஞாபகம் வந்தது. அவர் நடத்துகிற அந்த மெஸ்ஸை விட நம்பிக்கையும், பாதுகாப்புமான வேறு இடம் கிடைக்க முடியாது என்று தோன்றியது. அனந்தசாமி நல்லவர். நாணயமானவர். அப்பா உயிரோடு இருந்தபோது அவருடைய நண்பனாக வீட்டிற்கு வந்தவர். இத்தனை வயதிலும் கல்யாணம், குடும்பம் என்று எதுவுமில்லாமல் தனிக் கட்டையாக நிற்பவர். கேட்டால், ''இப்போ கல்யாணம் பண்ணிண்டவனெல்லாம்என்ன சாதித்துவிட்டான்...''என்று பதில்கேள்விகேட்டுஎல்லார் வாயையும் அடைத்தவர். துல்லியமாய்க் காவிநிற கதர் வேஷ்டி. மேலே காவி ஜிப்பா மூக்குக் கண்ணாடி. பளபளவென்ற நிறம். நல்ல உயரம். கழுத்தில் தங்கத்தில் கட்டிய ருத்திராட்ச மாலை. எப்பொழுதும் சிரித்துக் கொண்டிருக்கிற முகம். வழுக்கைத் தலை. அந்த முகத்தைப் பார்க்கிற போதெல்லாம் இவளுக்கு வெயில் காலத்தில் வண்டியில் தள்ளிக் கொண்டு போகிற மூலாம் பழத்தின் ஞாபகம் வரும்.

அப்பா செத்துப் போனதற்கு அப்புறமும் அவர் வீட்டிற்கு வருவார். வாசல் வராந்தாவிலேயே உட்கார்ந்து இவளுடன் விளையாடுவார். 'உள்ளே வாங்க மாமா...' என்று இவள் கையைப் பிடித்து இழுத்தால் கூட வராந்தாவை விட்டு நகர மாட்டார்.

''வேணும் கொழந்தே. இங்கேயே இருக்கேன்...'' என்பார்.

அவர் அப்படி இருந்ததற்குக் காரணம் அம்மா தான் என்று இப்போது தோன்றியது. அவர் வீட்டிற்கு வராமல் நின்று போனதற்கும் அம்மாவின் இந்த நடத்தைகள்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர் இவளிடம் எதையும் சொன்னதில்லை.

ஒருமுறை ஃபிஜித் தீவிலிருந்து படிக்க வந்திருந்த தன் கல்லூரித் தோழிக்குக் கல்லூரியின் ஹாஸ்டல் சாப்பாடு பிடிக்கவில்லை அங்கு தங்கப் பிடிக்கவில்லை என்கிற காரணத்தினால் இவள் அனந்தசாமியின் மெஸ்ஸில் தங்க வைக்கலாம் என்று அழைத்துக் கொண்டு பெஸண்ட் நகர் வரை போயிருந்தாள். கிட்டத்தட்ட இரண்டு, மூன்று வருட இடைவெளிக்குப் பின் அவரைப் பார்த்தது சந்தோஷமாகவும், மனத்தை நெகிழ வைப்பதாகவும் இருக்க—

''ஏன், மாமா திடீர்னு நீங்க வீட்டுக்கு வர்றதை நிறுத்திக் கொண்டு விட்டீர்கள்'' என்று கேட்டபோது கூட அவர் சரியாகப் பதில் சொல்லவில்லை.

''ப்ச்சு... இங்கேயிருந்து மைலாப்பூருக்கு ஓடி வர்றதுன்னால் கஷ்டமாக இருக்கும்மா. வயசாறது இல்லையா... உடம்பில் தெம்பு குறைகிறது. உன்னால் முடிகிற போது இனிமேல் நீ வந்து என்னைப் பார்த்துட்டுப் போயேன்...''

அதன்பின் டில்லிக்குக் கிளம்புகிற வரை பத்து நாளுக்கு ஒரு முறை இவள்தான் போய் அவரைப் பார்த்துவிட்டு வந்தாள். டில்லிக்குப் போவதைக் கூடச் சொல்லிக் கொண்டாள். அதில் அவர் சிறிதும் உடன் படாதவராகத்தான் பதில் சொல்லியனுப்பினார்.

''ஏம்மா, இங்கே காலேஜ் எதுவும் இல்லை. பட்டிக்காடுன்னு டில்லிக்கு ஓடறே.. அதுவும் வெறும் பி. ஏ. படிப்பிற்காகவா... என்னம்மா இது...''

ஒரு விநாடி மௌனத்திற்குப் பின் ஆழமான பெருமூச்சோடு...

''ம்... இது உங்கம்மா ஏற்பாடுன்னால் என்னால் எப்படித் தடுக்க முடியும்...? தடுப்பதற்கு நான் யார்...? போயிட்டு வாம்மா. ஜாக்கிரதையாக இரு. நீ புத்தி

சாலிப் பொண்ணு. ஆனால் வெறும் புத்திசாலித்தனம் மட்டும் போறாதும்மா. உங்கம்மா கூடத்தான் புத்திசாலி. நல்ல அழகு. ஆனால் என்ன பிரயோஜனம்? கூடவே நீ கட்டுப்பாடாக இருக்கணும்மா. ஒரு பெண் எப்படி இருக்கணும்மா அப்படி இருக்கணும். என்ன... இதற்கு மேல் எனக்கு எதுவும் சொல்லத் தெரியலை...''

அப்போது அவளுக்கும் தெரியத்தான் இல்லை. ஆனால் இப்போது தெரிந்தது. எல்லாம் படீரென்று புரிந்தது. நல்ல லயமான வாசிப்பின் நடுவில் வீணையில் தந்திக் கம்பி அறுந்த மாதிரி அறுந்து போயிற்று. அம்மாவிற்கும், அவளுக்குமிடையில் இருந்த அன்பு, ஆசை, பாசம், நட்பு... எல்லாமே முறிந்து போயிற்று. இந்த நாளுடன் அம்மா யாரோ, அவள் யாரோ... அவள் பின்னணிப் பாடகி புவனேஸ்வரி... நான் கிருத்திகா... வெறும் கிருத்திகா.

இரண்டு பஸ் மாறி நடந்து வீட்டிற்கு வந்த போது மணி ஏழரையாகி இருந்தது. இனி எந்த நிமிடமும் — அம்மா — இல்லை புவனேஸ்வரி வீட்டிற்கு வந்து விடக்கூடும். தனியாக இல்லை. விஷ்ணு பிரசாத்துடன் சேர்ந்து வரக் கூடும். அதற்குள் கிளம்பியாக வேண்டும்...

இவள் அவசர அவசரமாக மாடிக்குப் போய் நேற்று கொண்டு வந்து போட்ட சூட்கேசுடன், அத்தியாவசியமான இன்னும் சில பொருட்களை எடுத்துக் கொண்டு கீழே வந்த போது நாகம் சகஜமாகக் கேட்டாள்:

''என்ன கீர்த்தி, திரும்பவும் பெட்டியும், கையுமாகக் கீழே இறங்கறே...?எங்கேயாவது போகிறாயா என்ன...''

''ஆமாம் நாகம். இந்த வீட்டை விட்டுப் போகிறேன். திரும்பவும் எந்தக் காரணத்தைக் கொண்டும் இங்கே நுழைவதாக இல்லை. உன் எஜமானியம்மாள் — புவனேஸ்வரியம்மாள் வந்தால் சொல்லிவிடு. அவளின் அத்தனை சகவாசங்களும் கிருத்திகாவிற்குத் தெரிந்து விட்டதாம். அது பிடிக்காமல் இனி அவளை அம்மா என்று சொல்லிக் கொள்ளக் கூட வெட்கப்பட்டு வீட்டை விட்டுப் போகிறாளாம் என்று சொல்லிவிடு...''

நாகம் அதிர்ந்து பதறிப் போய் அவளைப் பார்த்தாள். பேச முடியாமல் நாக்கு உள்ளுக்குள் ஒட்டிக் கொள்ளக் குழறியபடி கேட்டாள்:

''எ...ன்ன... என்ன... கிருத்...திகா இது...?''

''என்ன...?'' என்று முகத்தில் ஒரு வெறுப்பு பளிச்சிடச் சட்டென்று பேச ஆரம்பித்தாள்.

''என்ன...? உனக்கு எல்லாம் தெரிந்தும் என்னிடம் கூடச் சொல்லாமல் மறைத்திருக்கிறாய்... என்னிடம் சொல்லாதது கிடக்கட்டும். அம்மாவின் உறவு என்கிறாய், சிநேகிதி என்று சொல்லிக் கொள்கிறாய். எஜமானி, என்று கடைசியில் முடிக்கிறாய். இத்தனையுமாக இருந்தும் அவள் செய்கையைத் தடுக்கவில்லை. அவள் தவறுகிறபோது கூடாது என்று தடுக்கவில்லை. நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லித் திருத்த நினைக்கவில்லை. என்ன உறவு நீ... என்ன சிநேகிதி... என்ன வேலைக்காரி... கடைசியாக என்ன மனுஷி?''

படபடவென்று பேசின கிருத்திகாவை ஒரு விநாடி மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்ற நாகம் கடைசியில் மெதுவாகச் சொன்னாள்:

''என் கீர்த்தி. என் நிலைமையில் உன்னை வச்சுப்பாரு. அதையெல்லாம் என்னால் ஏன் சொல்ல முடியாம போச்சு என்பது புரியும். யாருமில்லாத அனாதை நான். தங்குமிடமோ, சாப்பிடுகிற வழியோ அற்றவள். என்னைக் கூட்டிண்டு வந்து தங்க இடம் கொடுத்து மூன்று வேளை சாப்பாடுபோட்டு நூறு ரூபாய் சம்பளமும் கொடுக்கிறவளிடம் இதையெல்லாம் சொல்ல முடியுமா...? இல்லே சொல்லத்தான் சொல்லலாமா...?''

''எங்கே தப்பு நடக்கிறதோ, அதை எடுத்துச் சொல்கிற தைரியம் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வேண்டும்நாகம். சுய லாபங்களுக்காகப் பேசாமல் இருந்து விடக் கூடாது...'' என்று பெருமூச்சு விட்ட கிருத்திகா சற்று நிதானித்து மீண்டும் பேசினாள்:

''சரி. இனிமேல் இதையெல்லாம் பேசி எந்தவிதமான லாபமும் யாருக்குமில்லை. யார் வழியிலும் நான் இனி குறுக்கிடுவதாலும் உபயோகமில்லை. அதனால் நானே விலகிக் கொள்கிறேன். வருகிறேன். வந்தால் என்னைத் தேட வேண்டாம், கிடைக்க மாட்டேன் என்பதை மட்டும் சொல்லிவிடு...''

நாகம் அவளைத் தடுத்து நிறுத்துகிற வழி தெரியாமல் பிரமித்து நிற்க, விடுவிடுவென்று சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு படியிறங்கி ஆட்டோ பிடித்தாள் கிருத்திகா...

(தொடரும்)

சுயநலம் என்பது ஒரு சிறு உலகம். அதில் ஒரே ஒரு மனிதன் மட்டுமே வாழ முடியும்.

—நார்வே.

புளிய மரத்தின் இலையில் கூட இருவர் படுக்கலாம்; அன்பு இருந்தால்.

—இந்தியா.

தொகுத்தவர்: இ. அருள்மணி.




உள்ள மதிப்புக்கு மேல் ஒற்றை ரூபாய் கூட
தந்துவிட மாட்டாள் லலிதா...

அதனால் தான் அவள் ஸர்ஃப் வாங்குகிறாள்.

"ஆமா. ஸர்ஃப் தான் எனக்கு. அதுக்குக் கொடுக்கற பணம் முழுக்க முழுக்க மதிப்பு. அதுக்குக் குறைஞ்சு போவானேன் நான்—அதுவும் இந்த நாளிலே போய்."

இருந்தாலும், மலிவு வாஷிங் பவுடர் வாங்கினீங்கன்னா பணமிச்சம் இருக்கத்தானே இருக்கும்?

"கேலிக்கூத்து! மலிஞ்ச சரக்கு வாங்கறதுக்கும் மதிப்புள்ள பண்டம் வாங்கறதுக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் உண்டே."

ஒத்துக்கறோம். மலிவுப் பவுடர்களைவிட அதிகமா அப்படி என்ன மதிப்பு இருக்கு ஸர்ஃப்லே?

"அப்படிக் கேளுங்க. மலிவுப் பவுடரோட 1 முழுக் கிலோ பைக்குள்ளே இருக்கற அதே அளவுப் பவுடர் ஸர்ஃப் ½ கிலோ பேக்கிலே இருக்கு."

ரெண்டு மடங்கா? அதென்னமா?

"அதுதானுங்க ஸர்ஃப்! ஸர்ஃப் ½ கிலோ பேக்குலே உள்ள பவுடரை எடுத்து, மலிவுப் பவுடரோட காலியான 1 கிலோ பைக்குள் அப்படியே கொட்டினா கணக்கா பை ரொம்பிடும்."

அப்படியேதான் இருந்தாலும்...

"இருங்க. எடை பார்க்கப்போனா, ஸர்ஃப் மதிப்பு ரொம்ப ரொம்ப அதிகம்தான். ஸர்ஃப் மாதிரி வெளுப்பை எந்த மலிவுப் பவுடரும் தந்துட முடியாது. கலர்த் துணிகளோட பளபளப்பை ஸர்ஃப் மாதிரி எதுவுமே காப்பாத்தாது. என்னமா வெளுக்குது ஸர்ஃப், எங்க வீட்டுத் துணிகள் ஒண்ணொண்ணையும் புதிசுபோல சோபிக்க வைக்குது சலவைக்கு சலவை."

நியாயம் இருக்கு நீங்க சொல்றதுலே...

"சொல்ல இன்னும் எவ்வளவோ இருக்கு. கடுமான மலிவு பவுடருங்க சருமத்துக்கே கேடு. ஸர்ஃப் அப்படி இல்லே, அலசற என் கைகளைத் துளிக்கூட பாதிக்காத சுகமான பவுடர். அனுபவத்துலே சொல்றேன்."

புரியுது, நல்ல மதிப்புன்னு நீங்க எதைக் கண்டு வாங்கறீங்கன்னு தெரியுது...

"ஆமா! சொல்ப ரூபாய்களை மிச்சம் பிடிக்கறதுக்காக மாசாமாசம் இவ்வளவு அனுகூலங்களையும் கோட்டைவிட நான் தயாராயில்லே. கஞ்சத்தனமா சில்லறை சேர்க்கறதுக்கும் செழிப்பா குடித்தனம் நடத்தறதுக்கும் வித்தியாசம் என்ன, கொஞ்சநஞ்சமா!"



எடைபோட்டு மதிப்பிட்டால் புரியும்: ஸர்ஃப் வாங்குவதே புத்திசாலித்தனம்.

LINTAS SU 320 20 25 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

''அனுசூயா... என்னம்மா சொல்ற? நம்ப குடும்ப கௌரவத்தைப் பத்தி யோசிச்சியா? அவன் என்ன ஜாதி... நம்ப ஜாதியா சொல்லு, நானே பார்த்துப் பண்ணி வைக்கிறேன்...''

''ஜாதி என்னம்மா பெரிய ஜாதி? பாலாவும் மனுஷ ஜாதிதான்.. அப்புறம் வேற என்ன ஜாதி வேண்டியிருக்குது?''

கதம்பா ஆணி அடித்த மாதிரி நின்று கொண்டிருந்தாள். கஸ்தூரி திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

5

- சுபா

அனுசூயாவின் முகத்தில் கடுகடுப்பு மாறாமல் இருந்தது..

அவளுக்குப் பின்னாலேயே வந்து சேர்ந்த கதம்பா காலைக் கூடக் கழுவாமல் அனுசூயாவின் கூந்தலை உதறிச் சற்றுப் பரத்திய மாதிரி காது மறைத்துப் பின்னி விடுவதில் ஈடுபட்டிருந்தாள். அனுசூயா கொஞ்சம் சலிப்புடன் நகர்ந்து நகர்ந்து நின்றாள்.

வெளியறையில் சற்று அடங்கிய குரலில் பெரியவர்கள் பேசுவது இன்னும் கேட்டுக் கொண்டிருந்தது. சின்னச் சின்ன சிரிப்புகள். பணிந்த பேச்சுக்கள்.

கதம்பா அனுசூயாவிற்கு எடுப்பான புடவையைத் தேடினாள்.

''எல்லாம் இது போதும்.''

அனுசூயா எடுத்த கருநீலப் புடவையைக் கதம்பா ஒதுக்கினாள். ''ச்சீ... இது ரொம்ப டார்க்கா இருக்கு... ஒன் கலருக்கு லைட் கலர் புடவைதான் நல்லா ஒத்துப்போகும். இது எப்படி இருக்கு?''

''ஏதோ ஒண்ணு குடுத்துத் தொலை...''

''ஏன் அனுசூயா இண்ட்டரஸ்டே இல்லாம பேசறே... மாப்பிள்ளையைப் பிடிக்கலியா?''

அனுசூயாவிற்குச் சட்டென்ற திடுக்கிடல் இருந்தது. இவ்வளவு சுலபமாய் உணர்ச்சிகளை வெளிக்காட்டுவது எவ்வளவு தப்பிதம் என்று உணர்ந்து கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''எவனு இருந்தா என்ன? இந்தக் கல்யாணம் என்னவோ நடக்கப் போறதில்ல...''

''ஏன் அப்படிச் சொல்றேஅனுசூயா... ''

''நட்சத்திரமும், செவ்வாய் தோஷமும் வேணும்னு பார்க்காம இருப்பாங்... ஹார்ட்ல ப்ராப்ளம்னு சொன்னு?''

''ஏய் சும்மாரு...''

''என்ன சும்மா ''

''அவங்களுக்கு இதப்பத்திச்சொல்கலை... சின்ன விஷயந்தான... சொல்ல வேணான்னு அப்பா சொல்லிட்டாரு. நீ சத்தமாப் பேசாதே...''

அனுசூயாவின் முகம் சட்டென்று இறுகிற்று.

''பொய் சொல்லி நடத்தப் போற கல்யாணமா?''

''கல்யாணத்துக்கப்புறம் இப்படி வந்தா என்ன செய்வாங்க. அந்த மாதிரி இருந்துட்டுப் போவட்டும்... நீ சும்மாரு...''

அனுசூயா வெளி அறைக்கு வந்ததும் சுற்றி இருந்தவர்களைப் பார்த்தாள். மூன்று பக்க ஸோபாக்களில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நடுநாயகமாய் குருமூர்த்தி. புகைப்படத்தில் பார்த்த அதே அச்சு. மீசையைக் கச்சிதமாய்க் கத்தரித்திருந்தான். ட்ரிம் செய்யப்பட்ட தாடி விளக்கொளியில் மயிலிறகு மாதிரி வர்ணமாய் மின்னியது. சந்தனக் கலர் முழுக்கை சட்டையில் மேல் பொத்தான் திறந்து மார்புக் குழியைக் காட்



நிலவே நீயும்

டிக் கொண்டிருந்தான். மெலிதான ஃப்ரேம் போட்ட கண்ணாடி. அதனூடே அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தான். புன்னகைத்தான்.

''நைஸ் டு மீட் யூ...'' என்றான் யதார்த்தமாய்.

அனுசூயாவிற்கு அவனைவிட அவனுடைய முறை பிடித்திருந்தது. அநாவசிய ஆடம்பர சம்பிரதாயச் சிக்கல்கள் இல்லாமல் சுலபமாய் அறிமுகமானதில் சந்தோஷம் இருந்தது.

''கீழே விழுந்து கும்பிடல்லாம் வேணும்.. இப்படி உட்காருங்க...'' என்று சிரிப்போடு சொன்னான்.

''ஆ... அதெப்படி '' என்றார் வீரராகவன். ''வுழுந்து கும்பிடும்மா...'' அனுசூயா ஒரு நிமிஷம் பேசாமல் போய் உட்கார்ந்து விடலாமா என்று யோசித்தாள். அப்பா சொல்கிற போது மறுக்கிற மாதிரி அப்படிப் போய் உட்கார்ந்தால் அது சபையில் அவரது மரியாதைக்கு இழுக்கு செய்யும் என்ற கவலை கூடவே வந்தது.

குனிந்து வணங்கினாள்.

கதம்பா உள்ளேயிருந்து ட்ரேயில்காப்பிக் கோப்பைகளை அடுக்கிக் கொண்டு வந்தாள்.

''அனுசூயா அவுங்களுக்குக் காப்பி எடுத்து குடும்மா...'' என்றார் வீரராகவன்.

கௌரி முகத்தில் சந்தோஷம் துலங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பையனின் அம்மா தன் சின்னப் பெண்ணுக்கு ஜாடை காட்ட, அந்தப் பெண் எழுந்து அனுசூயாவை முந்திக் கொண்டு ட்ரேயைக் கையில் வாங்கிக் கொண்டது.

''இப்படி வாம்மா...'' என்று அனுசூயாவைப் பக்கத்தில் இழுத்து உட்கார வைத்துக் கொண்டாள்.

அனுசூயாவை அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிருக்க வேண்டும். இழைந்துக்கொண்டு உட்கார்ந்தாள். அனுசூயாவின் கையை எடுத்து உள்ளங்கையில் வைத்து வருடி விட்டாள்.

''நாங்க கொஞ்சம் முற்போக்கான வங்க...'' என்று குருமூர்த்தியின் பெரிய தங்கை பேச்சை ஆரம்பித்து வைத்தாள்.

குருமூர்த்தி ஓரக்கண்ணால் அனுசூயாவை விழுங்கிக் கொண்டே காஃபியைத் துளித் துளியாகப் பருகினான்.

''ஜோசியம், ஜாதகம், காரணமா ஒரு பொண்ணோட லைஃப் வீணாவறது எங்களுக்குப் புடிக்கலே... அதனாலதான் சொந்தக்காரங்க வேணும்னு சொன்னப்ப கூடப் பொண்ணைப் புடிச்சிருந்தா இங்க தான் சம்பந்தம் செய்யணும்னு சொல்லிட்டோம்.''

''எங்களுக்கு அனுசூயாவை ரொம்பப் புடிச்சிருக்குது. வயசுப் பொருத்தம், உயரப் பொருத்தம்லாம் இருக்கு... உங்க அபிப்பிராயத்தைச் சொல்லுங்க...'' என்றாள் குருமூர்த்தியின் அம்மா.

கௌரிக்குக் கண்ணங்கள் சந்தோஷத்தில் பூரித்துப் போயின.

''எங்களுக்கு என்னங்க தனி அபிப்ராயம்? மேல பேச வேண்டியது தான்...'' என்றாள் கௌரி. 'நீ உள்ளே போகலாம்' என்கிற மாதிரி அனுசூயாவிற்குப் பாங்காய் ஒரு ஜாடை காட்டினாள்.

அனுசூயா கையை மெல்ல விடுவித்துக் கொண்டு எழுந்தாள். ''நான் உள்ள இருக்கேங்க'' என்று பொதுவாய் அவர்களிடம் அனுமதிக்குச் சொல்லிவிட்டு உள்ளறைக்குப் போனாள்.

''எவ்வளவு போடறீங்க'' என்று நேரடியாய் விஷயத்திற்கு இறங்கினாள் குருமூர்த்தியின் அம்மா.

''முப்பது பவுன் செய்து வச்சிருக்கோம்'' என்றாள் கௌரி எடுப்பாய்.

''முப்பதா...'' கேள்வியில் ஒரு எள்ளல் இருந்தது. 'நம்ப ஜாதியில நூறு நூத்தம் பதுன்னில்ல போடுவாங்க...''

''அதெல்லாம் நம்ப காலம்... இப்பப் பத்து இருவதுக்கே மூச்சு முட்டிப் போவுதே'' என்றார் வீரராகவன் சிரிப்பைமட்டும் முகத்திலிருந்து கழற்றாமல்.



பிசகாதே

அருள்வாக்கு

பகவத்பரமாகவே பண்டிகைகள் என்று சிலதை வைத்திருப்பதோடு விரதங்கள் என்றும் சிலவற்றை வைத்திருக்கிறது. பண்டிகை என்பது நாம் ஆடை ஆபரணங்களுடன் அலங்காரம் பண்ணி பூஜை செய்து, அவன் பிரசாதமாக அறுசுவை உண்டி சாப்பிட்டு ஆனந்தமாயிருப்பது. போகி பண்டிகை, தீபாவளிப் பண்டிகை மாதிரி. புது வஸ்திராதிகள், அலங்காரம், பஞ்ச பக்ஷ்ய போஜனம் முதலியன இல்லாமல் வழக்கமாகச் சாப்பிடுகிற மாதிரிக் கூட இல்லாமல் நியமத்தோடு உபவாஸமிருந்து பூஜை பண்ணுவது விரதம். கிருத்திகை விரதம், ஷஷ்டி விரதம், சதுர்த்தி விரதம், ரிஷி பஞ்சமி விரதம், ப்ரதோஷவிரதம், ச்ரவண விரதம், பயோவிரதம், இது எல்லாவற்றையும்விட ஸர்வஜன அநுஷ்டானமாக ஏகாதசி விரதம் என்று பல ஏற்பட்டிருக்கின்றன. எல்லா மதங்களிலுமே feasting, fasting என்று இந்த இரண்டும் இருக்கின்றன.

மற்ற விரத தினங்களிலோ, பூஜைக்கு அப்புறம் ஒரு பொழுதாவது பலஹாரம் பண்ணலாமென்றிருக்கிறது—ஏகாதசியில் தான் பூர்ண உபவாஸம்.

மற்ற விரதங்களைப் புராணாகமங்கள் சொல்கின்றன. அதில் சிவபரமான புராணாகமங்கள் சொல்பவைகளை வைஷ்ணவர்கள் அநுஷ்டிக்கமாட்டார்கள். வைஷ்ணவ கிரந்தங்களில் சொல்லியுள்ளதை சைவர்கள் செய்யமாட்டார்கள். ஏகாதசியோவென்றால் ஒவ்வொரு sect மட்டும் எடுத்துக் கொள்ளும் புராண ஆகமங்களில் மட்டுமின்றி ஹிந்து என்று பெயர் இருக்கிற அத்தனை பேருக்கும் பொதுவான தர்ம சாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் இதை ஸர்வஜன அநுஷ்டானமான விரதம் என்று சொன்னேன்.

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



''ஆளுக்கூட மூப்பது ரொம்ப கம்மி...''

''என்ன எதிர்பார்க்கறீங்கன்னு தெரிஞ்சிக்கலாமா?''

''எங்களுக்கு மத்தவங்க மாதிரி ரொம்ப ஆசை கெடையாது. ஜோசியம் ஜாதகம்னு பார்க்கலே. அதையும் மனசில வெச்சிக்கங்க... அறுவது பவுனுவது போடுங்க... அப்பத்தான் சபையில மரியாதையா இருக்கும்.''

''அவ்வளவுக்குத் தாங்காதுங்க'' என்று வெளியே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன.

அனுசூயா கண்ணாடிக்கெதிரில் உட்கார்ந்து எதிரில் தெரிந்த பிம்பத்தை கடுமையான கண்களால் வெறித்தாள்.

'பாலா... நான் இப்ப என்ன பண்ணப் போறேன் பாலா?'

இவளுடைய தனிப்பட்ட சம்மதத்திற்காக யாரும் கவலைப்பட்ட மாதிரி தெரியவில்லை. அவர்களுடைய எதிர்பார்ப்புகளும், இவர்களால் முடிந்தது, முடியாதது என்கிற அளவு கோல்களும் மட்டுமே அவசியமான பேச்சுக்கள் என்பது மாதிரி வெளியே அவர்கள் பாட்டுக்குப் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கிட்டத்தட்ட நாற்பது நிமிடங்களுக்குப் பிறகு மறுபடியும் அனுசூயாவிற்கு அழைப்பு வந்தது.

சிரிப்பைக் காட்டாத முகத்துடனேயே வெளியே வந்தாள்.

''கண்ணம்மா... நாங்கள்ளாம் கெளம்பறோம்... எங்க பையனை நல்லாப் பார்த்துக்கிட்டியா... ஒனக்குப் புடிச்சிருக்கில்ல...'' என்று அந்த அம்மாள் எழுந்து வந்து கன்னத்தைத் தட்டினாள்.

'ம்' என்ற முனகல் கூட அநாவசியமாய்த் தோன்றியது அனுசூயாவிற்கு. அவர்கள் புறப்பட்டுப் போனவுடன நடுவில் பரப்பப்பட்டிருந்த காப்பி டம்ளர்கள் விலக்கப்பட்டன. அவசரமாய் குடும்பம் குழுமியது.

''நீ என்ன கௌரி சொல்ற?''

''அப்படி இப்படிப் போனாலுங்கூடப் பாத்து முடிச்சிட வேண்டியதுதானுங்க... இந்த மாதிரி இனிமே வரன் அமையாதுங்க. இந்தக் கல்யாணம் நல்ல விதமா நடந்து முடிஞ்சா நான் மருவத்தூர் ஆத்தாக் கோயிலிலே அங்கப் பிரதட்சிணம் பண்றேன்னு வேண்டிக்கிட்டிருக்கேன். சம்பத்தியம்மாவுக்கு நம்ப அனுசூயாவை ரொம்பப் புடிச்சிப் போயிருக்குது.''

''அம்மா நான் ஒண்ணு கேக்கட்டுமா?''

''என்ன அனுசூயா?''

''என் ஹார்ட் டிரபிள் பத்திச் சொல்லலியா''

''சொல்லலே...எல்லாம் கல்யாணத்துக்குப் பின்னால சரியாப் போயிடும். புதுசாக் கெளப்பாதே...''

''நியாயமாம்மா இது?''

''நீ பேசாம இரு அனுசூயா... நாங்க பார்த்துக்கறோம்...'' என்றார் வீரராகவன். ''ஏற்கெனவே உங்க பெரியம்மா வேற இந்தப் பையனை முடிச்சிடணும்னு அலைஞ்சுக்கிட்டிருக்காங்க... நாம்ப இப்ப வுட்டா இனிமே இப்பிடிக் கெடைக்காது...''

''எவ்வளவு பவுனுக்கு ஒத்துக்கிட்டிங் கப்பா ''

''அம்பத்தஞ்சி...''

''நீங்க வேலேல இருந்தாக் கூட பரவா யில்லே. ரிடையர் ஆயிட்டிங்க. எனக்குப் பின்னால கதம்பா. கஸ்தூரி. எனக்கே இவ் வளவையும் போட்டுட்டிங்கன்னு அவுங்களுக் கெல்லாம் என்ன செய்வீங்கப்பா?''

''கடனோ. எதுவோ வாங்கிப் பண்ணித் தானம்மா ஆவனும். அதைப் பார்த்தா இனிமே எப்ப ஒனக்குக் கல்யாணம் ஆகி மத்த ரெண்டுக்கும் எப்ப ஆவறது ''

''நீங்கள்ளாம் கோச்சிக்கலன்னு ஒண்ணு சொல்றேன்.. ''

''இந்தக் கல்யாணம் வேண்டாம்..... அதானே?''

''ஆமாம்மா... வரதட்சிணே, நகைநட்டு, சீர் செனத்தின்னு எதுவும் கேக்காமஜோசி யமும் பார்க்காம, ஜாதகந் தொடாம என்னே ஒருத்தர் கல்யாணம் பண்ணிக்க றேன்னு சொன்னா... ஒத்துப்பீங்களா?''

அத்தனே முகங்களிலும் துல்லியமான அதிர்ச்சி தெரிந்தது.

''அப்ப நான் கேள்விப்பட்டது சரிதான்னு சொல்ற!''

''என்னம்மா கேள்விப்பட்டே?''

''யாரோ செவப்பா ஒரு பையனோட ஊரெல்லாம் சுத்தறேன்னு மோகன் அன்னிக்குச் சொன்னான். நெஜந்தானே?''

''அது ரொம்ப நல்ல மாதிரிம்மா... பாங்கல வேலே... என்னே நல்லாப் புரிஞ்சிக் கிட்டிருக்குது... நானும் நல்லா அதைப் புரிஞ்சிக்கிட்டிருக்கேன்... பண்ணிக்கிட்டா என்னம்மா?''

''அவ்வளவு தூரம் வந்திடிச்சா?'' என்றார் வீரராகவன். முகம் வெந்து போனது. ''நம்ப ஜாதிலசீக்கிரம் கல்யாணம் பண்ணு. பண்ணுன்னு அடிச்சிக்கிறீங்களே. ஏன்னு இப்பத் தெரியுதா...?''

''அனுசுயா... என்னம்மா சொல்றே? நம்ப குடும்ப கௌரவத்தைப் பத்தி யோசிச் சயா அவன் என்ன ஜாதி... நம்பஜாதியா சொல்லு. நானே பாத்துப் பண்ணி வைக்கிறேன்...''

''ஜாதி என்னம்மா பெரிய ஜாதி? பாலா வும் மனுஷ ஜாதிதான். நானும் மனுஷ ஜாதிதான்... அப்புறம் என்ன வேற ஜாதி வேண்டியிருக்குது ''

கதம்பா ஆணி அடித்த மாதிரி நின்று கொண்டிருந்தாள். கஸ்தூரி திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பேசறதைப் பார்த்தீங்களா...'' என் றாள் கௌரி உடம்பு பதற.

''எல்லாம் நாம்ப கொடுத்த செல்லம். இந்தக் காலத்துப் பசங்கள்ளாம் சகஜமா வெளியில போவுதுங்க, கொஞ்சுதுங்கன்னு இதையும் இது இஷ்டப்பட்ட நேரத்தில வெளியில போய்ட்டு வரட்டும்னு வுட் டோம் பாரு... அதான் தப்பாப் போய் டிச்சி... இந்தக் கல்யாணம் நிச்சயமாற வரைக்கும் இதை எங்கயும் வெளியில அனுப்பாதே... எந்த ஃப்ரெண்டையும்உள்ள சேக்காதே...''

வீரராகவன் கத்திக் கொண்டே போனார்.

''அப்பா...'' அனுசுயா கோபத்தில் உதடுதுடிக்க எழுந்து நின்றாள். பளீரென்று கன்னத்தில் சூடு பறக்க அறை விழுந்தது.

''மேல பேசாத... ஏய் ஒனக்குத்தான்... இது எம் பேச்சை மீறிக்கிட்டு ஏதாவது செஞ்சிது. அன்னிக்கே நான் தூக்குல தொங்கிடுவேன்... ஆமாம்...''

அனுசுயா அதிர்ச்சி நீங்கி அழ ஆரம்பித் தாள்.

(தொடரும்)

சிறையில் ஒரு பறவை

மேட்டூர் நல்லப்பன்



அந்தச் சிறைச்சாலையின் ஓரத்தில் தூக்கிவிடப்பட்டிருந்த அந்த இரும்புத் தகட்டில், இரும்புச் சுத்தியலினால் பன்னிரண்டு அடிகள் விழுந்தன. அடிபட்ட வேதனை தாளாமல் அந்த இரும்புத்தகடு ஓலமிட்டு அலறியது. அந்தச் சத்தம் சிறைச்சாலையின் உயரமான மதில் சுவர்களில் மோதி எதிரொலித்தது. அந்தப் பேரோசையிலிருந்து இரவு பன்னிரண்டு மணி என்பதைச் சிறையில் தூங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த கைதிகள் உணர்ந்தார்கள்.

அதே சமயத்தில் மூன்றும் நம்பர் கொட்டடியை நோக்கி ஓர் உருவம் பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தது. கையில் துப்பாக்கியைப் பிடித்தபடி கால்களில் பூட்ஸ் ஒலி சப்திக்கக் கம்பீரமாய் நடந்து வரும் அந்தச் சிறைக் காவலர் இப்போது கையில் ஆயுதமின்றி, காலில் அணிகலனின்றிப் பூனை போல் நடை நடந்து வந்து மூன்றும் நம்பர் அறை முன்னால் நின்றான். கையோடு கொண்டு வந்திருந்த சாவியால் அந்த அறையின் பூட்டைத் திறந்தான்.

ஆறு மாதங்களாக அதே அறையில் அடைக்கப்பட்டிருக்கும் மாரியம்மாள் தூக்கம் பிடிக்காமல் தனக்கு நேர்ந்து விட்ட துன்பத்தை எண்ணித் துடித்துக் கொண்டிருந்தாள்.

அறை முழுவதும் விளக்கின்றி இருண்டிருந்தாலும் வராந்தாவில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்கின் ஒளியில் வந்திருப்பது யார் என்பதை மாரியம்மாள் உணர்ந்து கொண்டாள். அவள் அந்தச் சிறையில் அடைக்கப்பட்ட நாளிலிருந்து, எப்படியாவது அவளைத் தன் இச்சைக்கு இரையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அவளை வட்டமிட்டுக் கொண்டிருந்தான் சிறைக்காவலன் மகேந்திரன். இந்த மிருகத்திடம் இருந்து எப்படித் தப்புவது என்று தெரியாமல் தவித்தது அவள் மனம். பெண்கைதிகளின்பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த பெண் வார்டர் அம்மாவும் அந்தப் பெண் பித்தனுக்குக் கையாளாகிக் காணாமல் போயிருந்தாள்.

பெண்ணுக்கு அழகே ஆபத்து என்பார்கள். மாரியம்மாளுக்கு அவளுடைய அழகுதான் பெரும் ஆபத்தாக இருந்தது. சொல்லப் போனால் அவள் சிறைக்குள்ளே வருவதற்கே அந்த அழகுதான் காரணம். சிறைக்கு வந்ததும் அந்த ஆபத்து அவளை விட்டபாடில்லை. அவளின் அழகில் மயங்கிய அந்தச் சிறைக் காவலன் மகேந்திரன் அவளை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தான். பல சமயங்களில் பகலிலும் இரவிலும்பயந்தும், நயந்தும் உருட்டியும் மிரட்டியும் பார்த்தான். ஆனால் மாரியம்மாளோ எதற்கும் அஞ்சாத தைரியசாலியாக நின்று தனது பெண்மையைக்காத்துவந்தாள்.

அவன் கம்பிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவதற்குள் அவள் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு வழியைக் கண்டுபிடித்திருந்தாள். அதைச் செயல்படுத்தவும் தொடங்கினாள்: ''ஐயையோ! இந்தக் காவலன் மகேந்திரன் என்னைக் கெடுக்க வர்றானே! வார்டரம்மா என்னைக் காப்பாத்துங்க! காப்பாத்துங்க!'' தனது சக்தியை எல்லாம் திரட்டி அலறித் துடித்தாள் மாரியம்மாள். அப்போது கூட அந்த வார்டரம்மா அவளைக் காப்பதற்கு வரவில்லை. ஆனால் அந்தச் சிறைச்சாலையில் அடைக்கப்

அறிமுக எழுத்தாளர்

பட்டிருந்த நூற்றுக்கணக்கான கைதிகளும் திடுக்கிட்டு எழுந்தார்கள். நடப்பது என்னவென்று ஒரு நொடியில் அவர்களுக்குப் புரிந்து விட்டது.

'டேய்! யார்ராவன் ராத்திரி நேரத்தில் பொம்பளேகிட்ட வாலாட்டரவன். ஒழுங்காக அவளே விட்டுட்டு வெளியே வா. இல்லேன்னு இந்தக் கம்பிக் கதவும் தாங்காது; ஒன் முதுகும் தாங்காது'' என்று கண்டம் பிளக்கக் கூச்சலிட்டது ஒரு குரல். அதைத்தொடர்ந்து அத்தனே கைதிகளும் கூச்சலிட்டார்கள். பலர் சாப்பாட்டுத் தட்டை எடுத்துச் சிறைக் கம்பியின் மீது 'மடார், மடார்' என்று அடித்து நொறுக்கிஞர்கள்.

இந்த மாதிரி விபரீதம் ஏற்படும் என்று சிறிதும் எதிர்பார்க்காத அந்தச் சிறைக் காவலன் திருடனைத் தேள் கொட்டியதைப் போல் உணர்ந்தான். செய்வதறியாமல் தவித்தான். தனது செயல் சிறை மேலதிகாரிக்குத் தெரிந்தால் தன் பிழைப்பில் மண் விழுந்து விடுமே என்று மிகவும் அஞ்சினன் அவன். வேகமாகக் கதவை மூடிப் பூட்டிவிட்டு பூனேபோல் ஓட்டம் பிடித்தான். அப்படியும் அவன் ரகசியம் வெளிப்பட்டு ஜெயில் மேல் அதிகாரிகள் அடுத்தநாள் அவனைத் தண்ணீர் இல்லாத காட்டுக்கு மாற்றி விட்டார்கள். ஆனால் மாரியம்மாளோ அதே சிறையில், தான் சிறைக்கு வரக் காரணமாக இருந்த அந்த இறந்த காலத்தை எண்ணியபடி சிறைக் கம்பியையும் எண்ணிக் கொண்டிருந்தாள்.

ஓலேப்பட்டி ஒரு சிறிய கிராமம். அங்கு ஓர் ஏழை கூலி விவசாயியின் குடும்பத்தில் பிறந்தவள் தான் மாரியம்மாள். பதினறு பதினேழு வயதிருக்கும். ஒருமுறை பார்த்தவரை மீண்டும் ஒரு முறை கவர்ந்திழுக்கும் விதம் அழகும் உடற்கட்டும் மாரியம்மாளுக்கு இருந்தன. இளமைச் செழிப்பில் அவளுக்கு நிகர் அந்தக் கிராமத்தில் யாரும் இருக்கவில்லே.

ஓலேப்பட்டியில் ஓரளவுக்கு நிலபுலன்களும் வசதியும் உள்ளவர் சின்னப்பகவுண்டர். அவர் மகன் சுப்ரமணியன். இருபத்தைந்து வயது. அவன் கோயில் காளே போல் ஊரில் கொழுத்துத் திரிந்தான். அவனுக்கு மாரியம்மாள் மீது ஒரு கண். விவசாய வேலேகளுக்கு அவனது தோட்டத்துக்கு மாரியம்மாள் சென்ற போதெல்லாம் மூக்கு வேர்த்த சமூகைப் போல் அவளேச்சுற்றி வட்டமிடத் தொடங்கினன். அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்ட மாரியம்மாள், எப்போதும் தன் தாயின் பாதுகாப்புடன் எச்சரிக்கையாகவேஇருந்து வந்தாள். இருந்தும் ஒருநாள்...

அன்று அவள் தாய் உடல் நலக் குறைவினல் வேலேக்கு வரவில்லே. மாரியம்மாள்



போட்டிக் கதை 14

மட்டும் வந்திருந்தாள். மேட்டு நிலத்தில் வைக்கப்பட்டிருந்த தென்னங்கன்றுகளுக்குத் தண்ணீர் எடுத்து ஊற்றிக் கொண்டிருந்தாள் ஒரு செடிக்குத் தண்ணீரை ஊற்றி விட்டு, வாளியைக் கீழே வைத்து, கையை இடையில் வைத்தபடி ஒயிலாக நடந்து போனாள்.

"தா... மாரியம்மா கொஞ்சம் நில்லு! உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும்" என்று அவன் அவசரமாக அவளை நிற்கச் சொன்னான்.

"என் கிட்ட எந்த விஷயமும் சொல்ல வேண்டாம். நான் எப்படிப்பட்டவள்னு உனக்குத் தெரியும். நீ எப்படிப்பட்டவன்னு எனக்குத் தெரியும். உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போங்க" வெடுக்கென்று பேசிவிட்டு, வேகமாக நடந்தாள்.

"நான் என்ன சொல்லப் போறேன்னு தெரிஞ்சிக்காமலே கோவப்பட்டா எப்படி? சரி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு நெனைக்கிறேன்" — வேகமாக நடந்த அவளோடு ஓடிக் கொண்டே பேசினான் சுப்ரமணியன். அவன் பேச்சைக் கேட்டு டக்கென்று ஒரு நிமிஷம் நின்றாள். திரும்பி அவனை வெறித்தாள்.

"என்ன சொன்னீங்க என்னை நீங்க கல்யாணம் கட்டிக்கறீங்களா?" என்று இகழ்ச்சியோடு அவனைப் பார்த்து நகைத்தாள் மாரியம்மாள்.

"என்ன மாரியம்மா என் வார்த்தையிலே உனக்கு நம்பிக்கையே இல்லியா? சத்தியமா என்னை நம்பு" என்று அவன் அவள் தலையில் அடிக்கப் போனான். அவள் வேகமாக விலகி நின்றாள்.

"நம்பிக்கையா அஞ்சு லட்ச ரூபா சொத்துள்ள ஒனக்கும் அன்றாடங்காய்ச்சியான எனக்கும் கல்யாணம்னு இந்த ஊரிலே யாராவது நம்புவாங்களா? இது ஒங்கப்பாரு காதுக்குப் போனால் நம்ம இரண்டு பேரையும் வெட்டிப் போட்டுடுவாங்க." அவள் கொஞ்சம் கூட நம்பிக்கையின்றிப் பேசினாள்.

"அதெல்லாம் எதுக்கு? எங்கப்பா இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கலேன்னு என்ன? எங்கேயாவது உன்னைக் கூட்டிப் போய்க் கட்டிக்கிட்டுப் பிச்சை எடுத்தாவது காப்பாத்துவேன்" என்று அவன் சினிமாவசனம் பேசினான்.

"அவ்வளவு தூரத்துக்கு நீங்க துணிஞ்சிட்டீங்களா? சரி எங்கப்பனும் அம்மாளும் வீட்டிலே இருக்காங்க. போய்ப் பொண்ணு கேளுங்க" என்று கூறிவிட்டு முந்தானை காற்றில் பறக்க வேகமாக நடந்தாள், மாரியம்மாள்.

அன்று மாலை சுப்ரமணியன் உண்மையாகவே மாரியம்மாள் வீட்டுக்கு வந்து, அவளுடைய தந்தையிடமும் தாயிடமும் தனது விருப்பத்தைச் சொன்னான். அவ்விருவரும் பெரும் ஆச்சரியத்தில் துவண்டு போனார்கள். 'அவ்வளவு பெரிய இடத்தில் தங்கள் அருமை மகள் வாழ்க்கைப்பட்டால் மகிழ்ச்சியோடு இருப்பாளே என்று அந்தச் சாதாரண மனிதர்களுக்கும் நப்பாசை தோன்றியது.

ஒருநாள் நடு சாமத்தில் மாரியம்மாள் வீட்டுக் கதவைத் தட்டினான் சுப்ரமணியன். அந்த நேரத்தில் அவனையும், அவனது பரபரப்பையும் கண்டு பயந்து போனார்கள். மாரியம்மாளும் அவளது தாய் தந்தையரும்.

"மாரி! உடனே புறப்படு! எங்கப்பா நம் கல்யாணத்துக்குச் சம்மதிக்கலே! இதா பாரு பத்தாயிரம் ரூபாயும் பதினஞ்சு பவுன் நகையும் எங்க வீட்டிலே இருந்து எடுத்துக்கிட்டு வந்திருக்கிறேன். எங்கேயாவது ஒரு கோவில்ல நம்ம கல்யாணத்தை முடிச்சுக்கிட்டு சந்தோஷமா வாழலாம்" என்று தன் கையோடு கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்து காட்டினான். பணத்தையும் நகையையும் கண்டு மாரியம்மாளும் அவளது பெற்றோரும் வாயைப் பிளந்தார்கள்!

அரை மனத்தோடு இருந்த அவளுடைய அம்மாவும் அப்பனும் பணத்தையும் நகையையும் கண்டதும் முழு மனத்தோடு தங்கள் மகளை அனுப்பி வைத்தார்கள். மாரியம்மாள் குழம்பிய மனத்தோடு தயங்கித் தயங்கி அவன் பின்னால் நடந்தாள். இரவோடு இரவாக லாரியைப் பிடித்துச் சேலம் சென்று ஒரு ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கினார்கள். ஓட்டல் அறையில் அவளை நெருங்கினான் சுப்ரமணியன். "கழுத்திலே தாலி ஏறும் வரை ஒங்க கை என் மீது படக் கூடாது. ஆமா! அதை மீறி நடந்தீங்கன்னு சத்தம் போட்டு ஊரைக் கூட்டிப்பிடுவேன். நான் ஏழை. எனக்கு ஒழுக்கம் தான் முக்கியம்" என்று அவள் நெருப்பாக எரிந்தாள்.

'பொறு! பொறு! இந்த ஒழுக்கப்பேச்சு இன்னும் எத்தனை நாளைக்கின்னு பார்த்துடறேன். நாளைக்கே ஒரு மஞ்சக் கயித்தை வாங்கி ஒரு கோயில்ல அழைத்துப்போய் அதைக் கழுத்திலே கட்டிடறேன். அப்புறம் ஒரு பத்து நாளோ பதினைந்து நாளோ சுகம் அனுபவித்து விட்டுக் குப்பையில் தள்ளி விடறேன். இவளை ஏதாவது விபச்சார விடுதியில் வித்தால் நல்ல விலை கிடைக்கும். அப்புறம் இந்த மொகரையை எவன் சீந்துவான்!' அவன் மனத்தில் ஓடிய இந்தக் கொடிய எண்ணங்களை மாரியம்மாள் எப்படி உணர முடியும்?

காலை ஏழு மணிக்கெல்லாம் அவர்கள் தங்கியிருந்த அறையின் கதவு பலமாகத் தட்டப்பட்டது. திடுக்கிட்டுப் போன சுப்ரமணியனும் மாரியம்மாவும் கதவைத் திறந்தார்கள். வெளியில் ஒரு போலீஸ் பட்டாளமே நிற்பதைக் கண்டனர்.

"நீங்கதானே சுப்ரமணியம். மாரியம்மாள் இவள்தானே:" சப் — இன்ஸ்பெக்டர் அதட்டலோடு கேட்டார். இருவரும் பேச நாவின்றி பெருமாள் மாடு மாதிரி தலையை ஆட்டினார்கள். அடுத்த நிமிஷமே அவர்கள் இருவர் கையிலும் விலங்கை மாட்டிப் போலீஸ் வேனில் ஏற்றினார்கள். போலீஸ் வேன் ஒலைப்பட்டியை நோக்கி ஓடத் தொடங்கியது.

மாரியம்மாள் ஒன்றும் புரியாமல் பயத்தில் ஒடுங்கிப் போய் உட்கார்ந்திருந்தாள்.

ஆனால் சுப்ரமணியன் தேம்பித் தேம்பி அழுதான். அவன் அழுகையைப் பார்க்க அவளுக்கே சகிக்க முடியாமல் எரிச்சல் ஏற்பட்டது.

''இந்தா எதுக்கு இப்படிப் பொம்பளை மாதிரி ஒப்பாரி வைக்கிறே? என்ன செஞ்சித் தொலைச்சே! எங்கிட்டே உண்மையைச் சொல்லிட்டு ஒப்பாரி வை! பணம் கொடுக்கலேன்னு ஒங்கப்பனை வெட்டிக்கிட்டி ப்போட்டுட்டு வந்திட்டியா.'' என்று சீற்றத்தோடு அழுது கொண்டிருந்தவனைப் பார்த்து உலுக்கினாள் மாரியம்மாள்.

''இல்லே மாரி, நம்ம விஷயத்தை எங்கப்பாகிட்ட நான் சொல்லவேயில்லே. பணத்துக்கு என்ன செய்வது என்று யோசித்த போது நம்மூர் குஞ்சம்மா கிழவி போட்டிருந்த நகையும், வச்சிருந்த பணமும் தான் என் நினைவுக்கு வந்தது. சாமத்துக்குக் கிழவி வீட்டுக்குப் போனேன். கிழவி காற்றுட வெளித் திண்ணையில் படுத்துத் தூங்கிக்கிட்டு இருந்தாள். வெறியிலே பெரிய கல்லைத் தூக்கி அவள் தலையில் போட்டு அவளைக் கொலை பண்ணிட்டுத்தான் நகையையும் பணத்தையும் எடுத்து வந்தேன்'' என்று சொல்லிவிட்டு மேலும் விசித்து விசித்து அழுதான் சுப்ரமணியன்.

''அடப்பாவி கொலைசெஞ்சுட்டா என்னை அழைச்ச வந்தே! என்னையும் கொன்னிருந்தீன்னு கூட சந்தோஷமா செத்துப் போயிருப்பேனே!'' என்று ஆத்திரத்தோடு அரற்றினாள்.

ஓமலூர் கோர்ட்டுக்கு மாரியம்மாளையும் சுப்பிரமணியத்தையும் போலீஸ் கொண்டு சென்று நீதிபதியின் முன்பு ஆஜர் படுத்தி இருவரையும் குஞ்சம்மா கிழவியின் கொலையில் சம்பந்தப்படுத்தி விசாரணைக்கைதிகளாக ஓமலூர் சப்—ஜெயிலில் அடைத்தார்கள்.

அடுத்த நாள் காலையில் சுப்ரமணியனின் தாய் தந்தையும், ஒலைப்பட்டியின் சில பெரிய மனிதர்களும் ஓமலூர் சிறைக்கு ஓடி வந்தார்கள். சுப்ரமணியனை மட்டும் பார்த்து, ஒரு பாட்டம் அழுது முடித்தார்கள். அவனை ஜாமீனில் எடுக்க எல்லா ஏற்பாடுகளும் நடப்பதாக அவனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார்கள். மாரியம்மாளை யாரும் சீண்டவில்லை.

'பணம் பாதாளம் வரை பாயும்' என்பார்கள். சுப்ரமணியனின் வழக்கிலும் அது பாய்ந்தது. பத்தே நாட்களில் அவன் ஜாமீனில் எடுக்கப்பட்டான். சுப்ரமணியனின் தந்தையும் அவருடைய பணமும், அந்தப் பணத்துக்கே பணி செய்யும் வக்கீலும் சேர்ந்து வழக்கின் திசையையே மாற்றிவிட்டார்கள்.

கொலை செய்யப்பட்ட கிழவிக்குத் தூரத்து உறவினர் மட்டுமே ஓரிருவர் இருந்தனர். அவர்கள் கையில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து 'மாரியம்மாள் தான் கொலை செய்தாள். நாங்கள் கண்ணாரக் கண்டோம்'



லண்டனைச் சேர்ந்த பாங்க் ஒன்றில் பணிபுரியும் 'ஜுலி டான்னெல்லி' என்ற இளம்பெண் எவரெஸ்ட் சிகரத்தை வெற்றி கொள்ளக் கிளம்பப் போகிறாராம்!

இதில் என்ன புதுமை என்கிறீர்களா? இவர் ஒரு குருடர்! 8 வயதிலேயே இவர் பார்வையிழந்து விட்டார்!

—சம்பத்குமாரி.

ஆதாரம்: ''டைம்ஸ்.''

என்று நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வைக்கப்பட்டது. அதைவிடக் கொடூரம் மாரியம்மாளின் கண் முன்னாலேயே, 'மாரியம்மாள் தான் கிழவியைக் கொன்னுட்டுப் பணத்தையும் நகையையும் எடுத்து வந்து என்னிடம் கொடுத்தாள்' என்று சுப்பிரமணியனே கோர்ட்டில் கூறினான். அதைப்பார்த்து மாரியம்மாள் துடிதுடித்துப் போனாள்.

காவல் துறையும், நீதித் துறையும் மாரியம்மாளின் உயிரோடும், உடலோடும், கடந்த ஓர் ஆண்டுக் காலமாக விளையாடி விட்டுக் கடைசியில் ஒரு தீர்ப்புக்கு வந்திருந்தது.

''இந்த வழக்கின் விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தைக் கொண்டும் ஆராய்ந்ததில், மாரியம்மாள்தான் குற்றவாளி என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அவருக்கு மரண தண்டனையே வழங்க வேண்டும். இருப்பினும் அவருக்குப் பதினாறு வயது தான் ஆகியிருக்கிறபடியால் இந்த நீதி மன்றம் அவர் மீது கருணை கொண்டு மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்துத் தீர்ப்பளிக்கிறது.

''இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்த இன்னொரு நபரான சுப்ரமணியன் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை என்று விசாரணையில் தெரிய வந்ததால், அவரை நீதிமன்றம் விடுதலை செய்கிறது!'' தீர்ப்பைக் கேட்ட மாரியம்மாள் நீதிமன்றத்திலேயே மயங்கி விழுந்தாள். அன்று முதல் அவள் ஒரு சிறைப் பறவையாகிப் போனாள்.

அதென்னவோ, வெளியே சுதந்திரமாக உலவிவரும் மனித மிருகங்களைவிட சிறைக் கைதிகளிடம்தான் அதிக மனிதாபிமானமும் தனக்கு மிகுதியான பாதுகாப்பும் இருப்பது போல் அவளுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

மூன்று முடிச்சு



சாதனைத் திருமணம்!

1942—இல் ரங்கூனிலிருந்து இளம்பி. பாதி வழியில் கணவனையும் மூன்று குழந்தைகளையும் இழந்து கடும் வியாதியால் பாதிக்கப்பட்டு, கண் பார்வை இழந்த என்னை இரண்டு அக்காக்களுடன் பம்பாய்க்குக்கூட்டி வந்து வளர்த்து, ஆளாக்கி, எங்கள் மூவரையும் மணக்கோலத்தில் கண்ட என் தாயைத்தான் என் மண நாளன்று நன்றியுடன் மனதார வணங்கினேன்.

புவனேஸ்வரி சிவா, சென்னை-17

எதிர்பார்ப்பும் எதிர்ப்பும்

என் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்ததும் மனத்திலிருந்த கவலை முடிச்சுக்கள் அவிழ்ந்து விழுந்தன. காரணம் இளைஞர்களான எங்கள் மனத்தில் ஏராளமாய் எதிர்பார்ப்புகளிருக்க எங்கள் வீட்டுப் பெரியோர்களிடமிருந்து ஏகமாய் எதிர்ப்புக் கணைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

கே. எஸ். சந்திரா, சென்னை-15

கல்விக்கே முதலிடம்

பட்டப்படிப்பின் முதல் ஆண்டில் சர்வ கலாசாலையில் முதலிடம் பெற்றுத் தேறியிருந்த எனக்கு இரண்டாம் ஆண்டு மத்தியில் திருமணம் நடந்தது. தாலி முடியப்பட்ட சமயம் 'கடவுளே இன்னும் ஒன்றரை ஆண்டுகள் தொடர்ந்து சிறப்பாகப் படித்து முதலிடத்தைத் தகக வைத்துக் கொள்ள வேண்டும்' என்றுதான் பிரார்த்தித்தேன். என் வேண்டுதல் வீண் போகவில்லை.

திருமதி ராதிகா நாயர், கொச்சி

திகைப்பும், தவிப்பும்

சின்ன வயதிலிருந்தே எனக்கு ஆறுவிரல்களைக் கண்டால் வெறுப்பு. என் கழுத்தில் தாலி முடிய வந்த கரங்களைக் கண்டதும் திகைப்பு. மொச்சைக் கொட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்த அந்த ஆறுவது விரலைக் கண்டதும் அருவருப்பு. பெண் பார்க்கும் நேரத்தில் வலது கையைக் கர்சீபால் மறைத்துக் கொண்டு வந்ததை எண்ணிக் கசப்பு. வருடங்கள் உருண்டோடி விட்டன. இப்போதோ அந்த ஆறுவது விரலை அடிக்கடி பார்க்காவிட்டால் தவிப்பு!

வி- கோமதி ரமணி, திண்டுக்கல்

வித்தியாசமான சந்தோஷம்

ஏழைக் குடும்பத்தில் ஐந்து பெண்களில் மூத்தவளாகப் பிறந்த எனக்குத் திருமணம் நடந்த போது நானே முதல் என் வீட்டாருக்கு என் பங்கு சாதத்திலிருந்து ஆளுக்கொரு வாய் அதிகமாகக் கிடைக்குமே என்று எண்ணி சந்தோஷப் படத்தான் தோன்றியது.

எம். கமலா, உடுமலைப்பேட்டை

அக்காவின் ஆற்றாமை

என் அக்கா தன் திருமணத்தின் போது நினைத்துக் கொண்டாளாம், 'இவ்வளவு வரதட்சிணை கொடுத்து உன்னை 'வாங்கிய

வ

L

விழுந்த போது.





தற்கு நானல்லவா உனக்கு மூக்கணாங்கயிறு கட்ட வேண்டும்' என்று.

சு. வாசுகி, தூத்துக்குடி

அப்பா மடி நோகாமல்

சம்பிரதாயப்படி தகப்பனார் மடியில் உட்கார்ந்து தாலி கட்டிக் கொண்ட போது வயதான அப்பாவுக்கு வலிக்குமே என்ற உணர்வே மேலோங்கியிருந்ததால் என் முழு கனத்தையும் அவர் மடியில் வைத்து அழுத்தாமல் உட்கார்ந்தும் உட்காராத நிலையில் இருந்தேன். கால்கள் சற்றைக்கெல்லாம் கெஞ்ச ஆரம்பித்து விட்டன. தாலி கட்டியதும் பெரிய ' நிம்மதியுடன் எழுந்து கொண்டு கால்களுக்கு ஓய்வு கொடுத்தேன்.

விஜயலட்சுமி, சென்னை-45

அவசரக் கல்யாணம்

அப்பாடி தாலி கட்டும் இந்த முக்கியமான காரியமாவது நடந்ததே என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். ஆகஸ்டு 19 அன்று டில்லியிலிருந்து ஜி. டி. எக்ஸ்பிரஸில் கிளம்பி 21-ஆம் தேதி வந்து சேர வேண்டிய மாப்பிள்ளை ஆந்திரா கலவரம் காரணமாக 22-ஆம் தேதி முகூர்த்தநேரத்துக்குச் சற்று முன்னால் தான் வந்து சேர்ந்தார். அரை மணி நேரத்திற்குள் தாலிகட்டிக் கல்யாணம் முடிந்து விட்டது.

கீதா சுதர்சனம், புதுடெல்லி-24

மூந்நூறு ரூபாயில் மூவுலகும் ஆளலாம்

அப்போது எனக்கு முந்நூறு ரூபாய் தான் சம்பளம். என் ஒருவனுக்கே மாதக் கடைசி வந்தால் இழுபறி... அப்படி இருக்க இந்தச் சம்பளத்தில் இவளையும் எப்படி நல்லபடியாக வைத்துக் கொள்ளப் போகிறோம் என்ற கவலையுடன் தாலி கட்டினேன். ஆனால் என்னவளோ அதிலும் மிச்சம் பிடித்துக் காட்டினாள்!

வி. பாலகிருஷ்ணன், கிரிதி, பீஹார்

மூல முதல்வன்!

இந்த உலகிலேயே முதல் முதலாக ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி முடிபவன் நானாகத்தான் இருக்க முடியும் என்பது போல் அந்த பெருமை எனக்கு! இதுவரை யாரும் சாதிக்காததைச் சாதித்து விட்ட இறுமாப்பு!

இரணியல் கலை, சென்னை-57

அம்மாவாயிருந்த அண்ணா

ஒரு பெண்ணின் வாழ்வில் மிக முக்கியமான அந்த நிகழ்ச்சி முடிந்து நான் தலை நிமிர்ந்த போது தாயற்ற என்னை அன்புடன் வளர்த்த அண்ணாவின் கலங்கிய கண்களைச் சந்தித்தேன். உணர்ச்சிப் பெருக்கை அடக்கிக் கொள்ள முயன்று திணறிப் போனேன்.

என். கற்பகம், சென்னை-91

பாட்டி கட்டிய தாலி

சிக்கல் சிங்காரவேலன் சந்நிதியில் நடந்த எங்கள் திருமணத்தில் என் கணவருக்குப் பதில் எங்கள் பாட்டி தான் தாலி முடிந்தார். கணவரின் ஜாதகத்தில் தோஷ

மிருந்ததால் இந்த ஏற்பாடு! இப்போதும் என் கணவர் 'உனக்குப் பாட்டி தான் அக முடையான்' என்று கேலி செய்வார்.
அனுசூயா ராஜகோபாலன், சென்னை-11

இன்று போல் என்றும்

என் கழுத்தில் தாலி கட்டியபோது என் கணவரின் முகத்தில் அரும்பியமகிழ்ச்சிப் புன்னகையும், அவருடைய கனிவான காதல் பார்வையும் வாழ்நாள் முழுதும் நிலைத்திருக்கவும், அவர் கட்டிய தாலி இறுதி வரை என் நெஞ்சில் தவழவும் இறைவ னிடம் பிரார்த்தித்தேன்.
திருமதி பத்மினி கிருஷ்ணன், ஜாம்ஷெட்பூர்

விளையாடப்போக விடுதலை கிடைக்குமா?

இந்த ஒன்பது கஜப் புடவையிலிருந்து எப்போது விடுதலை கிடைக்கும்? நிம்மதி யாகப் பாவாடை சட்டை அணிந்து கொண்டு பாண்டி விளையாடப் போகலாமே என்று யோசித்துக் கொண்டிருந்த எனக்குத் திருமணத்தின் போது வயது எட்டு!
திருமதி ஸ்ரீரங்காள், திருச்சி-4

அம்மாவைப் பார்க்க ஏங்கினேன்

கல்யாணம் முடிந்துஎப்போது அம்மாவைப் பார்ப்போம் என்று ஏங்கிக் கொண்டிருந்த போதே என் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்தது. பழைய பஞ்சாங்கமான என் தாய் மாமன் முன் வரிசையில் அமர்ந் திருந்த என் விதவைத் தாயை எழுப்பி உள்ளே விரட்டிவிட்டிருந்தார்.
ஜே. ஹரிகுமாரி, காஞ்சிபுரம்-3

நாத்தனார் ஆனபோது

என் மூத்த சகோதரனின் திருமணத்தின் போது என் தங்கைக்கே நாத்தனார் ஸ்தா னத்தில் இரண்டாம் முடிச்சு போடும் சந் தர்ப்பம் அளிக்கப்பட்டது. அவளுக்குத்தான் முதலில் திருமணம் ஆகியிருந்ததால் பெரி யவர்கள் அவளுக்கே அவ்வுரிமை கொடுத்தார்கள். ஆனால் சமூக சேவை செய்யும் போது ஏற்பட்ட சில மணி நேரப் பழக்கத்தில் ஒரு தம்பதியினர் என்னை அவர்களுடைய பதிவுத் திருமணத்துக்குச் சாட்சிக் கையெழுத்துப் போட அழைத் தார்கள். அப்போது பதிவாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் இரண்டாவதுமுடிச்சை நான் போட்டேன். அன்று கல்யாணத்தில் தப்பிப் போன வாய்ப்பே நினைவுக்கு வந்தது.
எஸ். எஸ். லக்ஷ்மி, நங்கவரம்

இந்தியாவில் மற்ற எந்த நகரங் களையும்விட பெங்களூரில் தற்கொலைகள் அதிகமாக நடக்கின்றன. 1964—ல் 6 மாதத்தில் சுமார் 664 பேர் தற் கொலை செய்து இறந்திருக்கிறார்கள். பெங்களூரின் அபரிமிதமான வளர்ச்சி இதற்குக் காரணம் என ஆராய்ச்சி யாளர்கள் கருத்து தெரிவித்துள் ளார்கள். தற்கொலை செய்பவர்களில் இரண்டாவது இடத்தை வகிப்பது சென்னை.

—கே. எஸ். கணபதி சுப்ரமணியம்.



இன்பக் கனவுகள், இனிய நினைவுகள்

அந்த சுப நேரத்துக்காக இனிய கனவு களுடன் காத்திருந்தேன். முன்னமே பழகிய வர்தான். என்னைவிடச் சற்றே உயரம். குனிந்து தாலி முடியும் சாக்கில் உதடு களால் தலையில் உரசுகிறார்... அருகில்நின்ற நாத்தனார் சங்கடத்தில் நெளிய... எனக்கோ உடல் முழுதும் மின்சாரம் பாய்கிறது. இதயம் படபடவென்று நெஞ்சுக்கூட்டில் வந்து 'தம் தம்'மென்று மோதுகிறது. அந்த இன்ப நினைவுகளை இதயத்தில் பூட்டி வைத்திருக்கிறேன்.
திருமதி சாரதாம்பாள், மதுரை-10

என் குழந்தைகளின் அம்மா

இரண்டாவது வயதிலேயே தாயையிழந்த எனக்கு அவள் முகம் கூட நினைவில்லை. புகைப்படமும் இல்லை. மூன்று முடிச்சுப் போட்ட போது என் மனைவி தாயாகிக் குழந்தைகளிடம் தாய்ப்பாசத்தைப்பொழியப் போகும் இனிய எதிர்காலத்தை நினைத்துக் கொண்டேன். என் கண் கலங்கி விட்டது.
எஸ். வெங்கடேசன், திருச்சி-21

பத்திரப்படுத்திய புரோகிதர்

அண்ணாவின் கல்யாணத்தின் போது முகூர்த்த நேரத்தில் தட்டிலிருந்த திருமாங் கல்யத்தைக் காணவில்லை. மணப்பெண்ணின் தாயார் அவசர அவசரமாகத் தன் கழுத்தி லிருந்த திருமாங்கல்யத்தை எடுத்து மஞ்சள் கயிற்றில் கோக்கப் போன போது மணப் பெண்ணே பார்த்தாள், புரோகி தரின் இடுப்பிலிருந்து புதுக்கயிறு பத்திரமாகத் தொங்குவதை!
ஆர். லலிதா, சென்னை-61

ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடவை யைக்குலுக்கல் முறையில் பரிசாகப் பெறு பவர்:

வி. கோமதி ரமணி
10, கோ—ஆபரேடிவ் காலனி,
திண்டுக்கல்-624 001.

பூஸ்ட் துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்திற்கு நாள்தோறும் ஈடுகொடுப்பது



உங்கள் மகன் அருந்தும் காலைக் கோப்பை பாலுடன் கலந்துக் கொடுங்கள் சக்தியளிக்கும் பூஸ்ட், நாள்தோறும், காலை தோறும்.

பிறகு பாருங்களேன்! நாள் முழுவதும் அவனே ஒரு அதிவேக ரயில் வண்டி தான்!


காலை ஸ்கூலில் ஆரம்பித்த நேரங்கள், தொடர்ந்து உருண்டு புரண்டு களித்திடும் கால் பந்தாட்டம். பிறகு முழு கவனத்துடன் முடிக்கப்படும் வீட்டுப் பாடங்கள் வரை ...

இதற்கென்றே பூஸ்டின் சக்தி.

உங்கள் மகன் துடிப்புடன், களிப்புடன் ஒவ்வொரு நாளையும் கழிக்க உதவுகிறது.

காலை முதல் இரவு வரை.

பூஸ்ட் புது ஆடைப்பால், பொன்னிற கோதுமை, மால்டெட் பார்லி மற்றும் சுவையான கோக்கோவை ஒருங்கே சேர்த்து, உங்கள் குழந்தைக்குத் தேவையான சக்தியளிக்கும் கார்போஹைட்ரேட்டுகளையும், திடமான உடற்கட்டிற்கு ப்ரோடீன்களையும் அளிக்கிறது.



துடிதுடிப்புடனும், உற்சாகத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.

8342

வலைத்தொழிலாளி

நெல்லை மாவட்டத்துக் கோவில்பட்டி வட்டாரக் கரிசல்காடுகளில் ஒன்று இடைசெவல் என்கிற சிறு கிராமம். இங்கே வானம் பொய்க்கும்; வறண்ட கிணறுகள். இந்த மக்களின் பிரச்னைகள் ஏராளமானவை. இங்கே பிறந்து, வளர்ந்து இந்த மக்களோடு ஒன்றி உறவாடிப் பெற்ற அனுபவங்களை, மனம் லயித்து எழுதுகிறவர் அன்பர் கி. ராஜநாராயணன்.

எட்டாவது கூடப் படிக்காத இந்த விவசாயி எழுதுகிற இலக்கியங்கள் மதுரைப்பல்கலைக்கழகத்தில் எம். ஏ. வகுப்புக்கும் பாடமாக வைக்கப்படுகிற அளவுக்கு உயர்தரமானவை. வட்டார இலக்கியத்தில் வகையான அணுகுமுறை இவருடையது. 'கரிசல் இலக்கியம்' என்கிற வடிவத்துக்கு இவரே மூலபிதா.

ரசிகமணியிடம் அளவற்ற ஈடுபாடு கொண்ட ராஜநாராயணன் 'மாந்தருள் ஒரு அன்னப் பறவை' என்று அவரைப்பற்றி எழுதியுள்ள சிறுநூல் மிகவும் உயர்தரமானது. ரசிகமணி என்றால் கடித இலக்கியம் நினைவுக்கு வரும். ராஜநாராயணன் எழுதுகிற கடிதங்களும் அற்புதமான இலக்கிய வடிவங்கள்.

மணிமணியான கையெழுத்துக்குச்சொந்தக்காரரான கி. ராஜநாராயணனுக்கு அன்பர்கள் மதுரையில் மணிவிழாக் கண்டிருக்கிறார்கள். இவருக்கே இவருடைய பிறந்த தேதி எதுவென்று தெரியாவிட்டாலும் உத்தேசமான வயது, விழா. வாழ்த்துகிறோம்.

(தகவல்கள் உதவி: ராஜநாராயணன் சிறுகதைகள் பற்றி ஆய்வு செய்துள்ள திருமு சுதந்திரமுத்து தொகுப்பு கர்ணபாலன்)

''ஐயா எடசெவலுக்குக் காரு எப்போ?''

''இக்கட்டு எங்கே போடுராக ஐயா?''

''அய்யா... அய்யா...''

காக்கி யூனிபாரம் அணிந்து கண்ணுக்குத் தட்டுப்பட்ட ஒவ்வொரு கண்டக்டர் டிரைவரிடமும் கூட அந்தப் பட்டிக்காட்டுக் கிழவி கேட்டுக் கொண்டே இருந்தாள். பிச்சைக்காரி கேட்பதைப் போலத் தொய்ந்து.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வார் யாருமில்லை அங்கே.

பஸ் ஸ்டாண்டு ஏஜெண்ட் ஒருவன் கொசுவலை முண்டாபனியன் அணிந்து அதன் மேல் மெல்லிய ஜிப்பாவை அந்தப் பனியன் தெரியும்படி போட்டுக்கொண்டு, இடுப்பில் அகலமான பச்சைநிற துணி பெல்ட் அதில் மணிப்பர்ஸ் எல்லாம் வைத்திருந்தும் ஜிப்பா வழியாகத் தெரிந்தது. தலை ஜோராக சுருள் சுருளாக மோதிரங்களை வரிசைப்படுத்தி அடுக்கி ஒட்ட வைத்தது போலிருந்த ஒன்றினுள் ஒரு பென்சிலைச் சொருகிக் கொண்டு ராஜகம்பீரமாக ஸ்டேஜினுள் நுழையும் ராஜபார்ட் செட்டரான் சேட்டாக வாத்திக் கொண்டு வந்தான்.

கிழவிக்கு எப்படியோ அவனைப் பற்றித் தெரிந்திருந்தது போலும். ''ஐயா எடசெவலுக்குத் இக்கட்டு எப்பக் குடுப்பாக?'' என்று பொக்கை வாயால் மரியாதைச் சிரிப்போடு கேட்டாள்.

பல் இல்லாத அவனுடைய வாய் சில்லறை எடுக்கத் திறக்கும் ஜிப்பில்லாத மணிபர்சை அவனுக்கு ஞாபகப்படுத்தியது.

கி. ராஜநாராயணன்

அவன் 'யானை மேல் போகும் சுண்ணாம்புக் காரன்.' இவளுக்கெல்லாம் பதில் சொன்னால் அவனுடைய 'கவுரதை' என்னாவது? கிழவியைத் தன் பார்வையிலிருந்து உதறி விட்டு வேறு ஏதாவது கண்ணுக்கு 'குளிர்ச்சி'யாகக் கிடைக்குமா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். அது கிடைக்காது போகவே கிழவிபேரில் அவனுக்கு எரிச்சலாக வந்தது.

கிழவி அவன் பின்னாலேயே நடந்து கொண்டு அதே போல கேள்வியையே கேட்டாள். அதற்கு அவன் ''எடச்சவளா...?'' என்று நையாண்டியாகக் கேட்டுவிட்டு ''அங்கே போயி உக்காருங்க; பொளவு கூப்டுவாக'' என்று சொன்னான்.

டிரைவர்களும் கண்டக்டர்களும் ஒரு ஆனந்தமான விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த பஸ் ஸ்டாண்டில் மூட்டைத் தூக்கிப் பிழைக்கும் கூலிகளில் ஒருவனுக்குப் பதினெட்டு வயசிருக்கும். நல்ல தடியான திரேகம். மொட்டைத்தலை. அரை ஊமை. அதோடு வாய் படு சொன்னல். மேல் துண்டு இல்லாமல் இடுப்பில் மட்டும் எப்போதும் இறுக்கிய தார்ப் பாய்ச்சு. மொழு மொழு என்று கொழுத்த கருமொழுகாய் இருக்கும் அவன் திரேகத்தைப் பார்க்கிறவர்களுக்கு, ஓங்கி அதில் ஒரு இறுக்கு வைக்கக் கை துறுதுறுக்கும்போலும்.

எதிர்பாரா சமயத்தில் ஒரு கண்டக்டரோ டிரைவரோ அவன் முதுகில் ஒரு குடுப்புக் கொடுப்பான். வீல் என்று அவன் அடித்தவன் மேல் பாயும்போது மற்றவன் அதை விட வேகமாக ஊமையனின் முதுகில் ஒன்று கொடுத்து அவனைத் திசை திருப்புவான். அடிகளும் வேதனையும் தாங்க முடியாமல் போகும் போது அந்த அனுதை, ஓடிச் சென்று ஒரு பெரிய கல்லை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு வருவான். ஆனால் அவனிடமுள்ள நல்ல குணம் யார் மீதும் அதைப் போட மாட்டான்.

இப்பொழுதுதான் போடப் போவது போல் இருக்கும்: அவ்வளவுதான். கொஞ்ச நேரத்திலெல்லாம் அடிகள் திமுதிமுவென்று விழும்: ஆனால் யார் அடித்தார்கள் என்றே அவனுக்குத் தெரியாது: சுற்றி நின்று கொண்டு அப்படி ஒரு அடிமுறை!

கேவிக் கேவி அழுது கொண்டே அவன் தன்னை அடித்தவர்களை ஆத்தா அக்காபெண்டாட்டி, பிள்ளை என்று அவன் மொழியில் தாறுமாறாக ஏசுவான். அதைக் கேட்டு அந்தத் தொழிலாளர்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள்.

யார் யாரிடமோ தாங்கள் பட்ட துன்பங்களையும் யார் யார் மீதோ தாங்கள் காட்ட வேண்டிய ஆங்காரத்தையும் எவ்வித முகாந்தரமும் இல்லாமல் இந்த மூட்டை தூக்கிப் பிழைக்கும் அனாதையிடம் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

இது தினம் தவறாமல் நேரம் தவறாமல் நடக்கும் கண்கொண்டு பார்க்க முடியாத 'கங்காட்சி.'

திருநெல்வேலிக்கு டிக்கெட் போடுவதாக யாரோ சொன்னார்கள். கிழவியம்மாள் விரைந்தாள்.

பலாச்சுளையை ஈக்கள் மொய்த்தது போல கண்டக்டரைச் சூழ ஒரு கூட்டம்.

முதலில் திருநெல்வேலி இருக்கா: என்பது தான் முதல் கேள்வி. பூராவும் திருநெல்வேலியாகவே இருக்க வேண்டும். அதில் ஒரு சோகம் இருக்கிறது. இடைவழியில் பஸ்ஸை நிறுத்த வேண்டாம். மத்தியில் இறங்கு கிறதுகளை எண்ணித் தொலைத்து மீதிகளைக் கணக்குப் பார்க்க வேண்டாம்: டிக்கெட் புத்தகத்தை எடுத்துக் கிறுக்க வேண்டாம்: அதில் ஒவ்வொண்ணு சரியாகச் சில்லறை கொண்டு வராமல் நோட்டுகளை வேறு நீட்டும்: எம்புட்டுச் சிரமம்.

இந்தத் திருநெல்வேலி போகிற சனியன்கள் சரியாக ஒத்தை ரூபாய் நாப்பத்தி ரெண்டு பைசாவைக் கொண்டு வந்து தொலைக்கிறதேயில்லை. இப்போதான் பெரிய இதுகள் மாதிரி அஞ்சு ரூபா பத்து ரூபா நோட்டுக்களைக் கொண்டு வந்து நீட்டுகிறது.

யாரோ ஒரு வெளியூர் ஆசாமி: இந்த ஊர்த் தடத்துக்கே புதுசு போலிருக்கு. திருநெல்வேலிக்கு டிக்கெட் கொடுக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் நேரே டிக்கெட்



கொடுப்பதற்கென்றே கட்டிப்போட்டிருக்கும் கவுண்ட்டர் ரூமைப் பார்த்துப் போனார். சரியான பைத்தாரமனுசன் போலிருக்கு. அவர்கள் ஊரில் கண்டு அப்படிக் கொடுக்கிறார்களோ என்னமோ. இது எங்க ஊரு. இந்த ஸ்டாண்ட் இவர்களுடைய ராஜ்யம். கொடி ஒண்ணுதான் பறக்கலை.

கண்ணாடி போட்ட அந்த வெளியூர் ஆசாமி புத்தம் புதிய பத்து ரூபாய் சலவை நோட்டைக் கண்டக்டரிடம் நீட்டி. ''ஒரு திருநெல்வேலி'' என்று சுத்தமான தமிழில் சொன்னார்.

''சில்லறை மாத்திட்டு வரணும்'' என்று பட்டென்று பதில் சொன்னார் கண்டக்டர். இந்த மாதிரி ரூபாய் நோட்டைப் பார்த்ததே இல்லையென்று நினைத்து விட்டார் போலிருக்கு என்றிருந்தது கண்டக்டரின் மேல்கொண்ட பார்வை. கண்டக்டரின் எதிரே 'மலை'போல் சில்லறை குவிந்திருந்தது. குவிந்திருந்தால் என்ன: சில்லறை கொடுக்க வேண்டுமென்று எந்தச் சட்டத்தில் சொல்லி இருக்கிறது?

''ஐயா. பொம்பளையாளு: ஒரு எட செவல் குடுங்க ஐயா...'' கிழவி தடுமாறி,

> அமெரிக்காவில் ஃபோர்ட் லாடர்டேல் என்ற ஊரில் கென் மக்அவாய் என்பவருக்கு மூளையில் கடுமையான கான்ஸர் நோய். அவர் பிழைப்பது துர்லபம் என்றே மருத்துவர்கள் கூறி விட்டனர். ஆனால் கான்ஸர் கண்டுள்ள மக் அவாயின் மூளை என்னவோ சாமர்த்தியமாகவே இயங்குகிறது! அவர் உள்ளூர் பத்திரிகையில் இரண்டு விளம்பரங்கள் அளித்தார் — தான் இறந்த பிறகு மேல் உலகத்தில் உள்ளவர்களைச் சந்தித்து அவர்களின் பூலோக நண்பர்களும் உறவினர்களும் அனுப்பும் செய்திகளைத் தெரிவிக்கத் தயாராய் உள்ளதாக அறிவித்தார்; இப்படிச் சேர்ப்பிக்கும் ஒவ்வொருசெய்திக்கும் 20 டாலர்கள் கட்டணம் என்றார். கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு ரசீது தருகிறார். செய்திகளையும் ரசீதின் நகல்களையும் தம்முடன் சவக்குழிக்கு எடுத்துச் செல்வாராம்! இவரை நம்பிப் பணமும் செய்திகளுமாய் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன!
>
> ஆதாரம்: விச்சிட்டர் ஃபால்ஸ் ரிகார்ட் நியூஸ்.



கூட்டத்தில் இடிபட்டுக் கொண்டே வந்து கெஞ்சினாள். ஒரு சிவன் பார்வை பார்த்தார் கண்டக்டர் அவளை. கடவுள் அவருக்கு நெற்றிக்கண் கொடுக்காமல் அவரேவைத்துக் கொண்டு விட்டார்; குணம் தெரிந்து தானே குதிரைக்கும் அவர் கொம்பு தரவில்லையாம்.

கிழவியைப் பார்த்த அந்தப் பார்வையில் நகைச்சுவை ஏதும் இல்லை; ஆனாலும் தங்களுக்கு டிக்கெட் கிடைக்கும் என்று நம்பி சுற்றிலும் காத்துக் கொண்டிருந்தவர்கள் சிரித்தார்கள்.

நல்ல தெறிச்ச திருநெல்வேலி டிக்கட்டுகளாக மட்டும் ஏற்றிக் கொண்டு அந்த மூக்கு வைத்த பஸ் இடைவழிப் பயணிகளை 'அந்தாந்தரத்தில்' விட்டுவிட்டுப் புறப்பட ஆரம்பித்தது. அதே டயத்தில் சங்கரன் கோவில் பஸ்ஸும் புறப்பட்டது. நாலாட்டின்புத்தூர் வரை இரண்டு பஸ்களுக்கும் வேகத்தில் போட்டாப்போட்டி உண்டு: டிரைவர்கள் என்றால் சும்மாவா! அவர்களுடைய பெயருக்கு முன்னால் பட்டங்கள் உண்டு. இந்த பஸ்ஸை ஓட்டுகிறவர் பெயர் சூறாவளி சுப்பையா. அந்த பஸ்ஸை ஓட்டுகிறவர் பெயர் பெரும்புயல் பெரியசாமி.

திருநெல்வேலி பஸ் தன்னை அனாதரவாக விட்டுவிட்டுப் புறப்பட்டுப் போவதைப் பார்த்த அந்தக் கிழவிக்குத் தன் பேரன் அப்பையா தன்னை விட்டுவிட்டு உயிர்பிரிவதைப் போல் தெரிந்தது. அவன் உடம்பு மோசமாகி விட்டது என்று தகவல் தெரிந்து தான் புறப்பட்டாள் அவள். ''கடவுளே, இந்த வயசுக்காலத்தில் என்னைக் கொண்டுட்டுப் போகப் படாதா...?'' என்று வாய் விட்டுத் தன்னையே சபித்தாள்.

கண்டக்டர்களின் ''ரொயிட்'' என்ற ரைட் ஒலி கொடுக்கப்பட்டதும் மூக்கு வைத்த அந்த இரண்டு பஸ்களுமே வேகமாகப் புறப்பட்டன போட்டி போட்டுக் கொண்டு.

கொஞ்ச தூரம் தான் வந்திருக்கும். அதுக்குள் ரயில்வேக்காரன் கேட்டை இழுத்துச் சாத்தி விட்டான்.

அதனாலென்ன: இன்வாய்ஸ் எழுதறது.

''சங்கரன்கோயில்'' பஸ் கண்டக்டரின் குரல் வெங்கலத்தினால் செய்தது. முன்பு அவன் காபி ஹோட்டல் சர்வராக வேலை பார்க்கும் போது ''ஒரு தோசை ஸ்பெஷ...ல்...'' என்று குரல் கொடுத்தால் ஏழு ஹோட்டல் சரக்கு மாஸ்டர்களுக்கும் கேட்கும். இப்பவுங்கூட பஸ் ஓடிக் கொண்டிருக்கும் போதே அதே ஸ்பெஷல் தோசை பாணியில் ''பின்னாலே ஒரு பிளஷா...ர்'' என்று டிரைவருக்குக் குரல் கொடுப்பான்.

இப்போது அந்தக் கண்டக்டர் தன் இருப்பிடத்தில் அமர்ந்து கொண்டே டிரைவருக்கு இன்வாய்ஸ் சொன்னான் இப்படி.

ஒம்பது கழுகு
ஏழு வானரம்
மூணு காக்கா
ரெண்டு கழுது
அஞ்சி குருவி
நாலு ஆடு

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்

ஏமாறாதே

போட்டி 31



நீங்கள் யாரிடமேனும் ஏமாந்து போன சந்தர்ப்பம் இருக்குமே அதைக் கீழே வெற்றிடத்தில் எழுதுங்கள் சுருக்கமாக. மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமையும். பிரசுரமாகும் சுவையான ஏமாற்றத்துக்குப் பரிசு உண்டு! இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து உறையின்மேல் ''ஏமாறாதே'' என்று குறிப்பிட்டு அனுப்பவும். குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப்புடவை!

முடிவு தேதி: **17-12-84**

இன்னும் 22 பட்டுப்புடவைப் பரிசுகள் காத்திருக்கின்றன. வாரம் தவறாமல் போட்டியில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்:..............................

விலாசம் : ....

....

அறியாதவர்கள் பஸ்ஸினுள் இருப்பது மனுஷாள் இல்லையோ என்று எண்ணத் தோன்றும். ஆனால் அது அவ்வளவும் கழுகுமலை, வானரமுட்டி, காக்காத்தோப்பு, கல்லூரணி, குருவிகுளம், நாலு ஆட்டின் புத்தூர் இப்படி ஊரின் பெயர்கள்.

பஸ் இடைசெவலை அடுத்து வந்துகொண்டிருந்தது. சீந்தரிப்பான குளிர்வாடை பஸ்ஸினுள் சீறித் தாக்கியது. ஒரு பச்சைக் குழந்தையை சளிக் காய்ச்சலோடு மடியில் படுக்க வைத்துக் கொண்டிருந்த ஒரு அம்மாள் குழந்தைமேல் குளிர்க் காற்றுத் தாக்காமல் இருக்க பஸ்ஸின் ஜன்னல் திரையை அவிழ்க்க ஆரம்பித்தாள்.

''யாரு திரையெ அவிழ்க்கிறது?'' என்று புலிக்குரலில் கண்டக்டர் ஒரு அதட்டுப் போட்டான்.

இடைசெவலின் ரோட்டோரத்திலுள்ள மயானத்தில் கூட்டமாக இருந்தது. எருவை அடுக்கி அதன்மேல் ஒரு பையனின் உடலைப் படுக்க வைத்திருந்தது. தலையிலிருந்து கால் வரை பயணைப் பீலால் மூடப்பட்டிருந்தது. முகத்தில் வாய்க்கு நேராக மட்டும் ஒரு ஓட்டை போடப்பட்டிருந்தது.

கூட்டத்திலிருந்த எல்லோருடைய கண்களும் பஸ்ஸையே பார்த்துக் கொண்டிருந்தன. பஸ் நிற்கவில்லை.

கிழவியால் தன் பேரனுக்கு வாய்க்கரிசி போட முடியாமல் போய் விட்டது.

இவைகள் எல்லாம் நடந்து முடிந்து சரியாக ஐம்பது ஆண்டுகள் கழிந்து...

இப்பொழுது அந்த பஸ் நிலையம் அங்கு இல்லை. ஏதோ ஒரு பூங்காவனத்துள் நுழைவது போலிருக்கிறது. பஸ்களெல்லாம் ராட்சச பிளஷர்கார்கள் போல இருக்கிறது. சப்தம் செய்யாமல் தரையை ஒட்டி வேகமாகப் பருந்தைப் போல் பறந்து செல்கின்றன.

இதோ இருக்கும் இவர்களெல்லாம் தேவர்களா? கண்டக்டர்கள்தானா? வயசான ஒரு கிழவியைக் கைலாகு கொடுத்து காரில் ஏற்றி விடுகிறானே!

இப்போதெல்லாம் கிழவர்களுக்கும் குழந்தைகளுக்கும்தான் முதல் மரியாதை. உட்கார்ந்து கொள்ளும் ஆசனங்கள் கூட பிளஷர் காரில் உள்ளவை போல சுகசௌகரியமுள்ளவை.

இடைவழி ஊர்களுக்கென்று தனி பஸ்களும், நேராகப் போவதற்கென்று தனிபஸ்களும் இருப்பதால் முன்னைப் போல் இடைஞ்சல் இல்லை.

பஸ் போய்க் கொண்டிருக்கிறது. காய்ச்சலோடு அம்மாவின் மடியில் ஒரு குழந்தை படுத்திருக்கும் இடத்திற்கு கண்டக்டர் வருகிறார்.

''அம்மா காத்து குளிர் அடிக்கிறதே; ஜன்னலை மூடிவிடுங்களேன்'' என்று அன்போடு சொல்லி அவனே அந்தக் கண்ணாடி ஜன்னலை மேலே ஏற்றி அடைக்கிறான்.

நாம் வசிக்கிறது இப்பொழுது பூலோகமில்லை: தேவலோகம்.

(கதை எழுதிய வருஷம் 1965)





எனது ஆறு வயதுச்
செல்வி பரத
நாட்டியம் நன்கு
ஆடுகிறாள்.
நாளைய உலகமே
அவளது மேடையாம்."

போர்ன்விடாவின் இனிமைக் காலம்

போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள்
நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!

1 கிலோ பேக்கிலும் கிடைக்கிறது. அதன் உள்ளே ஒரு இலவசக் குவளை.

வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்டட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்? போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் தங்களுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்ததல்ல என்று வலியுறுத்திக் கூறுவதேன்?

அதில்... உற்சாகம் தள்ளும் சுவை மட்டுமல்ல, காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல. அவற்றைவிட அதிகமோ அதிகம். அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.

காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி,
போர்ன்விடா பயிற்சி.



OBM/3783 TAM



O காங்கிரஸின் இளைஞர் அணி (வானர சேனை) சீருடையில் இந்திரா பெற்றோருடன்

3

எல்லா வீடுகளையும் போல் ஆனந்த பவனிலும் அவ்வப்போது யுத்தம். மதனிக்கும் நாத்தனருக்கும் எப்போதும் மனஸ்தாபம். கமலா, மோதிலால் பார்த்துத் தேர்ந்தெடுத்த நாட்டுப் பெண். ஆனந்த பவனத்தை விட அந்தஸ்தில் ஒரு நூல் குறைந்த குடும்பம் கமலாவினுடையது. பணத்திலும் சற்று மட்டு.

வருஷத்திற்கொரு முறை ஐரோப்பாவில் சுற்றிவிட்டு வருவது மோதிலால் குடும்பத்து வழக்கம். அப்படித் திரும்பும் போது அந்த வருஷத்து 'பாஷன்' ஆனந்த பவனத்தில் நுழைந்து விடும். வீட்டில் இருந்த அத்தனை பேரும் வெளிநாட்டில் படித்தவர்கள். ஐரோப்பிய நாகரீகம் ஆனந்த பவனத்தில் நடைமுறை. சாப்பிடுவதற்கு மேஜை. கரண்டி. கத்தி. நிமிர்த்தி வைத்தால் வேண்டும். கவிழ்த்து வைத்தால் போதும். குறுக்கே வைத்தால் வேறொரு அர்த்தம். கமலாவிற்கு இதில் பரிச்சயமில்லை. வந்த புதிதில் கண்ணைக் கட்டி விட்டதுபோல் இருந்தது. பரிமாறும் போது பாத்திரம் நடுங்கும். சாப்பிடும் போது பண்டம் சிதறும்.

நாத்திகள் சிரிப்பார்கள். கேலி செய்து கைகொட்டுவார்கள். நினைத்துக் கொண்ட போது நக்கல் பண்ணுவார்கள். கமலாவும் ஏதும் பேச மாட்டார். காயம் பட்டதைக் காண்பித்துக் கொள்ள மாட்டார். மன்னியை அழ வைக்க முடியாத நாத்தனார்கள், இந்திராவைச் சீண்டுவார்கள். அத்தைகளின் வார்த்தைகளுக்கு அழுது விட மாட்டார் இந்திரா. ஆனால் காயம் பட்டுச் சுருள்வார். அம்மாவிடம் ஒண்டிக் கொள்வார். அம்மா

அம்மா வழியில் ஒரே தேர்

இந்தியாவின் இந்திரா

மாலன்

விற்குப் பெண் ஆறுதல். பெண்ணிற்கு அம்மா ஸ்நேகம்.

இந்திராவிற்கு ஆறு வயதான போது இரண்டாவது குழந்தையைப் பெற்றெடுத்தார், கமலா. ஆண் குழந்தை. நேருவின் இந்த மகன் நிலைக்கவில்லை. பிறந்த இரண்டாம் நாளே. பெயர் வைக்கும் முன்னரே இறந்து போனான். அடுத்த வருடத்தில் இன்னொரு குழந்தை. ஆனால் தங்கவில்லை. அபார்ஷன்.

அம்மாவிற்குப் பூஞ்சை உடம்பு என்று பெண்ணிற்குப் புரிந்தது. தனக்கு விதித்தது ஒரே பெண்தான் என்று தாயின் மனம் தேறிற்று. இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பாசம் நாளாக நாளாக இறுகிற்று.

குழந்தை இந்திரா ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்தாள். தில்லியில் தாத்தா (அம்மாவின் அப்பா) வீட்டில் தங்கியபடி பள்ளிப் படிப்பு ஆரம்பம் ஆயிற்று. அம்மாவைப் பிரிந்து இருப்பது குழந்தைக்குப் பிடிக்கவில்லை. பள்ளிக்கூடம் போவதற்கு அழுகை. தினம் தினம் ரகளை.

குழந்தையை அம்மாவிடமே திருப்பினார்கள். அதற்குள் அம்மாவிற்கும் உடல்நிலை மோசமாகி இருந்தது. கமலாவைச் சிகிச்சைக்காக ஸ்விட்சர்லாந்து அனுப்புவது என்று தீர்மானம் ஆகியது. அம்மாவோடு குழந்தையையும் அனுப்புவது. அங்கேயே ஒரு நல்ல பள்ளியாகப் பார்த்துச் சேர்ப்பது என்று முடிவு.

எட்டு வயதில் அன்னியப் பள்ளிக்கூடம் ஒன்றில் இந்திராவின் படிப்பு இரண்டாம் முறையாகத் துவங்கியது. இந்த முறையும் அம்மா அருகில் இல்லை. ஆஸ்பத்திரியில் அம்மா. ஹாஸ்டலில் பெண். ஆனால் இப்போது அழ முடியவில்லை. அந்த வருடங்கள் கடந்து விட்டன. இது விவரம் புரிகிற வயது. சொந்தமாக யோசிக்கத் தெரிந்த வயது. தனக்கு விதிக்கப்பட்டிருக்கிற தனிமை. அதற்கான காரணங்கள் எல்லாவற்றையும் தான் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிற வயது. இப்போது அழுதால் சிரிப்பார்கள். கோபித்துக் கொள்வார்கள். இந்திரா அழவில்லை. தனிமையை நினைத்தால் மனசு கலங்கும். ஆனாலும் அழவில்லை.

அம்மாவைப் பார்க்க அப்பா அவ்வப்போது வருவார். அப்போதெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வந்து வீட்டிற்கு அழைத்துப் போவார். நீள நீளமாய்க் காலில் பலகை மாட்டிக் கொண்டு பனிச் சறுக்கு (Ski) கற்றுக் கொடுப்பார். குதிரை மீதேறி, லகானை இழுத்துப் பிடிக்க, வயிற்றில் உதைத்து வேகமாய்ப் புறப்படச் சொல்லிக் கொடுப்பார். அற்புதமான நாட்கள் அவை. ஆனால் நிச்சயமில்லாத நாட்கள். அப்பா இன்னும் கொஞ்சநாள் இருப்பார் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அரசியல் வேலை காரணமாக அழைப்பு வரும். அடுத்த நிமிடம் கிளம்பி விடுவார். அப்படி எதுவும் நடக்காவிட்டால் அத்தை கூட வருவார். மலையும் பனியும் மரமும், காடுமாக பரந்திருக்கிற, பரபரப்பற்ற, சுறுசுறுப்பில்லாத ஸ்விட்சர்லாந்து சீக்கிரமே அத்தைக்குப் போரடித்து விடும். இத்தாலிக்குப் போகலாம். ப்ரான்சுக்குப் போகலாம் என்று அப்பாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு உலகம் சுற்றக் கிளம்பி விடுவார்.

அம்மாவிற்கு உடம்பு தேறியிருந்த ஒரு சமயம் அப்பா வந்திருந்தார். அங்கிருந்து எல்லோரும் ரஷ்யா போவது என்று முடிவாயிற்று. அத்தை கிளம்பினார். அப்பாவும் சேர்ந்து கொண்டார். அம்மா கூடப் புறப்பட்டாள். ஆனால் இந்திரா மட்டும் இல்லை. பள்ளிக்கூடம் முக்கியம் என்று விட்டுவிட்டுப் புறப்பட்டார்கள்.

அந்த நிமிடத்தில் இந்திராவிற்கு ஒன்று புரிந்தது. ஆதார குணங்கள் உருவாகிற அந்த வயதில் மனத்தில் ஒரு தடம் விழுந்தது. யாரையும் எதற்கும் எதிர்பார்க்கக் கூடாது. அவரவருக்கு அவரவர் வேலை. நம்முடைய காரியங்களை நாம் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் நம்மைத்தான் சார்ந்திருக்க வேண்டும்.

இரண்டு வருடம் கழித்து உடல்தேறிக் கமலா இந்தியா திரும்பினார். இந்திராவிற்கு மறுபடி பள்ளி மாற்றம். இப்போதும் சங்கடம். இரண்டு வருடம் வெள்ளைக்காரப் பள்ளியில். அதன் படிப்பு முறையில், அந்தப் பழக்கவழக்கங்களில் பழகிவிட்டு அதற்கு நேர் எதிரான ஒரு அமைப்பில் தூக்கியெறியப்பட்டதால் யாருடனும் ஒட்ட முடியவில்லை. சுலபமாகப் பழக முடியவில்லை. மறுபடியும் தனிமை.

பள்ளிக்கூடம் விட்டுப் பள்ளிக்கூடம் பந்தாடப்படுகிற நிலைமை அடிக்கடி நேர்ந்தது. பன்னிரண்டு வருடங்களில் ஆறு பள்ளிக்கூடங்கள் மாறினார் இந்திரா. புனாவில் இரண்டு வருஷம். சாந்திநிகேதனில் இரண்டு வருஷம். மறுபடி ஸ்விட்சர்லாந்தில் சில காலம் என்று திசைக்கொரு பள்ளியாக ஊர் விட்டு ஊர் மாறிப் படித்தார் இந்திரா. அடிப்படைக் காரணம் அம்மாவின் உடல்நிலை. அம்மாவை விட்டுப் பிரிய மனமில்லாத பெண்ணின் மனநிலை.

தன்னுடைய உடல்நிலை, கணவரின் அரசியல் இந்த மாதிரி எந்தக் காரணம் கொண்டும் பெண்ணின் படிப்புக் கெட்டு விடக் கூடாது என்று கமலா விரும்பினார். தான் பட்ட கஷ்டங்களைத் தன் பெண் படாதிருக்க வேண்டுமானால் படிக்க வேண்டும். படிப்பு ஒன்று தான் பெண்களைக் காப்பாற்றும். தன் பெண் மட்டுமல்ல. இந்தியப் பெண்கள் எல்லோரும் படிக்க வேண்டும். ''நான் இந்தியா திரும்புவேன். திரும்பிய

தும் நம்மூர் பெண்கள் எல்லோரும் படிக்க இயக்கம் நடத்துவேன். படிப்பில்லாமல் நாம் பட்ட கஷ்டங்கள் நம் தலைமுறை யோடு போகட்டும்'' என்று சுவிட்சர்லாந் தில் இருந்து தோழிக்குக் கடிதம் எழுதினார் கமலா.

ஆனால் அவர் இந்தியா திரும்பவே இல்லை. நாளுக்கு நாள் உடம்பு க்ஷீண மாயிற்று. வந்திருக்கிற நோய் டி.பி. என்று நிச்சயமாயிற்று. டி.பி. என்று தெரிந்ததும் கெடுபிடிகள் அதிகமாயின.


யாரும் பக்கத்தில் போகக் கூடாது. துணிகளைத் தொடக் கூடாது. கிட்டே நின்று பேசக் கூடாது. குழி வந்தால் அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொள்கிற, கன்னத்தில் முத்தம் தருகிற இந்திராவிற்கு இந்தக் கெடுபிடிகள் நரகமாய் இருந்தன. கட்டளை களைத் தூக்கி எறிந்தார். அம்மாவைச் சுற்றிச் சுற்றி வந்தார். நாட்டுப்பெண்ணைப் பார்க்க வந்த மோதிலால் இந்த ஒட்டுதலைக் கண்டு திடுக்கிட்டார். பேத்தியையும் நோய் பிடித்துக் கொள்ளக் கூடாது என்று பயந் தார். நேருவைக் கூப்பிட்டு எப்படி இந்த நெருக்கத்தை அனுமதிக்கிறாய் என்று இரைந்தார்.

யாருடைய அதட்டலும் அழுகையும் கமலாவைக் காப்பாற்ற முடியவில்லை. தன் னுடைய பதினெட்டாம் வயதில், அம்மா வடிவில் இருந்த தன்னுடைய ஒரே தோழி யையும் இழந்தார் இந்திரா.

அம்மாவின் ஆசையை நிறைவேற்றஆக்ஸ் போர்ட் போனார். ஆனால் படிப்பில் மனம் நிலை கொள்ளவில்லை. ப்ளூரசி நோய் வந்து படுக்கையில் தள்ளிற்று. இரண்டு முறை பரீட்சையில் தோற்றுப் போனார். ஐரோப்பா வில் யுத்த மேகங்கள் திரண்டன. நீ படித் தது போதும். திரும்பி வா என்று கடிதம் எழுதினார் நேரு.

திரும்பி வந்த இந்திரா சில நாட்களில் திருமணம் பற்றி அறிவித்தார். வீட்டில் புயல் மூண்டது.

(தொடரும்.)



கற்பனை பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவை பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை.
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்.
அக்கூந்தலுக்கு
வி.வி.டி.தேங்காய் எண்ணெய்...

V.V.D

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்



V.V.D

EP-VVD-4/84

ஹாம்பர்க்கைச் சுற்றிலும்

ஹாம்பர்க் நகரில் பல முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். முழு அளவில் தனியார் துறையால் நிர்வகிக்கப்படும் இரு மின் உற்பத்தி நிலையங்களைப் பற்றி இங்கே அவசியம் குறிப்பிட வேண்டும். சீமென்ஸ் (Siemens) 'மான்' (M.A.N) இரண்டு தனியார் நிறுவனங்களும் நிர்வகிக்கின்ற சில மின்சக்தி நிலையங்களை ஹாம்பர்க் அருகே பார்த்தோம். மிகக் குறைந்த ஆட்களையும் நவீன உத்திகளையும் பயன்படுத்தி இந்த இரண்டு நிறுவனங்களும் பல அற்புதமான சாதனைகளைச் செய்திருக்கின்றன.

ஹாம்பர்க் அருகில் உள்ள கிரோவியான் (Growian) என்னும் காற்று சக்தி மின்சார உற்பத்தியை மேற்கு ஜெர்மனிய அரசின் ஆய்வு, மற்றும் தொழில் நுட்பத் துறையின் உதவியுடன் நூரன்பர்க்கைச் சேர்ந்த 'மான்' கம்பெனி செய்து வருகிறது. வட கடலோரப் பகுதியிலிருந்து வரும் காற்றினுடைய வேகத்தைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க முயன்று வெற்றி கண்டுள்ளது இந்நிறுவனம்.

சுமார் நூறு மீட்டர் உயரத்துக்கு ஒரு பெரிய இரும்புத் தூணை நாட்டி அதில் இரு விசிறி முனைகளைப் பொருத்திக் காற்றின் வேகத்தில் சுழலச் செய்து பல மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.


மற்றொரு இடத்தில் ஸீமென்ஸ் நிறுவனத்தின் பொறுப்பில் விநோதமான முறையில் ஒரு நீர் மின்சார பவர் ஸ்டேஷன் இயங்குகிறது. எல்பே ஆற்றிலிருந்து பெரிய பெரிய குழாய்கள் மூலம் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய குன்றில் தண்ணீரை ஏற்றிச் செயற்கையான முறையில் அணைபோலத் தேக்கிக் கொள்கிறார்கள். பின் அதே நீரை வேறு குழாய்கள் மூலம் கீழே இறக்கி நீர் மின்சாரம் தயாரிக்கிறார்கள். ஆற்றிலிருந்து நீரைக் குன்றின் மேற்பகுதிக்குப் 'பம்ப்' செய்ய எவ்வளவு மின்சாரம் செலவாகுமோ அந்த அளவையும் அதன் பின் கீழே வரும் தண்ணீர் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யுமோ அந்த மின்சாரத்தின் அளவையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் மீதம் வரும் மெகாவாட்கள் தான் உற்பத்தி. ஸீமென்ஸ் நிறுவனத்தார் இருபதே பேர்களை வைத்துக் கொண்டு இந்த மின்சார உற்பத்தி நிலையத்தை இயக்குகிறார்கள்.

ஹாம்பர்க்கில் மின்சார தேவை உச்சக்கட்டத்தை எட்டும்போது இந்த நிலையத்தை ஸ்விட்ச் ஆன் செய்தால் 19வது செகண்டில் இங்கிருந்து மின்சாரம் போய்ச் சேரும் என்று இயக்கிக் காண்பித்தார்கள். ஜெனரேட்டர்கள், இயந்திரங்களுக்குப் பக்கத்தில் அழுக்கோ, கிரீஸ் தடவிய கறைகளோ, எண்ணெய் படிந்த இடமோ மருந்துக்குக் கூடத் தென்படவில்லை. மெத்தனத்தின் அடையாளமோ கவனக் குறைவின் சாயலோ எந்த மூலையிலும் எள்ளளவும் தென்படவில்லை.

மேற்கு ஜெர்மனியில் பாயும் பல நதிகள் வெவ்வேறு நாடுகளில் உற்பத்தியாகி வெவ்



ஹாம்பர்க் அருகே கிராமக் காட்சி



காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நவீன கருவி

வேறு நாடுகளில் சங்கமமாகின்றன. செ செக்கோஸ்லோவேகியாவிலும், ஸ்விட்ஜர் லாந்திலும் உற்பத்தியாகி நெதர்லாந்து, ஆஸ்திரியாவுக்குள் பாய்கின்றன. அண்டை மாநிலத்தில் உற்பத்தியாகும் காவிரித் தண்ணீரைப் பொறுத்தோ இங்கே ஏகப்பட்ட தகராறுகள். நல்லவேளையாக இம்மாதிரித் தகராறுகள் ஐரோப்பிய நாடுகளிடையே இல்லை.

ஹாம்பர்க் உள்ளிட்ட ஐரோப்பிய நகரங்களில் ஃப்ளீ மார்க்கெட் (Flea Market) எனப்படுகிற சந்தை ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் கூடுகிறது. மலிவாகவும் விதவிதமாகவும் பழைய, புதிய சாமான்களைத் தேடித் தேடி வாங்குவோர்க்கு இக்கச் சந்தைகள் பெரிய வரப்பிரசாதம். 'ஹாம்பர்க்' சந்தையில் கிடைக்காத பண்டமில்லை.


இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் நடுவில் இங்கிலிஷ் கால்வாயைக் கடக்க 'ஹோவர் கிராப்ட்ஸ்' எனப்படும் அதிவேகப்படகுகளைப் பயன்படுத்துகிறார்கள். இதுபோல் மேற்கு ஜெர்மனி முழுவதும் பயணிகள் பயன்படுத்த ஏற்ற அதிவேக ஹோவர் ட்ரெய்ன்களை (Hover Trains) தயாரித்திருக்கிறார்கள். இந்த ஹோவர் ரயில்கள் சாதாரணமாக மணிக்கு முந்நூறு கிலோ மீட்டர் வேகம் செல்லக்கூடியவை. இந்த ஹோவர் ரயில்களுக்கான வெள்ளோட்டத்துக்குமேற்கு ஜெர்மன் அரசாங்கம் தேர்ந்தெடுத்த முதல் நகரம் ஹாம்பர்க்தான். வேக வாகனப் பிரிவு (Trans rapid) ஏற்படுத்தி ரயில்களின் கனத்தைக் குறைத்துத் துரிதமாகவும் சத்தமின்றியும் ஓடவைக்கும் வெற்றிகரமான புதுமையை ஹோவர் ட்ரெய்ன்கள் சாதிக்கக் கூடும். தரை மட்டத்திலிருந்து தான் எழுப்பி

நா. பார்த்தசாரதி

பலமீட்டர் உயரத்தில் கனமான கான்கிரீட் தடம் அமைத்து ஹோவர் ரயில்கள் விடப்படுகின்றன. இந்த ரயிலினுடைய என்ஜின் பகுதி விமானங்களில் அமைக்கப்படுவது போல் காக்பிட் என அமைக்கப்படுகிறது. என்ஜினின் அதாவது காக்பிட் பகுதியின் உட்புறம் சிறிய சுத்தமான கம்ப்யூட்டர் அறை போல் காட்சியளிக்கிறது. ஹோவர் ரயிலின் ஓட்டுநர் 'பைலட்' என்று அழைக்கப்படுகிறார். தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஹோவர் ரயிலில் முந்நூறு பேர்வரை (ஓர் ஏர் பஸ் விமானப் பயணிகளின் எண்ணிக்கை.) பயணம் செய்யலாம்.



O ஹாம்பர்க் ஃப்ளீ மார்க்கெட்



O ஹோவர் ரயில்

நீர் அல்லது நிலத்தின் மீது விரைந்தாலும் நீர் அல்லது நிலத்தின் மீது படாமல் இடைப்பட்ட வெற்றிடத்தின் மீதாக விரைவது தான் ஹோவர் வாகனங்களின் தத்துவம். மிக நவீன விஞ்ஞான அற்புதம் இது.

எதிர்காலத்தில் இப்படி ஹோவர் ரயில்களை அண்டை நாடுகளுக்கு விஸ்தரித்தால் கொலோன் — பிரஸ்ஸல்ஸ் — பாரிஸ் இடையேயுள்ள நெடுந்தொலைவை இரண்டே முக்கால் மணி நேரத்தில் கடந்துவிட முடியும். முதலில் ஹாம்பர்க்கிலும் அப்புறம் ஜெர்மனியின் பல நகரங்களிடையேயும் பிறகு ஐரோப்பிய நகரங்களிடையேயும் ஹோவர் ரயில்கள் ஓடப்போகின்றன.

நாங்கள் ஹாம்பர்க்கில் கழித்த கடைசி தினம் முழுவதும் அருகே இருந்த புராதனமான லூபெக் (Lubeck) நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதில் செலவழிந்தது. லூபெக் ரோம சாம்ராஜ்ய நாளிலிருந்து புகழ்பெற்ற ஒரு சரித்திர நகரம். ஹாம்பர்க் பிரபலமாவதற்கு முன்னர் கடல் வர்த்தகத்திற்குப் பெரிதும் பயன்பட்டு வந்த துறைமுக நகரம் லூபெக்தான்.

இப்பொழுதும் லூபெக்கிலிருந்து பல்வேறு ஸ்காண்டிநேவிய நாடுகளுக்குக் கடற்பயணம் செய்ய முடியும். புகழ்பெற்ற பால்டிக் கடலோர ஓய்விடமாகவும், மீன்பிடி நகரமாகவும் உள்ள 'டிராவெமுண்டே' லூபெக் அருகேதான் இருக்கிறது. இக்கடற் பகுதியில் மகிழ்ச்சிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து தரப்படுகிறது. லூபெக், கடல் வாணிப நகரமாயிருந்தபோது பிரபலமாயிருந்த ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முந்திய பழைய ரெஸ்டாரண்ட் ஒன்றை இன்னும் அதே பழைய சூழலில் நடத்தி வருகிறார்கள். லூபெக்குக்கு வருகிற அனைவரும் இந்தக் கூட்டம் நிறைந்த நெருக்கடியான புராதன உணவு விடுதியில் உண்பதை ஒரு பெருமை மிக்க அனுபவமாகக் கருதுகிறார்கள். இங்கு சமயா சமயங்களில் உட்கார இடம் கிடைப்பதற்குக் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. கப்பல் மாதிரி உருவங்கள், பாய்மரங்கள், நங்கூரங்கள் எல்லாம் இந்த உணவு விடுதியின் மேற் பகுதி விதானம் உத்தரங்களை அலங்கரிக்கின்றன. மேஜை நாற்காலிகள் எல்லாம் அறுநூறு ஆண்டுகள் பழைமையான நீண்ட மரப பாணங்கள்தான். பழைய காலத்தை நினைவூட்டுவது போல் மங்கலான ஒளி ஏற்பாடு.

'லூபெக்' நகரின் மற்றொரு சிறப்பம்சம் புராதனமான லாரென்ஸ் சர்ச்சும், மியூசியங்களும். மதுரை மீனாட்சி கோயில் கோபுரத்தளவு உயரமுள்ள சர்ச் டவரிலிருந்து இரண்டாவது உலக யுத்தத்தின் போது குண்டு வீச்சில் உடைந்து விழுந்த ஒரு பெரிய வெண்கல மணியை அது அன்று எப்படி விழுந்து சிதறியதோ அப்படியே பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். யுத்த அலங்கோலத்தையும் அழிவையும் பயங்கரத்தையும் இன்றும் மக்களுக்கு நினைவூட்டுகிறது அந்த உடைந்த மணி. லூபெக்கை விட்டு வெளியேறும்போது அழகாக எழுதப்பட்டிருந்த ஒரு மரபுக் கவிதையைப் படித்து முடித்த மகிழ்ச்சியும் திருப்தியும் இருந்தது. பிரென்ஸ் பட்டல் (Brunsbuttel) பகுதியில் உள்ள ஓர் அணுமின் நிலையத்தைப் பார்த்துவிட்டு நாங்கள் எங்களுடைய ஹாம்பர்க் நிகழ்ச்சிகளை முடித்தோம்.

நடுவே ஹாம்பர்க்கில் எங்களுக்குக் கிடைத்த ஒரு முழு ஓய்வு நாளில், எங்கள் ஜெர்மன் உதவியாளர் மிகவும் அக்கறையோடு எங்களை எச்சரித்தார்.

''சுதந்திரமாக விட்டுவிட்டார்களே என்று 'ரிப்பர்பான்' ஏரியாவுக்குக் கிளம்பிவிடாதீர்கள். அங்கு இப்பொழுதெல்லாம் மோசடிகள், ஏமாற்றிப் பணம் பறித்தல், பானங்களில் மயக்க மருந்து கலந்து கொடுப்பது என்றெல்லாம் அடிக்கடி நடக்கிறது. நீங்கள் வம்பில் மாட்டிக்கொண்டால் நாங்கள் பொறுப்பில்லை.''

அதுவரை 'ரிப்பர்பான்' ஏரியா என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்த நாங்கள் எங்கள் உதவியாளரிடம் அதுபற்றி மெல்ல விசாரித்தோம். அவர் ஆச்சரியத்தோடு எங்களை முறைத்துப் பார்த்துவிட்டு ''நிஜமாகவே உங்களுக்குத் தெரியாதா உண்மையைச் சொல்லுங்கள்'' என்று எங்கள் மேல் சந்தேகத்தோடு வினவினார். நாங்கள் அப்பாவித்தனமாகத் தெரியாதென்று தலையாட்டிய பின் சிரித்துக் கொண்டே ''ஹாம்பர்க்கின் பிரசித்தமான நைட் கிளப் ஏரியா. சதைச் சந்தை. நீங்கள் பார்க்க வேண்டிய தில்லை'' என்று முடித்தார்.

(தொடரும்)

நெப்போலியன் தன் படையினரைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தான். திடீரென தளபதியிடம் ''நம் படையில் மொத்தம் இலட்சம் போர் வீரர்கள் இருக்கிறார்களல்லவா'' என்று கேட்டான். தளபதி, ''இல்லையே. அறுபதினாயிரம் போர் வீரர்கள்தானே உள்ளார்கள்'' என்று பதிலளித்தான். ''அப்படியானால் நான் சொன்னது சரிதான்'' என்றான் நெப்போலியன். ''நம்மிடமுள்ள போர் வீரர்களோடு என்னையும் சேர்த்துக் கொண்டால் இலட்சம் வீரர்கள் இருப்பதற்குச் சமம்!''

உவகையூட்டும் உலக நிகழ்ச்சிகள் என்ற நூலிலிருந்து ஜா. ரவி.




அழகுப் போட்டி
"நீங்க ஒருத்தர் மட்டுந்தான் அழகி போட்டிக்கு உள்ள அர்த்தத்தை சரியா புரிஞ்சிகிட்டு உயர்ந்த ராகமாலிகா புடவையை கட்டிகிட்டு வந்தீங்க, அதனுந்தான் உங்களே அழகு ராணியாக தேர்ந்தெடுத்து இருக்கோம். ஒரு வருடம் முழுவதும் ராகமாலிகா புடவைகளையே பரிசாக அளிப்போம்."
INA FEATURES

''நவாப் அவர்களே! தளபதிப் பெரியவர்களே! நான் சொல்வதை நீங்கள் எல்லோரும் செவிமடுத்துக் கேட்கவேண்டும். நாட்டில் இப்போது வந்துள்ள அபாயம் ஆர்க்காட்டு சுபாவுக்கு நமது பிரபுதான் நவாபா, அல்லது மூகமதலிதான் நவாபா என்பது பற்றி அல்ல! இந்த இரண்டு பேர் பூசலில் அத்தனை சிற்றரசர்களும் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் சேர்வது கூட அல்ல! நம்முடைய தேசத்து விஷயத்தில் வெள்ளைக்காரன் புகுவதுதான் ஆபத்து!''

– ஸ்ரீவேணுகோபாலன்

7

பழிவாங்க வேண்டும்

உள்ளே வந்த சேவகன் ''குமாரத் தேவர் வந்திருக்கிறார்'' என்று சொல்ல, ''உடனே வரச் சொல்'' என்று சந்தா சாகிப் மறுமொழி கூறிவிட்டு எழுந்தார்.

அவருடன் எல்லோரும் எழுந்தார்கள். குமாரத் தேவர் கம்பீர ஆகிருதியுடன் உள்ளே நுழைந்தார். நெடிய உயரமும் நெடிய மீசையும், இரும்புத் தோளுமாக இருந்தார் அந்த இளைஞர் சிங்கம்.

சந்தாசாகிப் இரண்டடி முன்னால் வைத்து இறுகத் தழுவிக் கொண்டார்.

எல்லோரும் அமர்ந்தார்கள்.

''நல்ல இக்கட்டான நேரத்தில் கைக் கொடுக்க வந்தீர், குமாரத்தேவரே! சேதுபதிகள் சவுக்கியமா?'' என்றார்!

''ராமநாதர் அருளால் சவுக்கியம்!'' என்றார், குமாரத்தேவர்.

குமாரத்தேவர் தெற்கே நெல்லைச் சீமையைச் சேர்ந்தவர். பாளையக்காரர்களிடம் வேலை பார்த்துப் படிப்படியாக உயர்ந்தவர். இப்போது இராமநாதபுரம் அரசர் விஜய ரகுநாத சேதுபதியிடம் முக்கிய தளகர்த்தர்களுள் ஒருவராக வேலை பார்ப்பவர்.

''கடிதம் கிடைத்ததும் சேதுபதிகள் அனுப்பித்தார்கள். வழியெல்லாம் ஆபத்துக்கள். நாடு ரொம்பக் கெட்டு விட்டது பிரபுவே!'' என்று கூறினார் குமாரத் தேவர்.

''படை எவ்வளவு கொண்டு வந்தீர்கள்?'' என்று கேட்டார் சந்தாசாகிப்.

''ஆயிரம் சிப்பாய்கள் வந்திருக்கிறார்கள்'' என்றார் குமாரன்.

நவாபுக்கு முகம் மலரவில்லை.

''இன்னும் அனுப்புவார் பிரபு! கவலை வேண்டாம்!'' என்றார் குமாரன் தொடர்ந்து.

''அனுப்பட்டும்! ஆண்டவன் கிருபை இருந்தால் வரட்டும்! என் கனவு கொஞ்சம் சிதைந்து வருகிறது குமாரதேவரே'' என்றார் சந்தாசாகிப் பெருமூச்சுடன்.

''ஏன் பிரபு?'' என்றார் குமாரன்.

''திருச்சிராப்பள்ளியை முற்றுகை இட்டேன். முகம்மதலி இதற்குள் படிந்திருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டம்! என் நிலை மாறிவிட்டது.''

''என்ன காரணம் பிரபு?''

''இங்கிலீஷ் கும்பினி படை அனுப்பி இருக்கிறது. தஞ்சை அரசரும், புதுக் கோட்டைத் தொண்டைமானும் படை அனுப்பியிருக்கிறார்கள். எல்லோருமே எதிரிக்கு உதவி! இவர்கள் மூவரும் எம்படையின் ஜீவாதாரத் தொடர்புகளை வெட்டி விடுவார்கள் போலிருந்தது. உணவுக்கே கஷ்டம் வந்து விட்டது. முற்றுகையை விட்டு விட்டோம். இங்கே தங்கிக்கொண்டு பயம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் எத்தனை நாள் செல்லும் என்று தெரியவில்லை.''

மோகினி



''உங்கள் உதவிக்கு வந்த பிரெஞ்சுக்காரர்கள் எங்கே?''

''அது ஒரு ஏமாற்றம் குமாரத்தேவா! பிரெஞ்சுத்தலைவன் எதிரிக்கு பலம் சேருவதைப் பார்த்துக் காவேரியைத் தாண்டி மறுகரை போய் விட்டான்!''

''ஏன் பயப்படுகிறான்?''

''அது அவர்களுக்குத்தான் வெளிச்சம்! இதைப்பற்றி தூப்ளேவுக்குக் கடுமையான கடிதம் எழுதியிருக்கிறேன்.''

குமாரத்தேவன் சற்று ஆக்ரோஷத்துடன் எழுந்தார்!

''நவாப் அவர்களே! தளபதிப் பெரியவர்களே! நான் சொல்வதை நீங்கள் எல்லோரும் செவி மடுத்துக் கேட்கவேண்டும். நாட்டில் இப்போது வந்துள்ள அபாயம் ஆர்க்காட்டு சுபாவுக்கு நமது பிரபுதான் நவாபா, அல்லது முகம்மதலிதான் நவாபா என்பது பற்றி அல்ல. இந்த இரண்டு பேர் பூசலில் அத்தனை சிற்றரசர்களும் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் சேர்வது கூட ஆபத்து அல்ல! நம்முடைய தேசத்து விஷயத்தில் வெள்ளைக்காரன் புகுவது தான் ஆபத்து! இதை நாம் உணர்ந்தால் தான் கதி மோட்சம்! என்னுடைய சொந்தமான எண்ணம்'' என்று உணர்ச்சித் தளதளப்புடன் முடித்தார்.

திருக்கோலம்

''தளபதி சொல்வது முற்றிலும் சரி! பரங்கிகள் துரோகிகள்! விரும்பிய போது விரும்பிய இடங்களில் சேருகிறார்கள். தங்களுக்கு ஆதாயத்தைத் தேடிக் கொள்கிறார்கள். இப்படியே விட்டு வைத்தால் நம்மையே விழுங்கி விடுவார்கள் ஹுஸூர்!''

என்று கூறினார் ஆலம்கான்! சந்தாசாகிப் பின் தளகர்த்தர் அவர்.

நவாப் கை அமர்த்தினார். ''நான் தான் சொல்லிவிட்டேனே! நம் ஆர்க்காடு சுபாவுக்குள் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, நத்தம், மதுரை ஆகிய எல்லாச் சீமைகளும் வந்து விட்டால் நிச்சயம் இந்தப் பரங்கியரை ஒரு ஆட்டு ஆட்டுவேன்!'' என்றார் அவர்.

''அது சீக்கிரம் நடக்க வேண்டும்!'' என்றார் ஒரு அமுல்தார்.

''அதற்குத்தான் இந்தத் திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க நினைக்கிறோம். இது விழுந்தால் மற்ற பொடி ராஜ்யங்கள் அத்தனையும் விழ்ந்து விடும்!'' என்றார் சந்தாசாகிப்.

''சரி! இப்போது நடப்பதைக் கவனிப்போம்!'' என்றார் சேஷராவ்.

''குமாரதேவரே! இப்போதைக்கு உடனே ஒரே ஒரு உதவி செய்யுங்கள்!'' என்றார் சந்தாசாகிப்!

''என்ன செய்ய வேண்டும்?'' என்றார் மாரதேவர்.



''எம் படையில் உள்ள சிப்பாய்கள் ஓடமுற்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்டகாலம் சம்பளம் கொடுக்கவில்லை. அவர்களை உற்சாகப்படுத்த முடியுமா? நீங்கள்தான் அதற்குத் தகுதியானவர்!'' என்றார் நவாப்.

''அவர்கள் ஒத்துழைத்தால் முற்றுகையைத் தொடரலாமா?'' என்றார் குமாரதேவன்.

''நிச்சயமாக'' என்றார் சந்தாசாகிப.

நிலவணிகர் விட்டோபா உற்சாக வார்த்தைகள் சொல்லி வழியனுப்ப, வர்மனது கோஷ்டி திருச்சிராப்பள்ளியைத் தவிர்த்து, மேற்கே நாலைந்து காதத்தில் காவிரியைக் கடந்து, அங்கங்கே வழியை விசாரித்துக் காஞ்சிபுரத்தைக் குறியாக வைத்துப் போய்க் கொண்டிருந்தது.

மராட்டியர்களில் ஒரு வீரன் மட்டும் சாதாரண உடையில் குதிரை மீது வெகுதூரம் முன்னால் போனான். ஆபத்து ஏற்பட்டால் உடனே அவன் பின்னால் வரும் கோஷ்டிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்பாடு.

இரண்டு பல்லக்குகளும், ஒரு உபரிப் பல்லக்கும், சாதாரண உடை அணிந்த மூன்று குதிரை வீரர்களும், ஒரு உபரிக் குதிரையும், ஊழியர்களும் சேர்ந்த கோஷ்டி அது.

அங்கங்கு சாலையை விட்டுத் தொலைவில் தங்கி உணவு சமைத்து உண்டுவிட்டு, இளைப்பாறிப் பிறகு மீண்டும் பயணத்தில் புறப்பட்டார்கள்.

ஒவ்வொரு இடத்தில் தங்கும் போதும், ஒவ்வொரு சாலையில் போகும் போதும் புதுப் புது விஷயங்களைக் கற்றுக் கொண்டான் வர்மன்.

அவன் செய்யும் காரியம் சரியானதா என்று அவ்வப்போது மனம் நினைப்பது உண்டு.

தந்தையின் விடுதலை தேடித்தானே இந்தக் காரியம் செய்கிறோம். இதில் தப்பில்லை என்று அவன் மனம் சமாதானம் சொல்லிக் கொள்ளும்.

இருந்தாலும் அவன் உள் மனசில் மற்றொரு காரணமும் மறைமுகமாகச் சிலிர்த்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும்.

அந்த இளம்பெண் சிந்துதான் அந்தக் காரணம்.

அவள் மீது எப்படி இவ்வளவு பற்று ஏற்பட்டது என்று தெரியவில்லை.

அவளது ஒரு பார்வை மட்டும் ஏழு உலகத்தைக் கலைப்பதாய் இருந்தது.

என்ன தீட்சண்யம் அதில்! தீட்டிய கத்தி போல் திரும்பினால் கூட மின்னுகிறது.

குறுக்கில் வீசினால் காற்று துண்டாகிறது.

நேராக விறைத்தால் அத்தனை கடினங்களும் தூளா ஆகிறது.

தேவதாசி என்றான்.

மனத்தை அவள் வசம் செல்லாமல் இழுத்து வைத்தும் மசிய மாட்டேன் என்கிறது.

அதுவும் இந்த இரண்டு நாள் பயணத்தில் எத்தனை முறை ஆவலோடு அவள்



பல்லக்கைப் பார்த்திருக்கிறான். அதன் திரை விலகுமா என்று எத்தனை தவம்.

ஆனால்...

திரை திறக்கவே இல்லை.

அது மட்டுமல்ல. தண்டு இறங்கினால் கூட அவள் அவனை எந்தக் காரணத்திற்கும் திரும்பிப் பார்த்ததில்லை. எது தேவையானாலும் தாதிப் பெண்ணிடம் தான் சொன்னாள்.

தன்னை அதிகம் வெளியில் காட்டிக்கொண்டதும் இல்லை.

நடந்தால் கூட சீக்கிரம் மறைந்து விடுவாள். ஒரு துளி கூட மேலே நிமிர்வதில்லை.

இந்தச் சூழ்நிலைகளில் அடிக்கடி அவன் பெருமூச்சுதான் விட வேண்டி வந்தது.

ஏற்கெனவே பார்த்த மூன்றே மூன்று பார்வைகளை மட்டும் வைத்து மனத்தில் பரவசக் கூடுகளைக் கட்டவேண்டி வந்தது.

மூன்றும் நாள் தான் அந்தக் குக்கிராமத்தைத் தாண்டியதும், மாலை ஒளி மேய்ந்த ஒரு பெரும் தடாகமும் அருகில் பச்சென்று இளமை வீசிக் கொண்டிருக்க தோப்புகளும் அவர்களைக் கவர்ந்தன.

இரவு அங்கே தண்டு இறங்கலாம் என்று நினைத்துச் சோலைக்குள் போன போது, கிளை ஒன்று தட்டியதில் சிந்துவின் பல்லக்குக் குப்புறச் சாய்ந்தது.

'ஐயோ' என்று பலபேர் கூக்குரல் எழுப்ப, வர்மன் விருட்டென்று குதிரையைத் திருப்பி வந்தபோது,

அந்தப் பெண், பல்லக்குத் தனுகவின் பக்கலிலிருந்து புடவையைக் கழற்றிப் புழுதியைத் தட்டி மெல்ல நிமிர்ந்திருந்தாள்.

கண்கள் அவனைக் கணமே நோக்கின.

முகத்தில் ஒரு இறுக்கம் தோன்ற, பார்வையை உடனே கீழிறக்கினாள்.

''அடிபட்டதா?'' என்று ஆதுரத்துடன் கேட்டான் அவன்.

''ஊஹூம்'' என்றாள் அவள்.

பிறகு தன் தலைப்புகளை இழுத்து வாரி, அந்த இடத்திலிருந்து அகன்று விட்டாள்.

பல்லக்குத் தூக்கிகளைத் திட்டிவிட்டு, வர்மன் தனியாக ஒரு மாமரத்தின் அடியில் போய் மனம் வெதும்பி அமர்ந்து கொண்டான்.

மனத்தில் எங்கேயோ ஊமை வலியாய் வலித்தது.

அவள் நடந்த விதத்தில் அவன் கற்பனை எல்லாம் சற்று அதிர்ச்சியுடன் குலுங்கி இருந்தது.

இரவு சமையல் செய்து அவனுக்கு வட்டில் வந்தாலும் அவன் உண்ணவில்லை.

சற்று ஒதுக்கத்தில் படுத்திருந்த போது மனம் நொந்து புண்ணாகியிருப்பது தெரிந்தது.

ஏன் அவளைச் சந்தித்தோம், ஏன் பற்று தலை வளர்த்தோம் என்று தோன்றியது அவனுக்கு.

அநேகமாக எல்லோரும் சயனித்து விட்ட நேரம். மெல்லிய இரவுக் காற்று மாந்தளிர் வாடையுடன் வீசியது.

தடாகத்தின் ஓரத்து அலைவரிசைகள் பாதி நிலாவில் வெள்ளிச் செதில்கள் போல் மின்னின.

ஏதோ சப்தம் கேட்கத் திடுமென்று எழுந்தான் அவன்.

தாதிப் பெண் அவனை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தாள்.

அருகில் வந்ததும், ''ஐயா வாருங்கள்! ஆபத்து!'' என்றாள்.

துரிதமாய்ப் போன போது, சிந்து தங்கிய கூடாரத்துக்கு வெளிப்புறம் குழப்பம் நடந்து முடிந்திருப்பது தெரிந்தது.

தூசி கிளம்பிய நெடி எங்கும் வீசியது.

''என்ன?'' என்று வினவி, அருகில் போனதும் அந்தப் பெண் சிந்து கலைந்து போய் அமர்ந்திருப்பது தெரிந்தது.

சற்று எட்டத்தில் ஒரு உடல் சலனமில்லாமல் கிடந்தது.

''இதென்ன?'' என்று வினவினான் அவன் பரபரப்போடு.

சிந்து மேலே நிமிர்ந்தாள்.

''ஐயா! நாம் போவது எங்கே தெரியுமா? இங்கே ஒரு சதித் திட்டம் உருவாகி இருக்கிறது'' என்றாள் ஆத்திரத்துடன்.

அவள் கைகளில் ரத்தம் மெழுகி இருக்க, கீழே ஒரு கத்தி ரத்தத்தில் குளித்து விழுந்து கிடந்தது.

''நான் பழி வாங்க வேண்டும், பழி வாங்க வேண்டும்'' என்று உன்மத்தமாகக் கூறினாள் அவள்.

வர்மன் திகைத்து நின்றான்.

(தொடரும்)









நீங்கள் கேட்டவை

தராசு

○ இந்த இதழில்

○ ஒப்பிடுக

○ மதிப்பு குறைந்தது?

○ வண்ணை கணேசன், சென்னை—11.
? சின்ன வீடு என்று ஏன் அதற்குப் பெயர் வந்தது?
! சின்னவள் (வயதில்) வீடுதான் சின்ன வீடாகி யிருக்க வேண்டும். உண்மையில் சின்ன வீடு அளவிலும் முக்கியத்துவத்திலும் பெரிய்ய வீடாக இருக்கலாம்!

○ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.
? தூய்மையான அழகு எது?
! எத்தனையோ இருக்கிறது என்றாலும் மழலையின் சிரிப்புக்கு அப்புறம்தான் மற்றதெல்லாம்.

○ எஸ். சம்பத்குமார், சென்னை—5.
? தனி மனிதனால் சமுதாயத்தை மாற்ற முடியுமா?
! ஏன் முடியாது? ஒவ்வொரு தனிமனிதனும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்தால் சமுதாயம் சொர்க்க பூமியாகிவிடுமே? சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தி மகத்தான மாறுதல்களை உருவாக்கிய தனிமனிதர்களின் பட்டியலும் மிக நீளமான ஒன்று.

○ ஆர். பூபாலன், கிருஷ்ணகிரி.
? ஒரே ஒரு நடனக்காட்சியில் வந்து போகும் கவர்ச்சி நடிகையின் படம் விதம் விதமான போஸ்களில் போஸ்டர்களில் அச்சாகி இருப்பதைப் பார்க்கும் போது அந்தப் படத்தில் கதாநாயகியாகக் கஷ்டப்பட்டு நடித்த நடிகையின் மனம் என்ன நினைக்கும்?
! நல்லவேளை நாம் இப்படிச் சந்தி சிரிக்கவில்லை.

○ எம். ராமச்சந்திரன், சோழவந்தான்.
? நதிகளில் நீராடினால் செய்த பாவம் நீங்கி விடுமா?
! நதியின் நீர் உடலையும் அதன் புனிதம் உள்ளத்தையும் தூய்மைப்படுத்த அனுமதித்தோமானால் நிச்சயம் பாபம் நீங்கும்.

○ அ. சிவா ராவணன், விருத்தாசலம்.
? அமைச்சர்கள், எம். எல். ஏக்கள், வி. ஐ. பிக்கள் இவர்களில் யாருமே நமது முதலமைச்சருக்குச் சிறுநீரகம் வழங்க முன்வராதது எதைக் காட்டுகிறது?
! யாருடைய சிறுநீரகம் வேண்டுமானாலும் முதல்வருக்குப் பொருந்திவிடாது; அவர் உடல் இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும் என்பதைஇவர்கள் உணர்ந்தறிந்திருக்கிறார்கள் என்பதை.

○ ஏ. அப்துல் முனீர், ஒசூர்.
? ஓர் அரசியல்வாதி பற்றி உண்மையான விமர்சனம் எப்போது வரும்?

சின்ன வீடு

! அவர் இறந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு விருப்பு வெறுப்பற்ற, சத்தியத்தில் பற்றுள்ள, ஆராய்ச்சித் திறனுள்ள சிறந்த எழுத்தாளன் அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதும்போது.

○ கொடுமுடி கணேசன், சேலம்.
? தேர்தலில் எதைக் கட்டாயம் எதிர்பார்க்கலாம்?
! வாரிவிடப்படும் வாக்குறுதிகள், அதிகார துஷ்பிரயோகம், தண்ணீராகச் செலவாகும் கறுப்புப் பணம் ஆகியவற்றை. தேர்தல் முடிந்த கையோடு கள்ள வோட்டுக் குற்றச்சாட்டுக்களை.

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்.
? சாத்தான் ஓதிய வேதம் என்று எதைக் குறிப்பிடுவீர்?
! ''அனுதாப வோட்டுக்களால் மட்டும் வெற்றிபெற முடியாது'' — இ. காங்கிரஸ்.

○ அ. ராஜா ரஹ்மான், உத்தமபாளையம். ✱
? ஜெயலலிதா மதிப்பு குறைந்துவிட்டது உண்மை தானே?
! எம். ஜி. ஆர். நீங்கலான அ. இ. மு. க. தலைவர்கள் அப்படி எண்ணலாம்; ஆனால் ராஜீவ் காந்தி அவ்வாறு கருதவில்லை என்பது பக்கத்திலிருந்து 'கமெண்ட்' டைக் கேட்டவர் தரும் தகவல்.

○ நாகை. பொன்னி, நாகப்பட்டினம்.
? பொம்மை, கிலுகிலுப்பை, பலூன் - அழுகின்ற குழந்தை இதில் எதை விரும்பும்?
! அப்பாவின் காதோ மூக்கோ, தலைமுடியோ கைக்கெட்டும் தூரத்தில் இருந்தால் இவற்றில் எதையுமே சீண்டாது. அழும்

குழந்தைக்குப் பெற்றோரின் அன்புதான் முக்கியம்; பொம்மைகள் அல்ல.

○ உ. அசோக்பாபு, மணப்பாறை.
? வெறுக்கப்பட வேண்டியவர்களாக நீங்கள் கருதுவது...?
! மனச்சாட்சி இல்லாதவர்களை.

○ ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.
? பெங்களூர் என்றதுமே தங்களுக்கு நினைவு வருவது?
! சென்னையின் அவல நிலை.

○ எஸ். அன்புமணி, ஈரோடு-9.
? சமீபத்தில் நீங்கள் படித்த ஒரு நல்ல புத்தகத்தைப் பற்றி இரண்டு வரிகள் சொல்லுங்களேன்?
! 1. சுஜாதா எழுதிய ரயில் புன்னகை. 2. சிறுகதைத் தொகுப்புக்குச் சிகரமாக அவர் முன்னுரை.

○ மு. மதிவாணன், அரூர்.
? சிறந்த கேள்விக்குப் பரிசாகப் பயனுள்ள புத்தகங்களை அளிக்கலாமே?
! பரிசுத் தொகையில் பிடித்தமான நூலை வாங்கிக்கொள்ளலாமே!

தால் மனிதன் உள்ள தட்டுத் தாழும். என்றாலும் ஒரு ஆண்டுக்குப் பின்னால் எழுதப்படப்போகும் தொடர்கதைக்கு இப்போதே அறிவிப்புச் செய்கிற அளவுக்கு இருவருமே கனமானவர்கள் அல்ல.

○ ஸ்ரீ. ராஜசேகரன், வலங்கைமான்.
? மீண்டும் ஒரு பெண் பிரதமராக வர வாய்ப்புண்டா?
! டீ. வியில் அடிக்கடி பிரியங்கா காண்பிக்கப்படுவதைப் பார்க்கும்போது அப்படித்தான் தோன்றுகிறது!

○ கே. ரமேஷ், சென்னை-4.
? ஜக்மோகன், ஜூஸ்மோகன் — ஒப்பிடுக.
! இருவரையும் இயக்க டைரக்டர் தேவை.

○ பாரதிராஜன், கும்பகோணம்.
? உப்பைத் தின்றவனே உயிரைப் பறித்துவிட்டான் என்று சொல்லும்போது வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா?
! இதிலென்ன கஞ்சத்தனம். இரண்டையும் தாராளமாகப் பட்டுவிட்டுப் போவோமே.

○ ஆர். சிவராஜ், லால்குடி.
? கள்ளச் சாராயத்துக்கும் நல்ல சாராயத்துக்கும் வித்தியாசம் என்ன?
! 1. விலை குறைவு — அன்று கொல்லும் ஆபத்து. 2. விலை அதிகம் — நின்று கொல்லும் ஆபத்து.

என்று ஏன் பெயர் வந்தது?

○ சியாமளா ஹரிஹரன், கோவை.
? சந்திரசேகர் கட்சி இ. காங்கிரஸுடன் இணைவது பற்றி?
! ஏதோ அந்தமட்டில் ஒரு கட்சி குறைந்தது; அந்த அளவுக்குக் குழப்பம் குறைந்தது.

○ எஸ். ரவீந்திரன், கடலூர்.
? உங்களை யார் பாராட்டுவதைப் பெருமையாகக் கருதுகிறீர்?
! கல்கி வாசகர்கள்தான், வேறு யார்.

○ பி. டி. வி. பெரியகுளம்.
? பொதுநல சேவை, அரசியல் பற்றற்ற சங்கங்கள் மூலம் செய்வது நல்லதா அரசியல் கட்சிகளில் சேர்ந்து செய்வது நல்லதா?
! மெய்யான சேவை உண்மையாக அது தேவைப்படும் மக்களை நிஜமாகவே சென்றடையுமெனில் எதன்மூலம் செய்தால் என்ன?

○ ஆரூர் பாஸ்கரன், திருவாரூர்.
? கவியரங்குக்குச் சென்று ஏன் வந்தோம் என்று நினைத்த அனுபவம் உண்டா?
! உண்டு, உண்டு, நிறையவே உண்டு. ஓசை நயமும், சொல் சுவையும் பெருக்கெடுத்தாலும் கற்பனை வளமும் கருத்தாழமும் மிகக் குறைவாக இருப்பதே காரணம்.

○ ஜெயவசந்தன், கோவை-45.
? சிவசங்கரியும், இந்துமதியும் உமது தராசில் ஓர் நிறையா?
! அது தட்டுக்களில் வைக்கப்படும் புத்தகங்களைப் பொறுத்தது. ஒரு தட்டில் க. கொ.வையும் இன்னொரு தட்டில் த. இ. வி. யையும் வைத்தால் விமானத் தட்டு தாழும்; ஒரு தட்டில் நி.தெ.வையும் மறு தட்டில் ஒரு மனிதனின் கதையையும் வைத்

○ த. ந. சொர்ணம், மொளசி.
? அன்னை இந்திராவுக்குப் பிடித்தமான தாகூர் கவிதையின் தமிழாக்கத்தை வெளியிடுவீர்களா?
! இந்த இதழிலேயே உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார் நம் அபிமான கவிஞர் வைரமுத்து.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
அ. ராஜா ரஹ்மான்,
7, கருப்பட்டி சந்து,
உத்தமபாளையம்-626 533.

○ ...ஸடையா?.

○ ஒரே...







வெள்ளித்திரை

ஹிந்திப் படங்கள் எப்படித்தான் இருக்கின்றன என்று அறிந்துகொள்ள பார்த்த முதல் படம்:

ராஜ்திலக்

சுனில்தத், ராஜ்குமார், தர்மேந்திரா, ஹேமமாலினி, ரீனாராய் கமலஹாஸன் ராஜ்கிரண் ரஞ்ஜீதா, ஸரிகா, யோகிதா, ஜமுனா அஜீத், ப்ரான் என்று பெயர் காட்டவே மூன்று மணி நேரம் ஆயிற்றே என்னவோ நல்லவேளை படம் ஆரம்பித்த பின்னுல் போனது அந்த வகையில் நல்லதுதான்.

கதை: ராஜாவின் வாரிசை மந்திரி வில்லன் கடத்திப் பார்த்து முடியாமல், குழந்தை தப்பித்து. எங்கேயோவித்தைக் காரனிடம் வளர, இங்கே வில்லனின் மகன் ராஜாவின் வாரிசாக அறிமுகப்படுத்தப்பட்டு வளர்ந்து. வாரிசுச் சண்டை வந்து கடைசியில் நிஜ வாரிசு பட்டம் கட்டிக்கொள்ளும் உத்தமபுத்திரன் காலத்துக் கதையில்—சண்டைகள், சம்பாஷணைகள், காவல் களவு ஆட்டம் பாட்டம் தாய்ப்பாசம் தந்தை பாசம், மகன் பாசம், மனைவி பாசம் — இன்னும் என்னென்ன முடியுமோ அத்தனையும்.

கமலஹாஸனை டான்ஸ் ஆட மட்டும்—ஸாரி, ஆடிக்கொண்டே சண்டை போடவும் உபயோகப்படுத்தி யிருக்கிறார்கள். இவர் தான் நிஜ வாரிசு. படத்தில்(!) ஸரிகா இவரைக் காதலிக்க, இவர் ரீனா ராயைக் காதலிக்க—கூத்துத்தான்.

தர்மேந்திராவும் ஹேமமாலினியும் ஒட்டாமல் வந்து ஓரிரு ஸீன்களில் காதலிக்கிறார்கள். தர்மேந்திரா காலில் ரத்தம் சொட்டச் சொட்ட வாள் முனையில் நடக்கிறார். மைதானம் பிளந்து நெருப்புக் கொழுந்துகள் மேல் எழும்ப, ஜமுனா அந்தரத்தில் ஊசலாடுகிறார்.

க்ளைமாக்ஸ்—ஃபீல்டில் உள்ள அத்தனை ஸ்டார்களும் களத்தில் குதித்திருப்பதால் யாருமே எடுபடவில்லை. தேசாபிமானி ராஜ்குமார் மட்டும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வீரிய வசனங்களால் பிழைத்திருக்கிறார்.

தமிழ்ப் பட உலகின் ஸூப்பர் ஸ்டார்களில் ஒருவரான கமல் ஹிந்திப் பட உலகின் பத்தோடு பதினொன்று என்ற நிலைமைக்குப் போயிருக்க வேண்டாம். — ஹூம்.

யாரை ஏமாற்ற இத்தனை ஸூபர் ஸ்டார்கள்? டாம்பீகங்கள்?படாடோபங்கள்?

போன நூற்றுண்டிலேயே வந்திருந்தால் கூட ரசித்திருக்க முடியாது.

ஹிந்தி சினிமா ஜிந்தாபாத்

சரி, அடுத்த படம்?

ஆஜ் கீ ஆவாஸ்

சென்ஸார் சர்ட்டிபிகேட்டில் Re-Revised என்று போட்டிருந்தது. ரொம்ப காரமான படமாயிருக்கும் என்று நினைத்துவிட்டோம்.

அப்படி இப்படி கதை ஆரம்பிக்கிறது. ஒரு சாதுவான, யார் வம்புக்கும் போகாத, சாராயம் இத்யாதிகளை வேரோடு வெறுக்கிற லெக்சரர் ஒருவர். சமூக அவலங்கள் அவரைச் சுடுகின்றன. ஒரு பார்ட்டியில்கூட பாரதத்தை நினைத்தே பாடுகிறார். அவருக்குப் பாசமான அம்மா, அழகான தங்கை.

''அட நிறுத்துய்யா கதையை, மீதியை நாங்க சொல்றோம்'' என்று மகாஜனம் கோஷம் போடுகிறீர்கள். சரி, நீங்களே சொல்லுங்கள்.

''தங்கையோடு பாசத்தைப் பிழிந்து ஒரு பாட்டு உண்டா?''

''உண்டு.''

''அவனுக்கு வெகு விமரிசையாகக் கல்யாணம் கூட மானசீகமாக நடத்திப் பார்ப்பானே அண்ணன்.''

''அட ஆமாம்.''

''அப்புறம் நேர்மை, நியாயம் என்று பேசப்போய் அந்த வாத்தியாருக்கு எதிரிகள் வந்து சேர்வார்கள. அந்தக் கயவர்கள் வீட்டுக்குள் புகுந்து அண்ணன் கண் எதிரிலேயே தங்கையைக் கற்பழிப்பார்கள். சரியா?''

''வெகு சரி.''

''அந்த அண்ணன் சட்டத்தை நாடிக தோற்றுப்போவான். ம்''

''அது ஆரம்பத்திலேயே. இந்த முறை சட்டத்தை நாடுவதில் அர்த்தமில்லை என்று அவனுக்குத் தெரியும்.''

''கையில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு ஒவ்வொருத்தர் குடலையும் உருவக் கிளம்பி விடுவான். அதுதானே?''

''அங்கேதான் தப்பு. கத்தி இல்லை. துப்பாக்கி.''

''ச்சி, இப்பொழுதுதானே திரௌபதியில் கத்தியைப் பார்த்தோம். அதையே டைப்படி மறுபடியும் சாப்பிடுக்க முடியும். சரி, துப்பாக்கி? கயவர்களை மட்டும் சரியாய்க் குறிபார்த்துச் சுடுவாராக்கும்?''

''விடுங்கள் சாமி. இதற்கு மேல் உங்களுக்குத் தெரியாது என்று சொன்னால் நீங்களே ஒரு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு நேரே கல்கி ஆபீஸுக்கு வந்து விடுவீர்கள். கடைசி கோர்ட் காட்சியைப் பற்றி மட்டும் சொல்லவா?''

''சரி, சொல்லித் தொலையுங்கள்.''

''நாயகனின் (ராஜ் பப்பர்) வருங்கால மனைவி (ஸ்மிதா பாடீல்)தான் லாயர். கோர்ட்டில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாய் நடந்து நடந்து வாதம் புரிகிறார். மறக்காமல் கண்ணீரைக் கொட்டி அழுது கொண்டே தன் கட்சிக்காரருக்கு நியாயம் கேட்கிறார். குற்றவாளிகளைப் பாதிக்கப்பட்டவனே தண்டிக்கலாம் என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டே ஜட்ஜ் தீர்ப்பு வாசிக்கிறார். கோர்ட் கலைகிறது. டுயட் தொடர்கிறது....''

''அது தொடர்ந்துட்டுப் போகட்டும். நீராவது பேனாவை மூடிவையும்.''

—ஜெயமன்மதன்



கவர்ச்சிமிகு பரிசுகளை வெல்க!



முதல் பரிசு

யெஸ்தி மோட்டார் சைக்கிள் அல்லது ரூ. 14,000/- ரொக்கம்

இரண்டாம் பரிசு

கலர் டி.வி. அல்லது ரூ. 9,500/- ரொக்கம்

மூன்றாம் பரிசு

- 3 வேக கிரைண்டர்/டேப் ரிகார்டர் ரூ. 500/- சலுகை விலையில்
- 2 வேக மிக்ஸி/கிரைண்டர் ரூ. 325/- சலுகை விலையில் அல்லது ரூ. 900/- சலுகை விலையில் டூ-இன்-ஒன்.
- 2 பேண்ட் டிரான்சிஸ்டர் ரூ. 225/- சலுகை விலையில்.

கீழ்க்காணும் 3 வரிகரில் 12 முதல் 20 வரையிலான இலக்கங்கள் ஒவ்வொரு வரியின் கூட்டுத்தொகை (செங்குத்தாக, நேராக, குறுக்கு வசமாக) 48 வருமாறு எழுதப்பட்டுள்ளன.

பதின்மூன்று	பதினெட்டு	பதினேழு
இருபது	பதினாறு	பன்னிரண்டு
பதினைந்து	பதினான்கு	பத்தொன்பது


நீங்கள் செய்ய வேண்டியது

3 வரிகளில் 13 முதல் 21 வரையிலான இலக்கங்களை (ஒவ்வொரு இலக்கமும் ஒருமுறை தான் வரவேண்டும்) எல்லா வரிகளிலும் கூட்டுத் தொகை 51 வருமாறு எழுதுக.

உங்கள் நுழைவுகளை 15 நாட்களுக்குள் வெற்றுத் தாளில் எழுதி அனுப்புக. வெற்றிபெற்றவர்களுக்கு தபால் மூலம் அறிவிக்கப்படும். நடுவர் தீர்ப்பே இறுதியானது. தில்லி விசாரணை வரம்புக்கு உட்பட்டது

TELESTAR AGENCIES (Tm)

Post Box No. 9421, DELHI-51



விரத விதிமுறைகள்

1. சபரிமலைக்குச் செல்ல விரும்பும் அன்பர்கள் கார்த்திகைத் திங்கள் 1–ந் தேதியிலிருந்து 18–ந் தேதி அல்லது 19–ந்தேதிக்குள் நல்ல நாளாகப் பார்த்து, குருசாமி மூலமோ, தாயின் மூலமோ, ஸ்நானம் முடித்து, ஆண்டவனைத் தியானித்து மாலை அணிய வேண்டும்.

2. மாலையணிந்த தினத்திலிருந்து பிரம்மசரிய விரதத்தைக் கடைப் பிடித்து, ஒருவேளை சாப்பாட்டை நீக்கி, இரண்டு வேளைகளிலும் நீராடி, பூஜை செய்து எந்நேரமும் ஐயப்பன் ஸ்மரணையாக இருந்திடல் வேண்டும்.

3. மாலையணிந்தபின் மாமிசம் சாப்பிடுதல், போதை தரும் மது பானங்கள் அருந்துதல், மனத்தில் கோபதாபம், குரோதம், விரோதம் பாராட்டுதல் ஆகியன கூடவே கூடாது.

4. பெண்களை காம இச்சையுடன் நோக்குதல், நினைத்தல், விரும்பு தல், பேசுதல் ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும்.

5. மாலையணிந்தவர்கள் வெப்பு, நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை போன்ற ஏதாவதொரு வண்ணத்தில் வஸ்திரம் அணிய வேண்டும்.

6. விரதம் அனுஷ்டிக்கும் தினத்திலிருந்து, விரதத்தை முடிக்கும் வரையில் முகக்ஷவரம் செய்து கொள்ளுதல் கூடாது.

7. ஐயப்ப பக்தர் அனைவரையும் ஐயப்பனாகவும், பெண்களை மாளிகைப்புறத்து அம்பிகையாகவும் எண்ண வேண்டும்.

8. காலணிகள், குடை முதலியபொருள்களைப் பயன்படுத்துவதனைத் தவிர்க்கவேண்டும்.

9. பக்தர்கள் துண்டைத் தரையில் விரித்து அதில் படுத்துறங்க வேண்டும்.

10. ஜாதி மத, பேதம், உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன் என்ற பேதங்கள் அறவே நீக்கி, அனைவரையும் சமமாகப் பாவித் திருத்தல் வேண்டும்.

11. மார்கழி மாதம் 22, 23 தேதிகளில் ஐயப்பனை வழிபட்டு, தான தருமங்கள் செய்து இருமுடி கட்டி, தூப, தீபாராதனைகள்

சபரிமலை செல்வோருக்கு...



செய்து வீட்டின் வாசற்படியில் சிதறுகாய் அடித்து பயணத்தினைத் துவங்கிடல் வேண்டும்.

12. வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்று, பிள்ளையார் கோயிலில் வழிபாடு நடத்தி, அங்கு சிதறுகாய்த் உடைத்துப் பயணத்தை தொடர வேண்டும்.

13. சபரிமலைக்குப் பயணப்படுகையில், யாரிடமும் போய் விட்டு வருகிறேன் எனக் கூறுதல் கூடாது.

14. குருசாமி இடத்திலோ, ஆலயத் திலோ இருமுடிக் கட்டு பூஜையை நடத்த லாம்.

15. பம்பா நதி தீரத்தில் நீராடும் பொழுது, மறைந்த தமது முன்னோர்களை நினைந்து, அவர்களுக்கு சடங்குகளைச் செய்து நீராட வேண்டும்.

16. எரிமேலியிலிருந்து, புறப்பட்டுப் போகும் வழியில் உள்ள அழுதா நதியில் நீராடி, அங்கு ஒரு கல் எடுத்து அதைப் பத்திரமாக எடுத்துப் போய் அடுத்துள்ள கல்லிடுங்குன்று என்னுமிடத்தில் அந்தக் கல்லினைப் போட்டுவிட்டுப் போகவேண்டும்.

17. சபரிமலை சென்று ஐயப்பனைக்கண்டு வீடு திரும்பியதும், ஐயப்பனுடைய பிரசாத கட்டினைத் தலையினில் தாங்கியபடியே வீட்டு வாயில் படியில் சிதறுகாய் அடித்து வீட்டி னுள் நுழைய வேண்டும்.

18. பின்னர் குருநாதர் மூலம் மாலையைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு மாலையை அணிவித்து விரதத்தினைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

19. தை மாதம் 7-ந் தேதிக்குப் பின்னர், நல்ல நாளாகப் பார்த்து, முகக்ஷவரம் செய்து கொள்ளல் வேண்டும்.

சாஸ்தாவின் சன்னிதானத்தில்

சாஸ்தாவின் சன்னிதானத்திற்கு முதன் முதலாகப் போகும் ஐயப்பன்மார்கள், தலை யில் இருமுடியைத் தாங்கிய வண்ணம் ஏறி முதற்படியில் சிதறுகாய் உடைத்து, கோயி லின் முன்புறமாக இருக்கும் பதினெட்டுப் படி வழியாக ஏறி சாஸ்தாவைத் தரிசிக்கப் போக வேண்டும்.

அங்கு நெய்த் தேங்காயை உடைத்து, அந்த நெய்யில் அபிஷேகம் செய்து, கோயிலை வலம் வந்து சன்னிதானத்திற்கு முன் இருக்கும் ஹோமகுண்டத்தில் மேற்படி தேங் காயைப் போட்டு நமஸ்காரம் செய்ய வேண்டும்.

பின், அருகிலுள்ள மஞ்சமாதாவை நமஸ்காரம் செய்து விட்டு வரவேண்டும்.

அம்மாதிரியே, ஊர் திரும்பும் பொழுது, மேற்படியில், முதற்படியில் சிதறுகாய் உடைத்து அந்தப் படி வழியாகவே இறங்கி வந்து ஊர் திரும்ப வேண்டும்.

மற்ற வேளைகளில் கோயிலின் இருபுறங் களிலும் உள்ள படிகள் மூலமாக சாஸ் தாவைத் தரிசித்துத் திரும்பலாம்.

கன்னி ஐயப்பன்

முதன் முதலாக மாலை அணிந்து, சபரிமலைக்குச் செல்லும் அன்பர்கள் கன்னி ஐயப்பமார்கள் என அழைக்கப்படுவர்.

முதல் ஆண்டு மாலை அணிபவர்கள், கருப்பு நிறமுள்ள வஸ்திரத்தை அணிய வேண்டும்.

கன்னி ஐயப்பமார்கள் மற்ற சாமி களோடு சேர்ந்து கொண்டு பஜனை செய்து கன்னிப் பூஜையினைச் செய்திடல் வேண்டும்.

கன்னி ஐயப்பமார்கள், தங்களுடைய வசதிக்குத் தக்கவாறு, தமது இல்லங்களில் பஜனை நடத்தியும், பூஜை செய்தும், ஐயப்ப மார்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்வித்தல் மிக்க பயனைத் தரும்.

இருமுடி

இருமுடி என்பது தலையணை போன்ற அமைப்பைக் கொண்ட ஒரு பை. இது 1 அடி அகலம், 3 அடி நீளம் உள்ளது. இந்தப் பையின் பக்கவாட்டில் ஒரு சாண் அளவு திறப்பு ஒன்று இருக்கும்.

இதன் ஒரு பக்கத்தில் பூஜை செய்யத் தேவையான தேங்காய், சூடம், சாம் பிராணி, பசுநெய், வெற்றிலை, பழம், பாக்கு, ஊதுபத்தி, நெல்பொறி, சால்படி பச்சரிசி, வெல்லம், கற்கு, மிளகு, குங்குமம், மஞ்சள் தூள் ஆகிய பொருள்கள் வைக்கப்படும்.

இதன் மறுபக்கத்தில் ஆகாரத்திற்குத் தேவையான அரிசி, பருப்பு, புளி போன்ற சமையல் செய்யத் தேவையான பொருள்கள்.

அசந்தர்ப்பம் நேர்ந்தால்...

சபரிமலைக்கு மாலையணிந்து செல்பவர்கள் பிரேத கர்மங்களில் பங்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. வீட்டுக்கு விலக்கானவர்களைக் காண்பதோ, அவர்கள் உண்ட உணவை உண்பதோ கூடவே கூடாது. அப்படி ஏதா வது அசந்தர்ப்பங்கள் நேர்ந்தால் சிறிதளவு பஞ்சகவ்யத்தைக் கரைத்து, அதனைத் தலை யில் தெளித்து, நீராடி, ஆண்டவனைத் தியா னித்து, சுத்தி செய்து கொள்ளல் வேண்டும்.

மாலையைக் கழற்ற நேர்ந்தால்...

சபரிமலைக்கு, மாலையணிந்து செல்லும் ஐயப்பமார்களும், அவர் தம் குடும்பத்தைச் சார்ந்தவரும் மரணம் போன்ற துக்ககர மான காரியங்களில் கலந்து கொள்ளக் கூடாது.

நெருங்கிய உறவினர்கள் இல்லங்களில் இவ்விதம் நேரின், தான் அணிந்துள்ள மாலை யினைக் கழற்றி ஐயப்பன் திருஉருவப் படத் தில் மாட்டிய பிறகு கலந்து கொள்ளலாம்.

மாலையைக் கழற்றி விட்டால், அடுத்த ஆண்டுதான் மாலையணிந்து அவர்கள் செல்ல வேண்டும்.

மகர விளக்கு

தை மாதம் 1-ந் தேதியன்று மாலை சபரி மலைக்கு அருகிலுள்ள உயரமான மலையில் ஒரு தீபஒளி ஒரிரு நிமிடங்கள் காட்சியளிக் கும். அதைக் காண்பதையே மகர விளக்குக் காணல் என்கின்றனர்.


-சாஸ்த்ரஸ்வரூபிணி

சவாஸனம்

"**நா**ற்பது நாற்பத்தைந்து வயதுக் காரர்கள் நிறையப்பேர் இரத்த அழுத்தம், படபடப்பு போன்ற நோய்களுடன் ஆஸனப் பயிற்சிக்கு வருகிறார்கள். இவர்களுக்கு முதலில் நாங்கள் தருவது சவாஸனப் பயிற்சி தான்." என்கிறார் திரு **வி. எஸ். உதயகுமார்**

"பரபரப்பான இன்றைய வாழ்க்கையில் மந்திரி முதல் மாணவர் வரை எல்லாருமே 'டென்ஷன்' மிகுந்து காணப்படுகிறார்கள். வேலைச் சுமை, அதைச் செய்து முடிக்கக் குறைந்த அவகாசம், எல்லாம் சரியாக நடந்து முடியவேண்டுமே என்ற கவலை — இவையெல்லாம் மனக் கிலேசத்தை (Stress) வளர்த்து விடுகிறது. இதன் உடன் விளைவாக ரத்த அழுத்தம், படபடப்பு முதலியன தோன்றுகின்றன. இவற்றிலிருந்து பாதுகாப்பு தருவது சவாஸனம்."

பார்ப்பதற்கு எளிமையான ஆசனம் போல் தோன்றினாலும் நடைமுறையில் மிகவும் சிரமமானது இந்த சவாஸனம். சவம் என்பது இறந்த உடல். இந்த ஆசன நிலையில் உணர்வுகள் மரத்துப்போன மாதிரி கிடக்கப் பழகியாக வேண்டும். சிரசாஸனம், விபரீத கரணி போன்ற ஒவ்வொரு ஆசனப் பயிற்சிக்குப் பிறகும் கண்டிப்பாக சவாஸனம் ஒரு நிமிஷமாவது செய்தாக வேண்டும். தவிர, ஆசனங்கள் எல்லாம் செய்து முடித்த பின் கடைசியாக மூன்று நிமிஷம் முதல் ஐந்து நிமிஷம்வரை சவாஸன நிலையில் இருக்கலாம்.



இயல்பாக சுவாசித்து மனத்தைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். குழப்படியான சிந்தனைகளைத் தவிர்த்து மனத்தை ஒரு நிலைப்படுத்த வேண்டும். நரம்புகள், உறுப்புகள், மார்பு, இதயம், சுவாச உறுப்புகள், மூளை எல்லாவற்றையும் தளர்த்தி ரிலாக்ஸ் செய்துகொள்ளப் பழக வேண்டும். ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை சவாஸனம் பயில முடிந்து விட்டால் அற்புதமான மன அமைதியும், உடலுக்குச் சுகமும் தானே வரும்.

பயிற்சி முறை:

விரிப்பின் மீது முதுகு நன்கு படியும்படி மல்லாந்து படுக்க வேண்டும். கால்கள் இரண்டடி இடைவெளியில் விலகி இருக்க வேண்டும். உடம்பிலிருந்து சில அங்குல தூரம் விலகிக் கைகளை வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளங் கைகள் மேல் நோக்கி இருக்க வேண்டும். தலையின் பின்புறம் தரையில் நன்றாகப் படிய வேண்டும். கண்கள் மூடியவாறு இருக்க வேண்டும். அதாவது உடலுறுப்புக்கள் அனைத்தும் உறங்க, மனம் மட்டும் விழிப்போடு இருக்க வேண்டும். இந்தச் சமயத்தில் உடல் உறுப்புக்களை ஒவ்வொன்றாக அழைத்து மனத்தால் உரையாடலாம். "ஓ! கால்களே, உங்களுக்குப் பூரண ஓய்வு அளிக்கிறேன். நீங்கள் நிட்காத்திரமாக இருப்பீர்களாக. மர்மஸ்தானமே, நீ ஓய்வு கொள்வாயாக; ஆரோக்கியமாக இருப்பதுடன் புலனடக்கத்துடன் நான் விளங்க எனக்கு உதவுவாயாக. ஏ! இருதயமே, வானமே இடிந்தாலும் நீ உணர்ச்சி வசப்பட்டுப் படபடக்காதிருப்பாயாக; உன் கடமையை ஒழுங்காகச் செய்து வருவாயாக" என்றிப்படி ஒழிருந்து மேலாக அன்புடன் பேசிவரலாம். கடைசியாக மூளையிடம் சிரிய, தூய சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுமாறு வேண்டலாம். அப்புறம் நெற்றி மையத்தில் புருவங்களுக்கு மத்தியில் ஓம்காரம் ஜோதி சொரூபமாக இருப்பதாகப் பாவித்து, அதில் உடல், உயிர், சிந்தனை, உணர்வுகள் அனைத்தையும் மையப்படுத்திவிட முயல வேண்டும். இதன் பிறகு சவாஸனத்தின் உச்ச கட்டமாக உடல், உணர்வுகள், சிந்தனை எல்லாமே மரத்துப் போன யோக நிலை கிட்டும். சராசரி மனிதர்கள், யோகிகளுக்கு உரிய இந்த உச்ச நிலையை எய்த முயலக் கூடாது. பொதுவில் நம்போன்றவர்கள் தினசரி சவாஸனம் பயில்வது மனத்தை விழிப்புடன் இருக்கச் செய்வதுடன் நல்லுணர்வுகளுடனும் இருக்கச் செய்யும். மன ஆரோக்கியமானது உடல் ஆரோக்கியத்துக்கு மருந்து. டானிக்குகளை விடச் சிறப்பான முறையில் உதவும்.

கட்டுரை: **சுப்ரபாலன்**

படத்தில்: திரு. **அஜய், கே. மங்கள்**

புகைப்படம்: **தாமு**



நினைத்ததை முடிப்பவர்

நான் விரும்பும் வேட்பாளர்

சென்ற தேர்தலின் போது முதன் முறையாக ஓட்டு உரிமை பெற்றேன். அ. தி. மு. க. கட்சிக்கே வாக்களித்தேன். வில்லிவாக்கம் தொகுதியில் அ. தி. மு. க. வேட்பாளராக **திரு ஜே. வி. டி. பிரபாகரன்** போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அம்பத்தூரில் நாங்கள் இருக்கும் பகுதியில் மக்கள் ஒன்று கூடி எங்கள் பகுதிக்குத் தேவையான வசதிகளைப் பெற ஒரு குழு அமைத்துள்ளோம்.

ஒழுங்கில்லாத சாலையைச் செப்பனிடவும் இருட்டான பகுதிகளில் விளக்கு வசதி கேட்டும் ஒரு முறை திரு. பிரபாகரனை வரவழைத்துப் பேசினோம். கூட்டத்திற்கு வந்தவரிடம் விண்ணப்ப மனுவைக்கொடுத்தோம். கூட்டத்தில் பேசியவர், நாங்கள் கேட்ட வசதிகளை உடனடியாகச் செய்து தருவதாக உறுதி அளித்தார்.

வெகு விரைவிலேயே சாலை வசதியும், தெரு விளக்குகளும் போடப்பட்டு எங்கள் குறைகள் தீர்ந்தன. பெண்களுக்கான உயர் நிலைப்பள்ளி ஒன்று ஓலைக் கூரையுடன் அமைந்திருந்தது. அதையும் மாற்றிக் கட்டடமாகவே கட்டி முடித்து இருக்கிறார்..

மேலும், ஒரு திருமண மண்டபம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது.

எல்லா இடங்களிலும் சாலைகளில் குழாய்கள் போடப்பட்டுள்ளன. பிரதான சாலைகளில் சோடியம் வேப்பர் விளக்குகள் போடப்பட்டுள்ளன. அம்பத்தூர் சைக்கிள் தொழிற்சாலைக்கு எதிரில் வாட்டர் டேங்க் ஒன்று அமைக்கவும் திட்டம் உள்ளது.

பஸ்ஸ்டாண்ட்டில் நடைபாதைக்கடைகள் பெருகி, போக்குவரத்திற்குச் சிரமமாக இருந்து வந்தது. தற்போது பஸ்ஸ்டாண்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுப் போக்குவரத்து இடைஞ்சலின்றி நடக்கிறது.


எங்கள் பகுதி புதிதாக உருவாகியது. பஸ்ஸ்டாண்டுக்கு நடந்து சென்றால் இருபது நிமிடங்கள் ஆகும். பெண்களானால் இருபத்தைந்து நிமிடங்கள் ஆகும். வேலைக்குச் செல்பவர்கள், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுடைய வசதிக்காக மினி பஸ் விட ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருக்கிறார். அவர் போட்ட திட்டங்கள் ஒவ்வொன்றாகச் செயல்படுத்தப்படுகின்றன.

மீண்டும் அவரே வேட்பாளராக நின்று வெற்றிபெற வேண்டும். அதனால் மக்களுக்கு மேலும் பல நன்மைகள் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அம்பத்தூர்

டி. விஜயா.

ஜப்பானில் 'டோயோட்டா' கார் தொழிற்சாலையில் மனித வாசனையே யின்றி அனைத்து வேலைகளையும் இயந்திர மனிதர்களே செய்யும் விந்தைக் காட்சியைக் காணலாம். ஒவ்வொரு பாகத்தையும் மிகச்சிறிய நட்டு, போல்டுகளையும் கூட இயந்திர மனிதர்களே முடுக்கிக் கார்களை உருவாக்குகின்றனர். செய்ய மட்டுமே மேற்பார்வை மனிதர்கள்! -எல். விஜயாசீனிவாசன்



நான் விரும்பும் வேட்பாளர்



கட்சி சார்பற்ற மஹாலக்ஷ்மி

தண்ணீர் வரவில்லையா? சாக்கடை தேங்கியிருக்கிறதா? தெரு விளக்குகள் எரியவில்லையா? வீடு மாற்றும்போது சாமான்கள் இறக்குவதில் தகராறு? கோவை டாடா பேடு மேற்குப் பகுதி மக்கள் உடனே திருமதி மஹாலட்சுமி சுப்பிரமணியத்திடம்தான் முறையிடுவர்.

இவர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரில்லை. ஏழை பணக்காரர் பாகுபாடின்றி சுயநலமே சிறிதும் இன்றி கார்ப்பரேஷன் அதிகாரிகளிடமும் மந்திரிகளிடமும் இந்த டாடாபேடு பகுதி முன்னேற்றம் இல்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி இந்தப் பகுதி முன்னேற்றத்துக்கு அயராது பாடுபடுகிறார்.

இவருடைய கணவர் பெரிய பொறியாளர். அவர் தலைமையில் நூறுக்கும்மேற்பட்ட பொறியாளர்கள் வேலை செய்வது உண்மை. எனினும் திருமதி மஹாலட்சுமி சுப்பிரமணியம் வரட்டு கவுரவம், ஜம்பம் ஏதுமின்றி துப்புரவுத் துறை பணியாளர்களிடமும் கூட எளிமையாக, இனிமையாகப் பேசி எங்கள் பகுதி சுத்தமாக இருக்கப் பாடுபடுகிறார்.


இங்குள்ள சுமார் ஆயிரம் பேர்கள் அடங்கிய குடிசைப் பகுதி மக்கள் எந்த வித அடிப்படை வசதியும் இன்றிப் பல வருடங்களாகக் கஷ்டப்படுவதை, எந்தக் கட்சியும் அவர்களுக்கு நிரந்தரமான வீட்டு வசதிக்குப் பாடுபடாத நிலையைக் குறிப்பிட்டு, குடிசைப் பகுதி மக்களுக்குச் சுகாதார வசதியுடன் வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று அமைச்சர்களிடமும், கலெக்டரிடமும் குடிசை மாற்று வாரியத் தலைவி அவர்களிடமும் முறையிட்டிருக்கிறார்.

டாடாபேடு குடியிருப்போர் நல சங்கத்துப் பொருளாளர், வித்யாவிகாசினி பள்ளியின் கமிட்டி அங்கத்தினர், மாதர் சங்கச் செயலாளர் போன்ற பல பொறுப்புக்களில் இருக்கும் திருமதி மஹாலட்சுமி சுப்ரமண்யம் சிண்டிகேட் வங்கியில் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார். கல்லூரியில் பயிலும்போது மாணவியர் தலைவியாகவும் என்.ஸி.ஸி அண்டர் ஆபீஸராகவும் இருந்து, டெல்லியிலும், கோவையிலும் சிறப்பு விருதுகள் பெற்று இருக்கிறார். கோவை வானொலியில், 'கோவை நகரை அழகு படுத்த' பல யோசனைகள் கூறியுள்ளார்.

இவர் தேர்தலில் நின்று வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று நாங்கள் நினைத்தாலும், இவர் தான் குடும்பத் தலைவியாகவும் சமூக சேவியாகவும் இருக்கவே விரும்புகிறார். திருமதி மஹாலக்ஷ்மி இந்தப் பகுதியை அரசாங்க அதிகாரிகளின் உதவியோடு மேலும் முன்னேற்றம் அடையச் செய்வார் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. எல்லோரிடமும் எளிமையாகப் பழகுவது, உடனே உதவி செய்வது என்ற இரு இனிமையான குணங்கள் என்றும் மாறாமல் இருப்பது எங்கள் பாக்கியம்.

கோவை-12

குமாரி கே. ராதா



நவம்பர் மாதம் தேர்ந்தெடுக்கப்படும் அமெரிக்க ஜனாதிபதி இரண்டு மாதங்கள் காத்திருந்து ஜனவரியில் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் என்ன?

நூறு வருடங்களுக்கு முன்னர் போக்குவரத்து வசதிகள் பெருகாத போது அமெரிக்காவின் எந்த ஒரு மாநிலத்தில் இருந்தாவது தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி கோச் வண்டியில் தான் வாஷிங்டனுக்கு வந்து பதவி ஏற்க வேண்டும். இதற்குக் குறைந்தது ஒரு மாதமாகும். எனவேதான் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் இருந்து பதவி ஏற்பது வரை இரண்டு மாத காலம் இடைவெளி வைத்திருந்தனர்.

—எஸ். முகம்மது யூசுப்

யக்ஷகானம்

கர்நாடக மாநிலத்தில் மக்கள் கலையாக விளங்குகிறது யக்ஷ கானம். விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள் சிலர் சில மாதங்களில் கலைஞர்களாக உருவெடுப்பார்கள். மழைக் காலம் முடிந்த பிறகு ஓய்வான மாதங்களில் இவர்கள் ஊர் ஊராகச் சென்று நாடகங்களை நடத்தி மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவார்கள். இதுவே யக்ஷ கானத்தின் தனிப் பெரும் சிறப்பு.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பாக யக்ஷ கானம் ஆடப்பட்டு வந்திருக்கிறது. அதற்கும் முன்பாக யக்ஷகானம் என்ற இசை வடிவம் இருந்திருக்கிறது. அதிலிருந்து இந்த நாடக வடிவம் வளர்ந்திருக்கக் கூடும்.

வீர ரசமே பிரதானமாக உடைய இந்த நாடகங்களில் மகா வீரர்களுடைய மனத் திண்மையும் அவர்கள் புரிந்த யுத்தமும் தர்ம வீரனுடைய வெற்றியுமே முக்கியமாக நடித்துக் காட்டப்படுகின்றன.

யக்ஷ கானத்தின் அபிமன்யு வதத்தைப் பார்த்தவர்களுக்கு அது ஒரு மறக்க முடியாத அனுபவம். வீரமும் அதன் மறுபுறமான சோகமும் யக்ஷ கானத்தில் எடுத்துக் காட்டப்படுவது போல வேறு எந்த நாட்டிய வடிவிலும் காண முடியாது.

பாலன் அபிமன்யு தன் அன்னையிடம் விடை பெற்றுச் செல்லும்போதே ரசிகர்களின் மனம் உருகிவிடும். சக்கர வியூகத்தைப் பிளந்து அபிமன்யு முன்னேறுவதையும் அவனுடைய பராக்கிரமத்தையும் மிக அழகாக நடித்துக் காட்டுவார்கள். பிறகு அவன் தனியாகப் போரிடும்பொழுது மகாரதர்கள் பலர் கூடி அவனை வதம் செய்வதையும், அதன் பிறகு அவர்களே பொறுக்க முடியாத அவமானமும்துக்கமும் அடைந்ததையும்ஏழெட்டு நடிகர்கள் தங்கள் நடையின் மூலமே காட்டி விடுவார்கள். அந்த சோக இசையும், விளம்ப கதியும், குனிந்த தலையோடு அவர்கள் நடையும் நம்மை அப்படியே உலுக்கி விடும்.

யக்ஷ கானத்தில் ஆகாரிய அபிநயம் என்று கூறப்படும் உடைகளும், முகப் பூச்சுகளும் தனித் தன்மை வாய்ந்தவை. அரச இலை போன்ற வடிவமுள்ள பெரிய கிரீடங்கள், புஜ கிரீடம் எனப்படும் தோள் அணி முதலியவை மிகவும் சாமர்த்தியமாகச் செய்து அணியப்படுகின்றன. கறுப்பும், சிவப்பும் பொன்னிறத்தோடு சேரும்போது பாத்திரங்களுக்கு ஓர் அமானுஷ்ய தோற்றத்தைக் கொடுக்கின்றன. கிரீடத்தைப் பார்த்த உடனேயே என்ன விதமான பாத்திரம் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

ராவணன் போன்ற ராக்ஷஸர்களுடைய வேஷமும் அவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டமும் பிரமாதமாக இருக்கும். இரவு முழுவதும் நடக்கும் யக்ஷ கானத்தில் இரவு ஒரு மணிக்குமேல் — சபையோர் சற்றுக்கண்ணயர்கிற நேரத்தில் — ராக்ஷஸ வேஷதாரிகள் தோன்றிச் சபை கலகலக்கும்படி செய்து விடுவார்கள்.

சோகமும் வீரமும் பிரதானமானாலும் சிருங்காரமும் ஹாஸ்யமும் கட்டாயம் உண்டு. ஆண் மக்களே முழுவதும் நடிக்கும் இந்த நாடகக் கலையில் சம்பாஷணைகளும் உண்டு. நாடக பாத்திரங்களும் பாகவதரும்கூடப் பேசிக் கொள்வார்கள். அந்த சம்பாஷணையில் நகைச் சுவையோடு பல உயர்ந்த கருத்துக்களும் இடம் பெறும்.

யக்ஷ கானத்தின் இசை வடிவம் கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம், கிராமிய இசை மூன்றும் கலந்த ஓர் அலாதி இசை வடிவமாகத் திகழ்கிறது. உணர்ச்சிகளை மிக நன்றாக எடுத்துக் காட்டுகிறது இந்த இசை.

யக்ஷ கான நாடகத்தை ஒரு பிரார்த்தனையாகச் செலுத்தும் வழக்கம் இன்றும் நிலவுகிறது. தீய சக்திகளையும் உற்பாதங்களையும் விலக்கும் சக்தி யக்ஷ கானத்துக்கு உண்டு என்று கர்நாடக மாநில மக்கள் நம்புகின்றனர். உடம்பு சரியானால் யக்ஷ கானம் நடத்துவதாக வேண்டிக் கொள்வார்கள். அவ்வளவு தூரம் வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்தது இந்தக் கலை.

சின்னஞ் சிறு கிராமங்களில் வசிக்கும் பாமர மக்களுக்கு ஒரு மகிழ்ச்சி யளிக்கும் பொழுது போக்காகவும், நல்லறிவு, தர்ம சிந்தனைகளை வளர்க்கும் சாதனமாகவும் விளங்கிய இந்தக் கலை ஆதரிப்பார் இல்லாமையால் மறைந்துபோகும் நிலையில் இருந்தது. நல்லவேளையாக சமீப காலத்தில் இந்தக் கலைக்கு ஞான பீடப் பரிசு பெற்றவரான டாக்டர் சிவராம் காரந்த் புத்துயிர் கொடுத்திருக்கிறார். உடுப்பியில் சிறுவர் பலருக்கு இந்தக் கலையைப் பயில்விக்க யக்ஷ கான கேந்திரத்தை நிறுவியிருக்கிறார். மத்திய, மாநில அரசுகளின் உதவியோடு இந்தக் கேந்திரம் நடந்து வருகிறது.

—ஆனந்தி

வண்ணப்படம்: ஓம். சுப்பிரமணியம்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



REGISTERED No. M.
Registered as a Newspaper in Sri Lanka

